

முன்னேற்றத்தை

நோக்கிய பயணம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (HDFC Bank)

ஆண்டறிக்கை 2018

HDFC BANK
The Bank for your Home

உள்ளடக்கம்

இந்த அறிக்கைக்கான அறிமுகம் / 02

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி பற்றி
எமது தொலைநோக்கு, பணி மற்றும் எமது விழுமியங்கள் / 03
எமது கதை / 04
எமது வியாபார மாதிரி / 06
நிறுவனத்தினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் வகைகள் / 08
வலையமைப்பு வரைபடம் / 10

2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் மீளாய்வு
நிதிச் சிறப்பம்சங்கள் / 12
தலைவரின் செய்தி / 14
பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு / 18
2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மூலதன மாற்றல்கள் / 23
நிதி மீளாய்வு / 24
மனிதவள மூலதனம் / 28
சமூக மூலதனம் / 30
இடர் முகாமைத்துவ அறிக்கை / 34

ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்
இணக்கம் தொடர்பான தலைவரின் கூற்று / 40
இணக்க மீளாய்வு / 41
ஆளுகை மற்றும் நெறிமுறைகள் / 68
பணிப்பாளர்களின் அறிக்கை / 72
உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளரின்கூற்று / 77
உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை / 78
பெருநிறுவன ஆளுகை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை / 80
சபை உபகுழு அறிக்கைகள் / 81
பணிப்பாளர் சபை / 88
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றய விபரங்கள் / 90
பெருநிறுவன முகாமைத்துவம் / 94
பெருநிறுவன முகாமைத்துவம் பற்றிய விபரங்கள் / 96
பிரித் தலைவர்கள் / 98
பிராந்திய முகாமையாளர்கள் / 100
கிளை முகாமையாளர்கள் / 101

நிதி அறிக்கைகள்
நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பு / 104
கண்காய்வாளரின் அறிக்கை / 105
வருமானக் கூற்று / 110
விரிவான வருமானக் கூற்று / 111
நிதி நிலைமைக் கூற்று / 112
பங்குமூலதன மாற்றங்களுக்கான கூற்று / 113
காசுப் பாய்ச்சல் கூற்று / 114
கணக்கீட்டுக் கொள்கைகள் / 115
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் / 126
நிதி உபகரணங்களின் அளவீடு / 150
மூலதன ஏற்ற இறக்கம் / 152
ஐந்தொகை வெளிப்பாடு மீதான இடர் சீராக்கங்கள் - ரூபா. 000′ / 153
தகவல் பகிர்வு / 155
சேர்பெறுமதி வரிக் கூற்று / 158
பத்து வருட புள்ளிவிபரவியல் சுருக்கம் / 159
பெருநிறுவனத் தகவல்கள் / 160
ஆண்டுப்பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் / 161
புரொக்ஸிப் படிவம் / 163

முன்னேற்றத்தை நோக்கிய பயணம்

சுயபரிசோதனைக்குரிய ஒரு வருடமாகவிருந்து, அதன் மூலமாக, எமது பயணத்தின் சிறப்பம்சங்களாக ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சிக்கு முக்கியத்துவளிக்கப்பட்டதொரு காலப்பகுதியாகும். நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு வாக்குறுதியளித்துள்ள விழுமியத்தின் மீது எமது குழு மற்றும் வாடிக்கையாளருக்கு நன்மையளிக்கக் கூடிய புத்தாக்கத்துடன் கூடிய பிரதான செய்முறைகளை வலுப்படுத்தக்கூடிய புதுப்பிக்கப்பட்ட வணிக மாதிரி உள்ளடங்கலான பல நேர்மறையான மாற்றங்கள் கம்பனியில் ஏற்பட்டன. நாம் வெற்றியடைவதற்கு உதவக் கூடிய நன்றாக வரையறுக்கப்பட்ட தந்திரோபாயங்களுடன் கூடிய எமது தொலைநோக்கினை வழிப்படுத்திய தலைமைத்துவப் பாத்திரங்களில் ஏற்பட்ட மாற்றமானது இந்த முன்னோக்கினை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியது...

இவையனைத்தும் மற்றும் மேலும் பல காரணிகளும் எம்மை முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கச் செய்தது.

HDFC BANK
The Bank for your Home

இவ்வறிக்கைக்கான அறிமுகம்

2018 ஆம் ஆண்டில் சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கவுன்சிலினது (International Integrated Reporting Council) ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு 2013 (Integrated Reporting Framework) இனை அடிப்படையாகக் கொண்டு அதனது அறிக்கையிடலை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது (HDFC Bank) தொடர்ந்தும் மேற்கொள்வதுடன் 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய நிதியில் மற்றும் ஏனைய பிரதான தலைப்புக்களை உள்ளடக்கியுள்ளது. இவ்வறிக்கையானது கொழுப்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஏனைய பொருத்தமான ஒழுங்குவிதிகளின் வெளிப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. வங்கியானது முன்னைய வருட அறிக்கையிலிருந்து எந்தவொரு தகவலையும் மீள் கூற்றிட வேண்டி ஏற்படவில்லை.

இவ்வறிக்கையைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான அடிப்படை

தந்திரோபாய மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் மீளாய்வாண்டின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புக்களை அடையாளப்படுத்தல் இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கான அடிப்படையாகும். வெளிப்படுத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புக்கள் தலைவரின் வழிகாட்டலின் கீழ் உயர் முகாமைத்துவத்தினால் தெரிவுசெய்யப்பட்டது. பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் (GM/CEO), உள்ளடங்கலான பிரதான முகாமைத்துவ ஆளணியினர், முக்கியத்துவத்தினடிப்படையில் 2018 ஆம் ஆண்டறிக்கை, வங்கியின் இடர் விபரங்களில் மாற்றங்கள் மற்றும் நல்லாட்சி மற்றும் இணக்கத் தேவைப்பாடுகளை மீளாய்வு செய்வதில் ஈடுபட்டனர்.

இவ்வறிக்கையானது வெளிப்பாடுகளைத் தீர்மானிப்பதில் அக்கறையுள்ளோரின் எதிர்பார்ப்புக்கள மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் (பிரயோகிக்கப்படக்கூடிய சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக) ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்புத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டுள்ளது. அது தொடர்பில், தலைவரின் செய்தி மற்றும் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு ஆகியன வங்கியின் தற்போதைய நிலைமை தொடர்பிலான மிகவும் முக்கியமான தந்திரோபாயத் தலைப்புக்களைச் குறிப்பிட்டுக் காட்டுவதுடன் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் ஆகிய இருவருமே அவர்களது கூற்றுக்களில் வளர்ச்சித் தந்திரோபாயம் மற்றும் வளப் பகிர்ந்து பற்றிக் கலந்துரையாடுகின்றனர்

இவ்வறிக்கையைத் தயாரிப்பதில் அக்கறையுள்ளோரின் பங்கு

அக்கறையுள்ளோர் பற்றிய ஆய்வானது நடாத்தப்படாத போதிலும், இவ்வறிக்கையானது, பிரதான அக்கறையுள்ளோரின் முக்கிய எதிர்பார்ப்புக்களைக் கருத்திற்கொண்டுள்ளது.

தலைவரின் செய்தி மற்றும் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு என்பவற்றில் மீளாய்வாண்டில் பிரதான அக்கறையுள்ளோரின் எதிர்பார்ப்புக்களை எவ்வாறு வங்கியானது நிறைவேற்றியுள்ளது மற்றும் எவ்வாறு அதனைத் தெடரவுள்ளது என்பது கலந்துரையாடப்பட வேண்டும். (இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால நோக்குடைய அறிக்கைகள் மாற்றத்திற்குட்பட முடியும்.)

ஆண்டறிக்கையானது ஒரு முக்கியமான அக்கறையுள்ளோருடனான தொடர்பாடல் கருவியாகவிருப்பதால், இவ்வறிக்கையானது சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

அதற்கு மேலதிகமாக, இவ்வறிக்கையின் பிரதிகள் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்படுவதுடன் இலகுவாக அணுகுவதற்காக எமது இணையத்தளமாகிய (www.hdfc.lk) இல் பதிவேற்றம் செய்யப்படும்.


ஒருங்கிணைந்த அறிக்கையிடல் எண்ணக்கருக்களுடன் இணங்குதல்

நிதிக் கூற்றுக்களும் ஆண்டறிக்கையும் இலங்கைக் கணக்காய்வாளர் நாயகத்தினால் துல்லியமாகச் சரிபார்க்கப்பட்டதுடன் தகவல்களின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உரிய சிரேட்ட முகாமையாளர்களால் ஏனைய அளவு மற்றும் தரநிலைத் தகவல்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வெளிப்படுத்துவதற்கான பிரதான தலைப்புக்களை அடையாளங் காண்பதனூடாக, நாம் மீளாய்வாண்டிற்காக, மிகவும் முக்கியமான விடயங்களில் கவனஞ் செலுத்துவதும் தொடர்புடையதும் முழுமையானதுமான ஆனால் சுருக்கமான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதற்கு முயற்சி செய்துள்ளோம்.

அதற்கு மேலதிகமாக, இவ்வறிக்கையைத் தொகுப்பதில் தலைவர், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேட்ட முகாமைத்துவத்தின் நேரடித் தலையீட்டினூடாக நாம் தந்திரோபாயமிக்க எதிர்கால நோக்குடைய விம்பமொன்றைத் தோற்றுவிக்க முயற்சி செய்துள்ளோம்.

இவ்வாண்டறிக்கை தொடர்பான பின்னூட்டல்கள்:
பிரதம நிதி அலுவலர்
திரு. டீ. விதானபதிரண
மின்னஞ்சல்: cfo@hdfc.lk
தொலைபேசி: : +9411 235 6802/ 9411 235 6829



எமது தொலைநோக்கு

“இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதித் துறையில் சந்தைத் தலைவராதல்”

எமது செயற்பணிகள்

நாம் எமது செயற்பணிகளைப் பரந்துபட்ட பங்குதாரர், வாடிக்கையாளர்கள், பணியாட்டொகுதியினர், தேசிய பொருளாதாரம், ஒழுங்குபடுத்துவோர் மற்றும் இயற்கைச் சூழலிற்கு வரையறுக்கின்றோம்.


- எமது பங்குதாரருக்கான எமது செயற்பணியாவது அவர்களினது வருமானத்தினை உச்சப்படுத்துவதாகும்.
- எமது வாடிக்கையாளர்களுக்கான எமது செயற்பணியாவது அவர்களது தேவையை நிறைவேற்றும் வகையில் ஒரு அக்கறை மிகுந்த சேவையினை வழங்குவதுடன் அவர்களது எதிர்பார்ப்புக்களை விஞ்சும் வகையில் அவர்களை புத்தாக்கரீதியாக திருப்திப்படுத்தல்.
- எமது பணியாட்டொகுதியினருக்கான எமது செயற்பணியாவது அவர்களது பன்முகப்பட்ட திறமைகளை அடையாளங்கண்டு, அபிவிருத்தி செய்து, ஊக்குவித்து, அங்கீகரித்து வெகுமதி வழங்குவதனூடாக நிறுவனம்சார் மற்றும் தேசிய வீடமைப்புத் தொலைநோக்கினை அடைதல்
- தேசிய பொருளாதாரம் மற்றும் தொழில்துறை ஒழுங்குபடுத்துவோனுக்கு, தேசிய வீடமைப்புக் கொள்கையினைச் சீரமைத்து நிதியளிப்பதில் நாம் பிரதான வழிநடாத்துவோராகவும் சிந்தனை முன்னோடிகளாகவும் உள்ளோம்.
- எமது தேசிய சுற்றாடலுக்காக, எமது சகல நடவடிக்கைகளிலும் நிலைபேறான நடைமுறைகளை நாம் நடைமுறைப்படுத்துகின்றோம்.

எமது விழுமியங்கள்

எமது நிறுவனக் கலாசாரத்தைப் போசிப்பதும் மனோபாவங்களையும் எமது ஊழியர்களது நடத்தையினைச் சீரமைப்பதுமே எமது விழுமியங்களாகும். ஆகையால், நாம் அதனை முக்கியமானதொன்றாகக் கருதுவதால், விழுமியங்கள் பற்றி எமது ஊழியர்களுக்குத் தெளிவாக விளக்கியுள்ளதுடன், தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்கையில், தீர்மானமெடுக்கும் போது, நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் வெளிவாரியான அக்கறையுள்ளோரைக் கையாளுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் விழுமியங்களுக்கு மதிக்கப்பளிக்கப்படும்.

- சகல கொடுக்கல் வாங்கல்களிலும் சகல சந்தர்ப்பங்களிலும் நேர்மையைக் கடைப்பிடித்தல்
- சந்தைச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான நெகிழ்ச்சி மற்றும் இயலுமை
- எப்போதும் நட்பு மிகுந்ததும் உதவியளிப்பதுமான சேவைகளை வழங்குதல்
- எமது தொலைநோக்கினை அடைவதற்கு திறன்கள், அறிவு மற்றும் அனுபவத்தைக் கட்டியெழுப்புதல்

எமது கதை



1997

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டமானது வீடமைப்புடன் தொடர்புடைய நிதிச் சேவைகளை வழங்குவதற்கும் பொதுமக்கள் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்குமான அதிகாரங்களுடன் கூடியதொரு பொதுக் கூட்டுத்தாபனத்தை உருவாக்குவதற்காகப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

1984

தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் இதுவொரு கட்டட நிருமாணச் சங்கமாகக் கூட்டிணைக்கப்பட்டது.

2000

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது, ஆகையால், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது சட்டபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

HDFC (இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி) ஆனது 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தப்பட்ட) அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்புத் தேர்ச்சி பெற்ற வங்கியாகியது. வீடமைப்பு நிதித் துறையில் நிபுணத்துவம் பெற்ற வங்கி என்ற வகையில், நாட்டிலுள்ள கீழ்மட்ட சமுதாயங்களுக்கு வீடமைப்புடன் தொடர்புடைய நிதி உதவியை வழங்குவதில் எமக்கு மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான கால வரலாறு உள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் வங்கியானது வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைப் பரப்பினை பன்முகப்படுத்துதல் மற்றும் புதிய சந்தைத் துண்டங்களில் நுழைதல் போன்றவை மூலமாக ஒரு பன்முகப்படுத்தல் தந்திரோபாயத்தினைப் பின்பற்றி வருகின்றது.

உடைமை

2018 ஆம் ஆண்டின் இறுதியில், அரச நிறுவனங்கள், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் (HDFC) 51% ஆன உடைமையையும் தனியார் கம்பனிகள் 49மூ ஆன உடைமையையும் கொண்டுள்ளன. மேலதிக பெருநிறுவன தகவல்களுக்கு இவ்வறிக்கையின் பின்பக்க அட்டையின் உட்புறத்தைத் தயவுசெய்து பார்க்கவும்.

2003

ஒரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற வங்கியை உருவாக்குவதற்காக, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டமானது திருத்தப்பட்டது. பெயரானது □இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி□ என மாற்றப்பட்டது (இதனகத்துப் பின்னர் □இலங்கை வீஅநிகூ வங்கி□ என அழைக்கப்படும்).



2012

பொருள் மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது.

2005

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் பட்டியற்படுத்தப்பட்டமையால், தனியார் துறை முதலீடுகள் வங்கியில் மேற்கொள்ளப்பட்டன.

2011

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்ட அத்தகைய வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் வியாபாரச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக மேலும் திருத்தப்பட்டது.


எமது வியாபார மாதிரி

எமது தொலைநோக்கு

□இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதித் துறையில் சந்தைத் தலைவராதல்□

செயற்பணிகள்

நாம் எமது தொலைநோக்கினைப் பரந்துபட்ட பங்குதாரர், வாடிக்கையாளர்கள், பணியாட்டொகுதியினர், தேசிய பொருளாதாரம், ஒழுங்குபடுத்துவோர் மற்றும் இயற்கைச் சூழலிற்கு வரையறுக்கின்றோம்.



பிரதான நடவடிக்கைகள்

வீடமைப்பு நிதி
குத்தகை
அடகு வைத்தல்
வைப்புக்கள்
வியாபாரக் கடன்கள்
அபிவிருத்திக் கடன்கள்

வாடிக்கையாளர் துண்டங்கள்

பிரமிட்டின் கீழ்மட்டம்
தொழில்வாண்மையாளர்கள்
அரசதுறை அலுவலர்கள்
ஓய்வூதியம் பெறுவோர்
சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள்
நுண் தொழில்முனைவோர்

ஊடகங்கள்

நடமாடும் வங்கியாளர்கள்
தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM)
கிளைகள்

பிரதான பங்காளர்கள்

அரச முகவராண்மைகள்

நிதி மூலதனம்

எமது பிரதான நிதி மூலமானது பொதுமக்கள் வைப்புக்களாகும். அதற்கு மேலதிகமாக, எம்மிடம் பங்கு மற்றும் கடன் மூலதனமுள்ளது. எமது வருமானங்கள் பின்வரும் வழிகளில் கிடைக்கப் பெறுகின்றன.

- வட்டி வருமானம்
- வட்டியல்லாத வருமானம்
- முதலீட்டு வருமானம்
- கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானம்

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) புகழ் பெற்றதும் எமது வாடிக்கையாளரால் நம்பப்படுவதுமானதொரு வியாபாரக்குறியாகும்.

இந்த நன்மதிப்பானது, வருடகாலமாகக் கட்டியெழுப்பப்பட்டதொரு கணக்கிட முடியாத சொத்தாகும்.

விழுமியங்கள்

எமது நிறுவனக் கலாசாரத்தைப் போசிப்பதும் மனோபாவங்களையும் எமது ஊழியர்களது நடத்தையினைச் சீரமைப்பதுமே எமது விழுமியங்களாகும். ஆகையால், நாம் அதனை முக்கியமானதொன்றாகக் கருதுவதால், விழுமியங்கள் பற்றி எமது ஊழியர்களுக்குத் தெளிவாக விளக்கியுள்ளதுடன், தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்கையில், தீர்மானமெடுக்கும் போது, நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் வெளிவாரியான அக்கறையுள்ளோரைக் கையாளுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் விழுமியங்களுக்கு மதிக்கப்பளிக்கப்படும்.

2018 ஆம் நிதியாண்டில் வங்கியின் செயற்பாட்டு அம்சங்களில் நீண்டதூரம் செல்லும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தமை மூலமாக எமது வியாபார மாதிரியானது பலப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கிளைகளுக்கிடையே அதிக ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாட்டுத் திறனை அதிகரிப்பதனை எளிதாக்கும் ஒரு கொத்தணி மாதிரியாக கிளைகளை மீள் ஒழுங்குபடுத்துதலும் உள்ளடங்கும். மேலும் சிறந்த கடன் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளவும், கடன் வழங்குதல் நடவடிக்கைகள் மீது மேலும் கடுமையான கண்காணிப்பினைச் செலுத்துவதற்காகவும் ஒரு மையப்படுத்தப்பட்ட பணம் வழங்கல் முறை மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடன் வழங்குதலுக்கு உதவுவதற்கும், தனிப்பட்டவர்களின் மட்டத்தில் நிலவும் கடன் வழங்குதல் இடரினை மதிப்பீடு செய்வதற்கு வங்கியினை இயலச் செய்வதற்கும், உயர்ந்த கடன் தரம் கொண்ட வாடிக்கையாளர்களை அடையாளங்கண்டு உதவுவதற்கும் ஒரு இடரை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிளை வலையமைப்பு பூராகவும் அதிக உற்பத்தித்திறனை ஊக்குவிப்பதற்காக புதியசெயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் தொகையொன்று அறிமுகப்படுத்தப்பட்டள்ளது. இது பற்றிய மேலதிக தகவல்களுக்கும் ஏனைய செயற்பாட்டு மாற்றங்களுக்கும் பிரதான முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வினைத் தயவுசெய்து பார்க்கவும்.

புதிய சந்தைத் துண்டங்களை இலக்கு வைத்தல் மற்றும் மேலும் தனிப்பயனாக்கப்பட்ட பொருட்களையும் சேவைகளையும் அறிமுகப்படுத்தல் ஆகியன மூலமாக வங்கி அதன் பன்முகப்படுத்தல் தந்திரோபாயத்தில் தொடர்ந்தும் கவனஞ்செலுத்தி வருகின்றது. பொருள் பன்முகப்படுத்தல் தந்திரோபாயம் மூலமாக பாரம்பரிய வீடமைப்பு நிதியியலுக்கு மேலதிகமாக பல பொருட்களினதும் சேவைகளினதும் வரிசையொன்றினை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பொருள் பன்முகப்படுத்தல் தந்திரோபாயமானது புதிய வருமானத் துறைகளைத் திறந்து விடும் அதேவேளை, வங்கியினது இடர் விபரங்களையும் மீள் சமப்படுத்த உதவுகின்றது.

நாங்கள் எவ்வாறு பெறுமதியை உருவாக்கிக் கொள்கின்றோம்

எமது நடமாடும் வங்கியாளர்கள் உங்களது வாழ்க்கை இலகுபடுத்துவதற்காக வங்கியை உங்களது காலடிக்கே கொண்டுவருவார்கள்

காலப்போக்கில் எமது வாடிக்கையாளரிடையே அதிகரித்த வளர்ச்சியை ஏற்படுத்துமுகமாக நீண்டகால உற்வுகளைப் பேணி வர உத்தேசிக்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களைத் தகவலறிந்து தீர்மானங்களை மேற்கொள்பவதற்கு உதவுவதற்கும் அவர்களது வேறுபட்ட தேவைகளுக்கு வேறுபட்ட வங்கியியல் பொருட்களையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துவதற்கும் அவர்களது நிதி அறிவில் முதலீடு செய்கின்றோம்.

நாட்டிற்கான பங்களிப்பு

நாம் வரி என்ற வடிவில் தேசிய அரச வருவாயில் பங்களிப்புச் செய்கின்றோம்.

நாம் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு நோக்கங்களுக்கு உதவி செய்வதற்காக கீழ்மட்ட சந்தைகளுக்கு அபிவிருத்திக் கடன்களை வழங்குகின்றோம்.

நாம் நாட்டின் குறைவான வரப்பிரசாதம் கிடைக்கும் பகுதிகளிலுள்ள கீழ் மற்றும் நடுத்தர மட்ட வருமானம் பெறும் சமுதாயத்தினர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நேரடியாக உதவுகின்றோம்.

நாங்கள் முறைசாரா பொருளாதாரத்தை முறைசார் வங்கியினுள் நுழைவதற்கு வழிகாட்டுகின்றோம்.

மனித மூலதனம்

எமது மனிதவள தளத்தில் பயிற்றப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த தலைமையக மற்றும் கிளை ஆளணியினரும் வளர்ந்து வரும் நடமாடும் வங்கியியலாளர் குழுவினரும் அடங்குவர்.

புலமைச் சொத்து

நடுத்தரம் முதல் குறைந்த மட்டம் வரையிலான வருவாய் பெறும் துண்டங்களினது வீடமைப்பு நிதியியல் பற்றிய வருடகால நிறுவனரீதியான அறிவு எமக்குள்ளது. இந்தப் புலமைச் சொத்தானது நவீன தகவல் தொழில்நுட்பத்தினால் ஆதரவளிக்கப்படுகின்றது.

சூழல் பொறுப்பு

பொறுப்பு வாய்ந்த கடன் நடைமுறைகளினூடாக சூழல் ரீதியாகப் பொறுப்பு வாய்ந்த வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நாம் உத்தேசித்துள்ளோம்.

வழங்கப்படும் பொருட்களினதும் சேவைகளினதும் விபரங்கள்

கடன்கள்



கெந்தெல்ல
சொத்தொன்றின் ஆரம்பக் குத்தகைமீதான வீட்டுக்கடன் திட்டம்

சிரம உதான
ஊழியர் சேமலாப நிதி (EPF) உறுப்பினர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி (EPF) மீதியின் மீதான வீட்டுக் கடன்

லைப்ஸ்டைல் லோன்
பெயர்குறித்த வழங்குனர்களிடமிருந்து வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கானது.

சிது செவண
உங்களது வாழ்க்கைப் பாணிக்குப் பொருந்தக்கூடியவாறான பெறுமதி சேர் வீட்டுக் கடன்

Professionals' Loan

தொழில்வாண்மையாளர்களுக்கான கடன்
தகுதிவாய்ந்த தொழில்வாண்மையாளர்களுக்கு வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்படும் கடன்கள்

சிறிசர வீட்டுக்கடன்
தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வழங்கப்படும் ஒரு மேம்படுத்தப்பட்ட வீட்டுக் கடன்

தங்கக் கடன்
உடனடி நிதித் தேவைகளுக்காக தங்கத்தின் பெறுமதியின்மீது வழங்கப்படும் கடன்களாகும்.

Corporate & Development Finance

பெருநிறுவன மற்றும் அபிவிருத்தி நிதி
நிறிய நடுத்தர முயற்சியாண்மைகளுக்கும் (SME) பெருநிறுவனத் துறைகளுக்கும் உதவும் தனித்துவம் வாய்ந்த கடன் திட்டங்களாகும்.

சேமிப்புக்கள்



பிரதிலாப
நாடளாவிய தன்னியக்க டெலர் வலையமைப்பு மற்றும் இணைய வங்கி வசதிகள் மற்றும் நடமாடும் வங்கிச் சேவைகள் மூலம் காசு மீளப்பெறுதல் வசதிகொண்ட விசேட நன்மைகளுடன் கூடிய வழக்கமான சேமிப்புக் கணக்காகும்.

விஷ்ராம ரெகவரணய
ஒரு நெகிழ்வுத்தன்மை வாய்ந்த வைப்புத் தெரிவு மற்றும் சந்தையில் நிலவும் இயலுமானளவு அதிகபட்ச வட்டிவீதத்தைக் கொண்ட தோற்கடிக்க முடியாத நன்மைகளுடன் கூடியதொரு ஓய்வூதியத் திட்டமாகும்.

செட் போ லைப்
இளைஞர்களுக்கு அவர்களது எதிர்காலத்தைத் திட்டமிட உதவும் தனித்துவம் வாய்ந்த செல்வத்தை உருவாக்கும் திட்டமாகும். செட் போ லைபானது □சந்தைக்கு மேலால்□ வருவாய் உழைக்கின்ற வட்டி உழைப்பு வீதமானது சந்தையில் நிலவும் வைப்பு வீதத்தை விட அதிகமானதாகும்.

அரும்பு
திலின ரெகவரணய விற்கு ஒப்பான பண்புகள் கொண்டு விசேடமாகத் தமிழ் பேசும் சமூகத்தினருக்காக வடிவமைக்கப்பட்ட முதலாவது நிதிச் சேவையாகும்.


விஷ்ராம உதான
சந்தையில் நிலவும் வட்டி வீதங்களை விட அதிக வட்டி வீதங்களை உழைப்பதற்காக சிரேட் பிரஜைகளுக்கான ஒரு நிலையான வைப்புத் திட்டமாகும்.

திலிண
அதிகரிக்கும் சேமிப்பு மீதியின் மீது, கவர்ச்சிகரமான வெகுமதித் திட்டத்துடன் கூடிய சிறுவர் சேமிப்புக் கணக்காகும்.

சிறி ரத்னாபிமானி
கணக்கு வைத்திருப்பவரையும் அவரது குடும்பத்தையும் ஓய்வூதியம் பெற முன்னரும் ஓய்வூதியம் பெற்ற பின்னரும் பாதுகாப்பதற்காக தனித்துவமிக்கரீதியில் உருவாக்கப்பட்ட காப்புறுதியினால் பாதுகாக்கப்படும் ஓய்வூதியத் திட்டமாகும்.

ஸ்மார்ட் கோல்ஸ் (Smart Goals)
ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தில் அவர்களது எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்ள விரும்புவர்களுக்கு மிகவும் பொருத்தமானதொரு வைப்புத் திட்டமாகும்.

வலையமைப்பு வரைபடம்



கிளை வலையமைப்பு

- கொழும்பு
- ஹோமாகம
- ஹெரரண
- ஹைட்பார்க்
- நுகேகொடை
- பிலியந்தலை
- அவிஸ்ஸாவளை
- கம்பஹா
- ஜாஎலை
- கிரிபத்கொடை
- நிட்டம்புவ
- பேலியகொடை
- பதுளை
- மொனராகலை
- திஸ்ஸமஹராமை
- இரத்தினபுரி
- அம்பாறை
- மட்டக்களப்பு
- நுவரெலியா
- களுத்துறை
- அம்பலாங்கொடை
- காலி
- மாத்தறை
- தங்காலை
- எம்பிலிபிடிய
- யாழ்ப்பாணம்
- வவுனியா
- சிலாபம்
- குளியாபிட்டிய
- நிகவரடிய
- அனுராதபுரம்
- பொலந்நறுவை
- திருகோணமலை
- தம்புள்ளை
- கேகாலை
- மாத்தளை
- குருணாகல்
- கண்டி
- கம்பளை


எமது
எதிர்காலத்திற்கான
தொலைநோக்குடைய
திட்டத்தினூடாக புதிய
பொருட்களையும்
சேவைகளையும்
அறிமுகப்படுத்துவதனை
நோக்கி




நிதிச் சிறப்பம்சங்கள்

	2018 இ.ரூ. மில்லியன்களில்	2017 இ.ரூ. மில்லியன்களில்	மாற்றம் %
வருடாந்த பெறுபேறு			
வருமானம்	7,120	6,978	2
வரிக்கு முன்னரான இலாபம்	919	821	12
வரி ஒதுக்கம்	354	407	(13)
வரிக்குப் பின்னரான இலாபம்	564	414	36
அரசாங்கத்திற்கான வருமானம்	359	412	(13)
வருட இறுதியில்			
பங்குதாரர்களின் நிதி	4,757	4,232	12
வாடிக்கையாளர்களிடமிருந்தான நிதி	37,016	36,655	1
மொத்தக் கடன்களும் வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களும்	38,812	35,735	9
மொத்த சொத்துக்கள்	49,285	49,724	(1)
சாதாரண பங்கொன்று தொடர்பான தகவல்கள்			
வருவாய் (அடிப்படை) (ரூபாய்)	8.72	6.40	36
நிதி விகிதங்கள்			
சாரதாரண பங்காளர் நிதி மீதான திரும்பல் (%)	12.56	10.29	22
சராசரி சொத்து மீதான திரும்பல் (%)	1.14	0.87	31
மொத்தச் சொத்துக்களுகான பங்குதாரரின் சமபங்குகள் (%)	9.65	8.51	13
நிலையான விகிதங்கள்			
திரவச் சொத்துக்கள் (%)	20.56	27.58	(25)
பொதுவான சமபங்கு நிலை 1- குறைந்தபட்சம் தேவையானது- 6.37%	16.41%	13.52	
மொத்த நிலை I (%)- குறைந்தபட்சம் தேவையானது- 7.87 %	16.41%	13.52	
மொத்த மூலதனம் (%)- குறைந்தபட்சம் தேவையானது- 11.87 %	16.41%	13.52	
ஏனைய தகவல்கள்			
கிளைகள்	39	39	-
ஊழியர்கள் (பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை)	561	567	(1)
கடன் தரப்படுத்தல் - பிட்ச் தரப்படுத்தல் (லங்கா)	BB+(lka)	BBB-(lka)	


வருமானம்



வரிக்கு முன்னரானதும் வரிக்குப் பின்னரானதுமான இலாபம்




கடன் முற்பணங்களும் வைப்புக்களும்



வரிக்கு முன்னரான இலாபம்

ரூபா. 918 மில்லியன்


சொத்துக்கள் மீதான வருமானமும் பங்களிப்பின் மீதான வருமானமும் ROA & ROE



வீடமைப்புக் கடன்கள்

ரூபா. 38,812 மில்லியன்

மொத்த சொத்துக்கள்



தலைவரின் செய்தி



“வங்கிகளின் அடிப்படைகளானவை உறுதியாக வளருவதுடன் எதிர்கால நிலைபேறான வளர்ச்சிக்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது”

நான் எமது மதிப்பிற்குரிய பங்குதாரர்களுக்கு, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் ஆண்டறிக்கையும் சமர்ப்பிப்பதிலும் மீளாய்வாண்டினுள் உங்களது வங்கியினது நியாயமான சிறந்த செயலாற்றலை அறிவிப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2018 ஆம் ஆண்டானது சில விதிவிலக்கான சவால்களை வழங்கிய போதிலும், உங்கள் வங்கியானது பாராட்டத்தக்க நிதிச் செயலாற்றலைப் பதிவாக்கியுள்ளது என நம்புகின்றேன். நாம் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா. 564 மில்லியன்களை உழைத்த பின்னரே ஆண்டினை முடிவுறுத்துகின்றோம். இது 2017 உடன் ஒப்பிடுகையில் 36% ஆன வளர்ச்சியாகும்.

எமது தந்திரோபாய நோக்கங்களை விளங்கிக் கொள்ளல்

ஆண்டிற்குரிய தந்திரோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதிலும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) செயலாற்றலானது நியாயமாக நன்றாகவுள்ளது என்பதை அறிக்கையிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வருடத்திற்குரிய எமது அடிப்படை நோக்கமாவது மத்திய வங்கியினது குறைந்தபட்ச மூலதனத் தேவையுடன் இணங்குவதாகவிருந்தது. வருட ஆரம்பத்தில், ஆரோக்கியமான மூலதன விகிதங்கள் காணப்பட்ட போதிலும் நாம் நிலை 1 மூலதனத்தை முழுமையான வகையில் குறைவாகவே கொண்டிருந்ததுடன் வங்கியின் பெரும்பான்மையான பங்குதாரர் அரசாங்கமாகவிருப்பதால், நாம் இந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஏற்கனவே நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நாம் பிரதான மூலதனத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி மூலமாக திறைசேரிக்கு வழங்கப்படும் நிரந்தரப் பிணை மூலமாக ரூபா.1.4 பில்லியன்களை உட்புகுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டோம். 2019 ஆம் ஆண்டின் யூன் மாதம் நடுப்பகுதியாகும் போது நாம் நிலை 1 இன் தேவைப்பாடாகிய 5 பில்லியன் ரூபாவினை அடைந்து கொள்ள முடியுமென நாம் நம்புகின்றோம். இந்த பங்கு உட்புகுத்துதலானது

36%

இலாப வளர்ச்சி

வங்கியின் தற்போதைய உடைமைக் கட்டமைப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. அரசாங்கத்தின் உடைமை 51% மற்றும் தனியாரினது 49% உடைமையானது எவ்வித மாற்றமுமின்றி இருக்கும்.

இரண்டாவது தத்நிரோபாய நோக்கமானது அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிரலுடன் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) இணைந்து செயற்படுதலை மேலும் வலுப்படுத்துவதாகும். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமூகங்களுக்கு குறைந்த செலவிலான வீடமைப்புத் தீர்வுகளை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். மலிவு வீடமைப்பு நிதியினை வழங்குவதனூடாக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) இம் முயற்சியைச் செயல் வடிவில் கொண்டு வரும் பிதான நிறுவனமொன்றாகவிருக்க வேண்டுடென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இன்றுவரை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) குறைந்த மற்றும் நடுத்தர வருநாம் பெறும் சனத்தொகையினருக்கு குறைந்த செலவிலான அல்லது சந்தை விலையிலும் குறைவான வீடமைப்பு நிதியினை வழங்கும் இந்த தேசிய நோக்கத்தினை அடைந்து கொள்வதில் சிரமத்திற்கு முகங்கொடுத்து வருகின்றது. இதற்கு குறைந்த செலவிலான நிதிகளை அணுகுவதற்கான வங்கியின் இயலாமையே காரணமாகும். ஒரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற வங்கியென்ற வகையில், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) நடைமுறைக் கணக்கு போன்ற கருவிகளினூடாக குறைந்த

தலைவரின் செய்தி

“புதிய நிதியாண்டாகிய 2019 ஆனது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு (HDFC) ஒரு வளர்ச்சி காணும் வருடமாக அமையும். வங்கியானது போதியளவு மூலதன அளவுகோலுடன் இணங்க முடியுமாகையால், 2017-2020 வரையிலான பெருநிறுவனத் திட்டத்தின் கீழ் வியாபார விரிவாக்கல் திட்டங்களுடன் வங்கியானது முழு வேகத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு இது உதவும”

செலவிலான நிதிகளைக் கட்டியெழுப்ப முடியாது. ஆகையால், குறைந்த செலவிலான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு மாற்றுவழி அரசாங்கம் அல்லது சலுகைக் கடன் வழிமுறைகள் அல்லது சலுகைக் கடன் வழங்கும் முகவராண்மைகள் போன்ற சில வெளிவாரி மூலங்களாகும். நாம் இந்தத் தெரிவுகளை ஏற்கனவே முயன்றுள்ளதுடன் தற்போது நாம் நிலைபேறான நீண்டகாலத் தீர்வொன்றினைத் தேடும் செய்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

2018 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள வங்கியினது தொழிற்சங்கத்துடனான புதியதொரு கூட்டு ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதே மீளாய்வு வருடத்திற்கான மூன்றாவது முன்னுரிமையாகும். மூன்று வருடகால ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதில் ஏற்பட்ட காலதாமதமானது ஊழியப்படையினுள் சில ஊக்குவிக்காத நிலையை ஏற்படுத்தி உற்பத்தித் திறனைக் குறைத்துள்ளது. ஆகையால், 2018 ஆம் மூன்றாம் காலாண்டிற்கு புதியதொரு கூட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதானது, பணியாட்டொகுதியினரின் ஒத்துழைப்பு மற்றும் உற்பத்தித்திறனைத் தெளிவாக மேம்படுத்தியுள்ளது. இது தொடர்பாக, சில முக்கிய விடயங்களில் இணக்கத்தை ஏற்படுத்துவதை இயலச்செய்த தொழிற்சங்கத்தின் நடைமுறைக்கேற்ற மனோபாவத்தினைப் பாராட்டுகின்றேன். முதலாவதாக, 3 வருடகாலமாக பேச்சுவார்த்தை செய்து உடன்பட்ட சம்பள அதிகரிப்பைக் குறைப்பதில் இணக்கம் ஏற்பட்டது. இது வங்கியின் காசுப் பாய்ச்சலினால் தாங்கிக் கொள்ளக் கூடிய சம்பள அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இரண்டாவது பயனுள்ள சாதனையாவது செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவினை அறிமுகப்படுத்தியமையாகும். மூன்றாவது சாதனையாவது, தொழிற்சங்கத்துடன் நடைபெற்ற இணக்கமான பேச்சுவார்த்தைகள் காரணமாக, வங்கியினது NPL விகிதங்கள் முக்கிய செயற்பாட்டு விடயங்களுக்கு முகங்கொடுக்கும் போது ஊழியரின் ஒத்துழைப்பு மேலதிகமாகவும் அதற்கப்பாலும் கிடைத்தமை அதிகரித்ததாகும்.

பங்குதாரரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றல்

வங்கி முகங்கொடுக்கும் உள்ளக மற்றும் வெளியக வரையறை எல்லையினுள், நிதிச் சாதனைகள் என்ற வகையில் 2018 ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) நியாயமாக சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் மேலதிக தகவல்களுக்காக, நான் பிரதான முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு மற்றும் நிதி மூலதன மீளாய்வினைத் தயவுசெய்து பார்க்குமாறு நான் பங்குதாரர்களை வேண்டிக் கொள்கின்றேன். இந்த சூழ்நிலையில், பங்கிலாப வழங்கல் என்ற வடிவில் பங்குதாரர்களுக்கான நிதி உழைப்புக்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்குக் காரணமாவது நிலை 1 தேவைப்பாட்டினை அடையும் வரையில் இலாபங்களை வழங்குவதைக் கட்டுப்படுத்தும் மத்திய வங்கியின் வழிகாட்டலாகும்.

2018 டிசம்பர் மாத முடிவில், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) நிதி ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளதுடன் குறைந்தபட்ச மூலதன அளவாகிய 5 பில்லியன் ரூபாய் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கடன் தீர்ப்பனவு ஆற்றல்களையும் அடைந்துள்ளது. ஆகையால், எதிர்கால நிலைபேறு தொடர்பாக பங்குதாரருக்கு நாம் சிறப்பாகச் சேவையாற்றியுள்ளோம் என நான் நம்புகின்றேன்.

சிறிய நடுத்தர முயற்சியாண்மைகள், விவசாயம் மற்றும் ஏனைய பாதிக்கக் கூடிய பகுதிகள் ஆகியவற்றிற்கு ஆதரவளிப்பதனூடாக முடியுமானவரையில் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு நாம் இணங்கி நடக்கின்றோம். இதனால் வங்கியினால் எமது பிரதான பங்குதாரரகிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியுமாகவுள்ளது.

தந்திரோபாயமும் வள ஒதுக்கீடும்

வங்கியானது போதியளவு மூலதன அளவுகோலுடன் இணங்க முடியுமாகையால், புதிய நிதியாண்டாகிய 2019 ஆனது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு (HDFC) ஒரு வளர்ச்சி காணும் வருடமாக அமையும். வங்கியானது போதியளவு மூலதன அளவுகோலுடன் இணங்க முடியுமாகையால், 2017-2020 வரையிலான பெருநிறுவனத் திட்டத்தின் கீழ் வியாபார விரிவாக்கல் திட்டங்களுடன் வங்கியானது முழு வேகத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு இது உதவும். 2019 ஆம் ஆண்டில், நாம் வங்கியினது 4 வருட தந்திரோபாயத்துடன் இணங்கிச் செல்வதைத் தொடருவதுடன் ஒரு உறுதியான நிதி ஒழுக்கக் கட்டமைப்பினுள் தற்போதுள்ள எமது எல்லா சந்தைத் துண்டங்களிலும் சந்தை ஊடுருவலை மேற்கொள்வதில் தொடர்ந்தும் தீவிரமாகக் கவனம் செலுத்துவோம். ஆகையால், எமது 4 வருட வளர்ச்சித் தந்திரோபாயத்திற்கு இயைபாக மேம்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், புதிய தொழில்நுட்பங்கள், புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பயிற்சியும் அபிவிருத்தியும் ஆகியவற்றிற்கு நாம் ஏற்கனவே வளங்களை ஒதுக்கியுள்ளோம்.

தொழில்நுட்பத் தழுவலானது முக்கிய கவனம் செலுத்தப்படும் ஒரு துறையாகும். வங்கியானது 2017- 18 இல் அடிப்படை வங்கி முறைமையொன்று நடைமுறைப்படுத்தபடும் வரை காலங்கடந்த தகவல்தொழில்நுட்ப முறையில் தங்கியிருந்தது. ஆகையால், முன்னோக்கிச் சென்று, வியாபார அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கு நாம் நவீன சந்தைப்படுத்தல் உபகரணங்கள் மற்றும் திறன்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவோம்.

நாம் ஆளுகை முறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்யவுள்ளோம். மூன்றாவதாக, நிருவாகச் செலவுகளைக் குறைக்கும் அதேவேளை, ஒட்டுமொத்த செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக நாம் நவீன தொழில்நுட்பத்தை வழிப்படுத்துவோம்.

வங்கியின் தந்திரோபாயத்திற்கு இயைபானதாக, எமது சந்தைகள் மற்றும் வாடிக்கையாளர் துண்டங்களும் மாற்றமடைகின்றன. ஆகையால், இந்நோக்கத்திற்கு ஆதரவளிப்பதற்காக ஏனைய தந்திரோபாய தலையீடுகளுள் கொடுக்கல் வாங்கல் ரீதியான மற்றும் தொடர்பாடல் கண்டோட்டத்தில் இரண்டிலுமிருந்து பல்வேறு வாடிக்கையாளர் துண்டங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமனது பிரதானமாகப் பிரயோகிக்கப்பட்டு இணைய வங்கி இயல்திறன்கள் மேம்படுத்தப்படும். நிருவாக மற்றும் அக்கறையுள்ளோர் ஈடுபாட்டுக் கண்ணோட்டம் இரண்டிலுமிருந்து வங்கி முழுவதிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்வதற்கான இயலுமையை எமது புதிய மைய வங்கி அமைப்பு கொண்டுள்ளது. ஆகையால், நாம் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை (HDFC) ஒரு நவீன, தொழில்நுட்பத்தினால் உந்தப்பட்ட வீடமைப்பு நிதி நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாக மாற்றுவதற்காக நாம் டிஜிடெல் தளத்தினுள் வேகமாக நுழையவுள்ளோம்.

கடந்த வருடங்களில் முக்கிய ஆளணியினர் மற்றும் பயிற்சியும் அபிவிருத்தியும், எமது வளர்ச்சித் தந்திரோபாயத்தை நிலைபேறாக அடைதல் பற்றிய கட்டமைப்பினை வரைதல் உள்ளடலங்கலாக எமது மனிதவளக் கொள்கைகள், வியாபாரத்தைத் தொடரும் திட்டம் என்பவற்றை மேம்படுத்துவதில் நாம் நேரம் மற்றும் வளங்களைப் பாரியளவில் முதலீடு செய்துள்ளோம். 2018 டிசம்பர் முடிவில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) மனித மூலதன அடிப்படையின் நிலைமை பற்றிய மேலதிக விபரங்களுக்காகத் தயவுசெய்து மனித வளம் பற்றிய பிரிவினைப் பார்க்கவும் மேலும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் தொடர்பாடல்களை வசதிப்படுத்துவதற்காக எமது கிளைகள் மைய வங்கியியல் முறைமையுடன் ஒன்றுடனொன்று ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) தற்போது முன்னோக்கிச் செல்வதுடன் 2019-2020 இல் மூலதன உட்செலுத்துதல் முடிவுக்கு வந்ததுடன் நாம் துரிதமான முன்னேற்றத்தைக் காண முடியுமென நான் நம்புகின்றேன்.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார விவகார அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாஸ, அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர்கள் வழங்கிய வழிகாட்டல் மற்றும் உதவிக்காக நான் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன். நான் எப்போதும் போல் எமது பணியாட்டொகுதியினர் அனைவரினதும் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பினைப் பாராட்டுவதுடன் மேலும் செயலாற்றல் மிக்க வருடமொன்றை முன்னோக்கின்றேன். நாம் நாட்டிற்குச் சேவையாற்றும் நோக்குடன் ஒத்துழைப்புடன் பணியாற்றும் தொழில்வாண்மையாளர்களது உறுதியானதொரு அணியாக நின்று நம்பிக்கையுடன் எதிர்காலத்திற்கு முகங்கொடுப்போம்.

விசுவாசமிக்க,



ஆர். எச். மீவக்கல
தலைவர்

2019 மே 17

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு



“வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 2018 ஆம் ஆண்டில் ஒரு சவால்மிக்க வருடத்திற்கு முகங்கொடுத்தது. ஆனால், அதன் தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் பிரதான செயற்பணியில் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது”

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2018 ஆம் ஆண்டில் ஒரு சவால்மிகுந்த வருடத்திற்கு முகங்கொடுத்த போதிலும் அதன் தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் பிரதான செயற்பணியாகிய நாட்டிலுள்ள நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்களுக்கு வீடமைப்பு நிதியினை வழங்குவதனூடாக தொடர்ந்தும் முன்னேமடைந்தது.

நிதிச் செயலாற்றல்

2018 ஆம் ஆண்டானது பொதுவாக முழு நாட்டிற்கும் ஒரு கடினமான வருடமாகவிருந்த போதிலும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு (HDFC) 2017 ஆம் ஆண்டினை விட உறுதியான நிதி அடித்தளத்துடன் வருடத்தினை முடிவுறுத்த முடியுமானது. இதற்குக் காரணமாவது வருமான வளர்ச்சி மற்றும் மேலும் வலுவான ஐந்தொகையை நோக்கிப் பங்களிப்புச் செய்த பல தந்திரோபாயத் தீர்மானங்களாகும். இது உயர்ந்த பட்சக் கிரய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக எமது முதலீட்டு வரிசையினை மீள்மதிப்பீடு செய்தல் மற்றும் குறைவான வருமானம் பெறும் முதலீடுகளைத் திரவமயமாக்கல் மற்றும் எமது கடன் மற்றும் வைப்பு வரிசைகளைப் பன்முகப்படுத்தலைத் தொடருதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

செயற்பாட்டு இலாபத்தன்மையில், வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்குப்

564 மில்லியன்

தேறிய இலாபம்

பின்னரான இலாபமானது முறையே 2017 இல் 821 மில்லியன் ரூபா மற்றும் 414 மில்லியன் ரூபாய்களாகவிருந்தது 918 மில்லியன் ரூபா மற்றும் 564 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது. எமது வரிக்குப் பின்னரான இலாபமானது 36% ஆக அதிகரித:துள்ளமை உண்மையில் சிறந்ததாகும் 2018 இன் பேரினச் சூழல் மற்றும் கடன் மீளச் செலுத்தல் அறவீடு (DRL), சேர் பெறுமதி வரி (VAT) மற்றும் தேசிய வியாபார வரி (NBT) ஆகிய வரிகளைக் கழித்த பின்னரான தொகையாகும். உண்மையில் வங்கியின் வரிக் கொடுப்பனவுகள் 25% ஆக அதாவது 2017 இல் 232 மில்லியன் ரூபாவாக இருந்தது 289 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது. இது வங்கியின் மொத்த வருவாயில் 5% ஆகும்.

இலாப அதிகரிப்பானது 35 பில்லியன் ரூபாய்களிலிருந்து 38 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்த எமது கடன் வழங்கும் வரிசை யில் ஏற்பட்ட 9% விரிவாக்கத்தின் மூலமே அடையப்பட்டது. மீளாய்வு வருடத்தில் தலைமையகத்தில் வியாபாரக் கடன் மதிப்பீடுகளை விசேட பெருநிறுவன கடன் அலகிற்கு மையப்படுத்துவதனூடாக அடையப்பட்டது. இந்த அணுகுமுறையானது விசேட சேவைகளின் கிடைப்பனவின் காரணமாக மேலும் பாரிய பெருநிறுவன வாடிக்கையாளர்களைக் கவருவதற்கு உதவும்.

அவரசத் தேவைகளுக்காகப் பராமரிக்கப்பட்டு வந்த மேலதிகத் திரவத்தன்மையானது மீள்மதிப்பீட்டு இடர்களை அடிப்படையாகக்

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

“வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) அரசிற்குச் சொந்தமானதொரு வங்கியாகவிருந்த போதிலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியற்படுத்தப்பட்டுள்ளதுடன் நல்லாட்சித் தேவைப்பாடுகள் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகம் கொண்டதாகவுள்ளது”

கொண்டு குறைக்கப்பட்டது. இது மீளாய்வாண்டில் எல்லைகளிலான இழப்புக்களைக் குறைப்பதற்கு உதவியதுடன் அடிப்படை வருமானத்திற்கும் உதவியது.

இந்த வைப்புத் தளமானது 1% ஆக ரூபா 34 பில்லியன் ஆக விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் சில்லறை வைப்புக்களின் உள்ளடக்கமானது மொத்த வைப்புக்களில் 2018 ஆம் ஆண்டில் 44% இலிருந்து 51% ஆக அதிகரித்துள்ளது. சிக்கலான பொருளாதார கட்டத்தில் வைப்புக்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கேயுரிய (HDFC) தனிப்பட்ட பெறுமதி விகிதாசாரத்தில் செல்வாக்குச் செலுத்தும். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) அரசிற்குச் சொந்தமானதொரு வங்கியாகவிருந்த போதிலும், ஏனைய அரச வங்கிகளைப் போலல்லாது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியற்படுத்தப்பட்டுள்ளதுடன் நல்லாட்சித் தேவைப்பாடுகளை அதிகம் கொண்டதாகவுள்ளது. இது உயர்ந்த மட்ட பாதுகாப்பு மற்றும் உயர்ந்த மட்ட தெளிவினைக் கொண்டதொரு தனித்துவமான கலவையாகும். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (HDFC) பணிப்பாளர் சபையில் 49% பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் துறை பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளமை வங்கியினது வியாபார நோக்குநிலையை அதிகரிக்கின்றது.

நிதித் தளத்தினை வலுப்படுத்துதல்

2018 இல் நான் கவனம் செலுத்திய பிரதான பகுதி கடன் தரம் மற்றும் கடன் இடர் முகாமைத்துவம் ஆகியனவாகும். அத்துடன் நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் NPL விகிதங்களை முறைசார்ந்த ரீதியில் தாக்குவதற்கு நாம் ஆரம்பித்தோம். வங்கியனது EPF கடன்களை நீக்கிய மொத்த NPL விகிதமானது துறையினது சராசரி 10% வீதம் ஐ விட அதிகமானதாகும். இது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) ஒப்பீட்டளவில் ஆரோக்கியமன நிதி நிலைப்பாட்டின் மிகப்பெரிய ஒட்டகூடிய புள்ளியாகும். பல்வேறு காரணங்களினால் வங்கியினது NPL ஆனது அழுத்துவதற்கு கடினமாகவிருக்குமென வரலாற்றுரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. குறைந்த மற்றும் கீழ்மட்ட சமூக வருமானப் பிரிவுகளுக்கு வீடமைப்பு கடன்களைக் கிடைக்கச் செய்யும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) சட்டரீதியான ஆணை காரணமாக அக்கடன்கள் நிதிரீதியாக அதிகம் பாதிப்படையக் கூடியதும் செலுத்தத் தவறுவதாகவும் இருக்கலாம். 2018 ஆம் ஆண்டில் NPL இற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் அனைத்து வங்கி ஊழியர்களும் அதனைக் குறைப்பதற்கு இணங்கினர்

நாம் செலுத்தத் தவறும் கணக்குகளை முறையாக அடையாளங் கண்டு

22%

சில்லறை நிலையான வைப்பு வளர்ச்சி

சட்டரீதியான நடவடிக்கை எடுத்து அவற்றை அகற்றுவதற்குத் தேவையான பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். கிளை வலையமைப்பினுள் கடந்த வருடங்களில் பதிவுகளின் கீழ் மட்ட டிஜிடெல் ஒருங்கிணைப்பு காரணமாக இது உண்மையில்அதிக நேரமெடுக்கும் மனச்சோரவூட்டும் செய்முறையாகும். இத்திசைக்கு புதிய நிதியாண்டில் சகல முறைமைகளையும் ஊழியர்களையும் ஒருங்கிணைப்பதிலும் நாம் வேகத்தைப் பெற்றிருப்பதால் இப்புதிய நிதியாண்டில் நாம் துரிதமான முன்னேற்றத்தைக் காண முடியும்.

எமது தற்போதைய NPL இனைக் குறைத்துக் கொள்ளும் அதேவேளை, கடன் வரிசை மேலும் சீர்கெடாதிருப்பதைப் பாதுகாப்பதற்காக எமது கடன் இடர் முகாமைத்துவ முறையினை மேம்படுத்துவது முக்கியமானதாகும். ஆகையால், கடன் வழங்கும் நடைமுறைகள் மற்றும் கடன்வழங்கும் அளவுகோல்களை மீள்திருத்தியுள்ளதுடன் தற்போது நம்மிடம் மேலும் கடுமையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கடன் இடர் முகாமைத்துவ முறையொன்றுள்ளது. கட்டுப்பாடுகளுள் கடன் அங்கீகாரங்களுக்காக வழங்கப்பட்ட அதிகாரக் கட்டமைப்பைப் பகுத்தறிவுடன் வாடிக்கையாளர் உறவினைக் கட்டியெழுப்புவதற்காக முகாமைத்துவத்தினை வளப்படுத்தும் அதேவேளை, மேம்படுத்தப்பட்ட தொழில் பிரிப்பும் உள்ளடங்கும். கடன் வழங்கல் நோக்க முகாமைத்துவத்திற்காக நாம் மையப்படுத்தப்பட்ட கடன் நிருவாக அலகிலிருந்து இரண்டாவது அங்கீகாரம் வரும் ஒரு முறைமையை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். நிலையான விலையிடல் முறைக்குப் பதிலாக நாம் இடரை அடிப்படையாகக்

கொண்ட விலையிடலொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது மேலும் தரமான வாடிக்கையாளர்களைக் கவருமென நாம் நம்புகின்றோம். எமது விடயப்பரப்பினது தரத்தினை மேம்படுத்துவதற்கு தனியார் துறையிலிருந்து ஒரு பிரதான செயற்பாட்டு அலுவலரை வாடகைக்கு அமர்த்தியுள்ளோம். இம்மாற்றங்களானவை ஊழியர்களை அனைத்து மட்டங்களிலும் பொறுப்புணர்வுள்ளவர்களாக மாற்றுவதற்கான மேலும் ஏற்புடைய மற்றும் நோக்கம் கொண்ட செயலாற்றல் மதிப்பீட்டு அளவுகோல்களுடன் கூடியதாகும். இம்முன்னெடுப்புக்களினால் எமது NPL,ல் குறிப்பிடத்தக குறைவு ஏற்படுமெனவும் இதன் மூலம் எமது கடன் தரப்படுத்தல் அதிகரிக்குமெனவும் நம்புகின்றோம்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினுள் (HDFC) சிறந்த நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துமுகமாக மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு அபிவிருத்தியானது முதன்முறையாக 2019 ஆம் ஆண்டிற்கான புதிய செயலாற்றல் மதிப்பீட்டு முறையொன்றுடன் கூடிய செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் கூடிய புதிய கூட்டு ஒப்பந்தத்தை உட்சேர்த்தமையாகும். 2018 இல் பணியாட்டொகுதியினரக்கு ஒரு செயலாற்றல் ஊக்குவிப்புத் தொகையொன்று வழங்கப்பட்டது. புதிய கடன் இடர் முகாமைத்துவம் மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை ஆகிய இரண்டினதும் மீதான பணியாட்டொகுதியினர் மற்றும் தொழிற்சங்கத்தினது பிரதிபலிப்பானது உண்மையாகவே நேர்மறையானதாகுமென நான் நினைக்கின்றேன். ஆகையால், வங்கியின் நிதி அடிப்படைகள் தொடர்ந்தும் முன்னேற்றமடையுமென நான் நம்புகின்றேன்.

மூலதன நிலைமை

2018 இன் பிரதான சவாலானது வங்கியின் குறைந்தபட்சம் 5 பில்லியன் ரூபாய் உள்ளது என இலங்கை மத்திய வங்கிக்கு காட்டப்பட வேண்டிய நிலை 1 மூலதனம் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். இதனைத் தொடரந்து, பிட்ச் தரப்படுத்தலானது HDFC கடன் தரப்படுத்தலானது முன்பிருந்த BBB- இலிருந்து டீடீ ஆகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய தரப்படுத்தலானது HDFC இனது தனித்திருக்கும் எண்ணக்கருக்கள் மற்றும் அரச ஆதரவில் தங்கியிருப்பதில்லை என்பது காரணமானது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தரப்படுத்தல் கண்காணிப்பில் எதிர்மறையாகவிருந்த தரப்படுத்தல்கள் அகற்றப்பட்டதுடன் அவுட்லுக் நிலையானதாகவுள்ளது. மேலும், சகல மேலதிக நிலை 1 பிணையங்களை அரச திறைசேரிக்கு வழங்குவதற்கான சகல சட்ட ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மூலதன இடைவெளியானது 2019 ஆம் ஆண்டில் நிரப்பப்படும். இது 2019 இல் HDFC தரப்படுத்தலை மேம்படுத்துவதற்கு உதவும். இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவையாகிய ரூபா 5 பில்லியன்களை அடைதலை தவிர, வங்கியானது பேஸல் III வழிகாட்டிகள் மற்றும் 2016 ஆம் 1 ம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் கீழான குறைந்தபட்ச மூலதன விகிதங்களுடன் இணங்குகின்றது.

புதிய நிதி ஆண்டிற்கான திட்டங்கள்

அடிப்படை மூலதன தேவைப்பாட்டினை அடைந்ததும் HDFC ஆனது பாரிய வியாபார விஸ்தரிப்பு மற்றும் செயற்பாட்டு நெகிழ்வினைக் கொண்டிருக்கும். விசேடமாக வங்கியானது தற்போது பல புதிய பொருட்கள் சேவைகளை நவீன மைய வங்கி அமைப்பு செயற்படுத்துகின்றது.

2019 ஆம் ஆண்டு முதல் எமது இலக்கானது 2018 இன் மொத்த NPL விகிதத்தை 25% ஆல் குறைக்கும் அதேவேளை 7 பில்லியனினால் எமது கடன்கள் மற்றும் முற்பணப் பரப்பெல்லையை வளர்ப்பதாகும். உயர்ந்த இலாப சில்லறைக் கடன்களுக்கு அதிக இழுத்தம் கொடுத்து எமது இடர் விபரங்களையும் நாம் தொடர்ந்தும் மீள்சமப்படுத்துவோம். தற்போது எமது கடன் வழங்கும் பரப்பெல்லையில் 80% ஆனது வீடமைப்பில் உள்ள போதிலும் குத்தகை, தங்கக் கடன்கள் மற்றும் வியாபாரக் கடன் துறைகளை எதிர்வரும் சில ஆண்டுகளில் வளர்த்து இந்த அளவினை 70% ஆக குறைப்பதற்கு முயற்சிக்கின்றோம். சகல புதிய கடன்களும் 3% NPL வீதத்திற்குக் கட்டுப்படுத்தப்படும்.

வைப்புக்களின் வளர்ச்சியானது வங்கிக்கு குறைந்த செலவிலான நிதியிடலை வழங்க அவசியமானதாகும். சில்லறைத் துறைக்கு அழுத்தம் கொடுத்து வைப்புக்களுக்கான புதிய சந்தைத் துண்டங்களை நாம் தொடர்ந்தும் பின்பற்றுவோம்.

தற்போது முழுமையாக இயங்கும் மைய வங்கி முறையுடன் HDFC இற்குப் புதிய, நவீன பொருட்கள் மற்றும் சேவைகளின் வரிசை தற்போது காணப்படுகின்றது. இந்தக் கருத்திட்டங்களில் பல ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இதில் EMV முறைப்பாடு மற்றும் JCB வங்கி அட்டை என்பவை உள்ளடங்கும். இவ் சிப் தொழிநுட்பம் ஆனது சர்வதேச நியதியாகும் மற்றும் அதி உயர்ந்த பாதுகாப்பை வழங்குகின்றது.. தொழிற்நுட்பம் ஆனது சர்வதேச நியதியாகும். மற்றும் அதிஉயர்ந்த பாதுகாப்பை வழங்குகின்றது.

தற்போது எமது சகல நிதிச் சேவை வழ்குநர்களும் அவர்களது டிஜிடெல் அடித்தளத்தினை விரிவுபடுத்தியுள்ளதுடன், HDFC ஆனது அதன் டிஜிடெல் இருப்பினை சீரமைத்து HDFC இணையத்தளத்தை மேலும் பயனர் நட்பு மிக்கதும் மேலும் பல வசதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் வசதிகளைக் கொண்டதுமாக மேம்படுத்தவுள்ளது. இது HDFC வியாபாரக் குறியினை நவீனமயப்படுத்துவதற்கும் பலதரப்பட்ட வாடிக்கையாளர் துண்டங்களைக் கவருவதற்கு இது உதவுமென நான் நம்புகின்றேன்.

புதிய தொழில்நுட்பங்களும் உள்ளக செயற்றிறனுக்கு ஆதரவளிக்கும். உதாரணமாக, நாம் கடதாசிப் பாவனையற்ற பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கும் பணிப்பாளர் சபை உபகுழுக் கூட்டங்களுக்கும் ஐபேட்களைப் பயன்படுத்தி கடதாசி பாவனையற்ற ஒரு தன்னியக்க முறைமையை அறிமுகப்படுத்துகின்றோம்.

HDFC இனது கடன் தோற்றுவாய் முறையானது சகல கிளைகள் மற்றும் தலைமையகம் முழுவதிலும் அனைத்து ஆவணங்களையும் டிஜிடெல் மயப்படுத்துவதன் மூலமாக கடதாசிப் பாவனையற்றதாக்கப்படும் இது கடன் அங்கீகாரத்தின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் வேகத்தை அதிகரித்து அதன் மூலமாக சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க முடிவதுடன் மேலும் சூழல் நட்புடையதாகவும் இருக்கும்.

வங்கியினது இடர் முகாமைத்துவத்தினது பிரதான அம்சமாவது அனர்த்த மீட்பு முறைகளுகளில் ஏற்படுத்தப்படும் மேம்படுத்தல்களாகும். 2019 ஆம் ஆண்டில், நாம் அனர்த்த மீட்பு முறைக்கு இணைய மூலமான அதே நேர மாற்றல் வசதியினைத் திட்டமிட்டுள்ளோம். புதிய முறையானது, முன்னைய நேரமெடுக்கும், கை மூலமான மீட்டெடுப்புக்குப் பதிலாக நாளாந்த செயற்பாடுகளுக்கு ஏதேனும் மாற்றங்கள் / இடையூறுகளைக் கண்டுபிடித்து தன்னியக்க முறையில் தலையீடு செய்யும்.

2019 ஆம் ஆண்டு முதல் நாம் செயற்றிறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தியுள்ளதால், ஒட்டுமொத்த செயற்பாட்டு விடயங்களும் தொடர்ந்தும் மேம்படுத்தப்படும் என நம்புகின்றேன். HDFC இடம் முன்னர் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட வெகுமதி முறை காணப்படவில்லை. ஆனால், 2019 ஆம் ஆண்டு முதல் செயலாற்றல் ஊக்குவிப்பானது வங்கியின் சுழுயு உடனும் புதிய செயலாற்றல் மதிப்பீட்டு முறையுடனும் இணைக்கப்படும்.

பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

பாராட்டுக்கள்

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார விவகார அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாஸ, அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதுடன் அமைச்சின் செயலாளர் திரு. பெர்னார்ட் வசந்த டீ சில்வா மூலதன ஏற்ற இறக்கங்களுடன் இணங்குவதற்காக எடுத்த முயற்சிகளுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வைப்பாளர்கள் இந்த சவாலான சந்தர்ப்பத்தில் எமக்கு ஆதரவாக இருந்ததுடன் அவர்களது தொடர்ச்சியான ஆதரவிற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். நான் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) பணிப்பாளர் மற்றும் தலைவருக்கு அவர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (HDFC) பணியாட்டொகுதியினருக்கும் தொழிற்சங்கத்திற்கும் அவருடம் பூராகவும் அவர்கள் வழங்கிய ஆதரவிற்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (HDFC) வெற்றியடைவதற்கு ஒத்துழைப்பானது அவசியமாவதுடன் அனைத்து பணியாட்டொகுதியினரதும் தொழிற்சங்கத்தினதும் தொடர்ச்சியான ஆதரவினைப் புதிய நிதியாண்டிலும் நான் எதிர்பார்க்கின்றேன்.

விசுவாசமிக்க,



பாலித கமகே
பொது முகாமையாளர்ஃபிநிஅ

2019 மே 17

2018 ஆம் ஆண்டில் மூலதன மாற்றங்கள்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு முக்கியமான மூலதனங்கள்
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது பின்வரும் நான்கு மூலதனங்களைக் கொண்டதாகும்.

1. நிதி மூலதனம்
2. அறிவுசார் மூலதனம்
3. மனித மூலதனம்
4. சமூக மூலதனம்

என்பன வங்கியினது உடனடி மற்றும் எதிர்கால நிலைபேற்றிற்கு அவற்றின் முக்கியத்துவத்தினடிப்படையில் பிரதான மூலதனங்களாகக் கருதப்படுகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனங்கள்
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது குறிப்பிடத்தக்க நிலம் மற்றும் ஆதனங்களைக் கொண்டிருக்கவில்லை. உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்கள் தளபாடங்களுக்கும் வாகனங்களுக்கும் வரையறுக்கப்பட்டுள்ள. இவை நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டுள்ளதுடன் மீளாய்வு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு மாற்றமடையாது.

இயற்கை மூலதனம்
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது எந்தவொரு இயற்கை மூலதனங்களையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சேவை வழங்குநர் என்ற வகையில் வங்கியினது நேரடி சூழல் பாதிப்புக்கள் வரையறுக்கப்பட்டவையாகவுள்ளன. நிலத்தை சுத்தப்படுததல், நிலக்கீழ் நீர் அகழ்வு, சக்தி மற்றும் நீர் நுகர்வு மற்றும் மாசடைதல், வங்கியினால் வீடமைப்புக்கு மற்றும் வியாபாரத்திற்கு கடன் மூலம் நிதியளிக்கப்படும் மூன்றாம் தரப்பினரது நடவடிக்கைகள் போன்றன பிரதான சூழல் பாதிப்புக்களாகும்.

தற்போது வங்கியிடம் இத்தகைய பாதிப்புக்களை அளவிடவும் அது தொடர்பில் அறிக்கையிடவும் பொறிமுறையொன்று காணப்படவில்லை. வங்கியானது கடன் வழங்குகையில் சூழல் பாதிப்புக்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நேரடியற்ற எதிர்மறையான சூழல் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த முயல்கின்றது.

அதற்கு மேலதிகமாக, வங்கியானது அதன் தலைமையகத்தினுள் வள நுகர்வினைக் (நீர், மின்சாரம் மற்றும் கடதாசி) கண்காணிப்பதுடன் ஊழியர்களிடையே வளப்பாதுகாப்பு மனோநிலையை ஊக்குவிக்கின்றது. சூழல் பாதிப்புக்களை மேலும் குறைப்பதற்காக வங்கியானது அதன் உள்ளகச் செய்முறைகளைத் துரிதமாக டிஜிடெல் மயப்படுத்துகின்றது.

நிதி மீளாய்வு

2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதி மூலதனங்கள்

2018 ஆம் ஆண்டில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மூலதன முகாமைத்துவத்தின் நிலைமையை நிதி மூலதன மீளாய்வு விளக்குகின்றது. மேலதிக விபரங்களுக்கு நிதி விபரங்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களைத் தயவுசெய்து பார்க்கவும்.

2016- 2018 வரையிலான 3 வருட காலத்தினது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி மூலதன மாற்றங்களின் சாரம்சமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

பிரதான நிதி மூலதனங்கள்	2016	2017	2018
மொத்த வருமானம் (ரூபா மில்லியன்கள்)	5.928	6,978	7,120
வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா மில்லியன்கள்)	483	414	564
மொத்த சொத்துக்கள் (ரூபா மில்லியன்கள்)	45,679	49,724	49,285
கடன்களும் முற்பணங்களும் (தேறிய) (ரூபா மில்லியன்கள்)	30,259	34,968	37,934
கடனாகப் பெற்றவை (ரூபா மில்லியன்கள்)	8,862	7,917	6,653
சமபங்குகள் (ரூபா மில்லியன்கள்)	3,821	4,231	4,756

செயற்பாட்டு இலாபம் உழைக்கும் இயலுமை

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டானது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அதிக இலாபகரமான வருடமாகும். 2017 உடன் ஒப்படுகையில் வரிக்கு முன்னரான இலாபமானது 12% இனால் அதிகரித்தமையானது செயற்பாட்டு இலாபத்தின் கணிசமானளவு அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வதிகரிப்பினை வருடம் பூராகவும் திரவச் சொத்துக்களை உயரிய மட்டத்தில் முகாமைசெய்தமையினால் அடைய முடிந்தது. வட்டிக் கிரயத்தினை முழுமையான வகையில் கணிசமானளவு குறைப்பதற்காக வங்கியினது திரவச் சொத்துக்களின் பாகமொன்று திரவமாக்கப்பட்டது. அதன் பெறுபேறாக, வங்கியானது தேறிய வட்டி வருமான விகிதத்தை (NII)28.29% இலிருந்து 33.5% ஆக அதிகரிக்க முடியுமாகியது. வட்டியற்ற மற்றும் கட்டண அடிப்படையிலான கடன் பரப்பெல்லையை நெருக்கமாகக் கண்காணித்து மேம்படுத்துவதனூடாக இலாபத்தன்மையினை மேலும் மேம்படுத்தலாம்.


சராசரி சொத்துக்களின் திரும்பலாகக் கணிக்கப்பட்ட வங்கியினது ஒட்டுமொத்த இலாபத்தன்மையானது 0.87% இலிருந்து 0.87% ஆக அதிகரித்துள்ளதுடன் பங்குதாரரின் பங்குமூலதனத்திற்கான திரும்பலானது 10.29% இலிருந்து 12.56%. ஆக அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், குத்தகை வியாபாரத்துடன் தொடர்புடைய வரிச் சட்டங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் வங்கியானது குறிப்பிடத்தக்க வகையில் நன்மையடைந்துள்ளது.
செயற்பாட்டுக் கூற்று

வட்டி வருமானம்

	2014	2015	2016	2017	2018
கழிக்க - வட்டிச் செலவுகள்	4,378	4,660	5,472	6,613	6,679
தேறிய வட்டி வருமானம் (NII)	(2,535)	(2,539)	(3,509)	(4,742)	(4,441)
கூட்டுக - ஏனைய வருமானம்		2,121	1,963	1,871	2,238
செயற்பாட்டு இலாபம்		265	454	365	441
கழிக்க - செயற்பாட்டுச் செலவுகள்		2,804	2,417	2,236	2,679
கழிக்க - வலுக்குறை நட்டம்	1,123	1,288	1,409	1,472	1,668
வரிக்கு முன்னரான இலாபம்			160	(57)	93
வரிக்கு பின்னரான இலாபம்			848	821	919
ROA %		509	483	414	564
ROE %	1.21	1.33	1.10	0.87	1.14
ROE %	13.72	16.30	13.46	10.29	12.56

சேர்பெறுமதி வரி மற்றும் பெருநிறுவன வரிக்கு முன்னரான இலாபம்

ரூபா. மில்



வட்டி மற்றும் வட்டியற்ற வருமானம்

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வங்கியானது வட்டி வருமானத்தில் அதிகரிப்பினை அடைந்துள்ளது. இவ்வதிகரிப்பானது பிரதானமாக கடன் புத்தக வளர்ச்சி மற்றும் ஆண்டிற்கான அதிக வட்டி உழைக்கும் கடன்களை வழங்குதல் போன்றவை மூலமாக ஏற்பட்டுள்ளது. தற்போது காணப்படும் கடன் பரப்பெல்லையை வரையறையுடன் மீள் விலையிடும் போது, புதிய கடன்வழங்கலானது அதிகரிக்கும் வட்டிக் கியரத்தைப் பிரதிபலிக்கும் பொருத்தமானதொரு வட்டிப் பரம்பலுடனேயே விலையிடப்படுகின்றது. ஒரு வீடமைப்பு நிதியிடல் நிறுவனம் என்ற ரீதியில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது கீழ் மற்றும் நடுத்தர மட்ட வருமானம் வாடிக்கையாளர் தொகுதியிலேயே பிரதானமாகக் கவனம் செலுத்துகின்றது. அத்துடன் தற்போது காணப்படும் கடன் புத்தக வாடிக்கையாளர்களுக்கு அதிகரிக்கும் நிதிக் கிரயத்தை மாற்றுவதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட சாத்தியமொன்றுள்ளது.

மீளாய்வாண்டின் வட்டி வருமானத்தில் நிதி முதலீடுகளும் பங்களிப்புச் செய்கின்றன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், சட்டரீதியான திரவச் சொத்துக்கள் மற்றும் ஏனைய முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானமானது மொத்த வட்டி வருமானத்தில் 20% பங்களிப்புச் செய்தது.


வட்டியற்ற வருமானமானது 2018 ஆம் ஆண்டில் வங்கியினது மொத்த வருமானத்தில் பங்களிப்புச் செய்கின்றது. வருடத்திற்கு வருடம் வியக்கத்தக்க வளர்ச்சியைக் காட்டும் வட்டியற்ற வருமானத்தின் பிரதான பங்கேற்பாளர்கள் கட்டணம் மற்றும் தரகு வருமானம் மற்றும் முதலீட்டுச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதிகரிப்பு ஆகியனவாகும். வட்டியற்ற

வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட கடன் பரப்பெல்லையினது முக்கிய மூலமாவது கடன் ஆவணப்படுத்தல் கட்டணங்கள், சட்டக் கட்டணங்கள், விலைமதிப்பீடு, வருடாந்த மீளாய்வுக்கட்டணங்கள், தொழில்நுட்பக் கட்டணங்கள் போன்றனவாகும். மீளாய்வாண்டில், கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிப்பதற்காக வங்கியானது வாடிக்கையாளர்களுக்குப் பல்வேறு ஏனைய சேவைகளை வழங்குகின்றது. இவை சவால்மிகுந்த வட்டி வீதச் சூழ்நிலையில் வட்டியற்ற வருமானம் மீதான வங்கியினது அதிக கவனத்தை உறுதிப்படுத்துகின்றது.

2017 இல் 16.9 மில்லியன் ரூபாவாகவிருந்த முதலீட்டுச் சொத்துக்கள் மீதான மீள்மதிப்பீட்டு வருவாயானது 2018 இல் 61.69 மில்லியன் ரூபாய்களாக உயர்வடைந்தமையானது 2018 ஆம் ஆண்டின் இலாபத்தன்மையில் அதிக பங்களிப்புச் செய்கின்றது.


வட்டி வருமானம்

ரூபா மில்லியன்



வட்டியல்லாத வருமானம்

ரூபா மில்லியன்




வட்டிச் செலவு

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை முழுமையான முறையில் வெளியிட்டு வட்டி வருமானது 10%, ஆல் அதிகரித்த அதேவேளை வட்டிச் செலவானது 6% ஆக விரும்பத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இது கீழ்மட்டத்தில் குறிப்பிடத்தக்க சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி தேறிய வட்டி வருமான விகிதத்தை (NII) 28% இலிருந்து 33% ஆக உயர்த்தியுள்ளது. சவால்மிகுந்த நிதிச் சந்தைச் சூழலிலும் கூட, குறைந்த வருவாய் பெறும் வைப்புப் பரப்பெல்லையை மீளவும் அளவிடும் தீர்மானமானது வட்டிக் கிரயத்தை மேலும் சாதகமாகச் சமாளிக்க உதவும். நிலையற்ற நிதிச் சந்தையில் பொறுப்பு அடிப்படையினை மீள் விலையிடுவதற்கு மூன்று முதல் ஆறு மாத கால சேம நிலையான வைப்புப் பரப்பெல்லையின் கணிசமானளவு பங்கானது உயர்வினை நோக்கி குறிப்பிடத்தக்க அழுத்தத்தைக் கொடுக்கின்றன.

வட்டிச் செலவு

ரூபா. மில்லியன்




செயற்பாட்டுச் செலவு

செயற்பாட்டுச் செலவானது ஒரு வருடத்திலிருந்து அடுத்த வருடமாகும் போது 1,472 மில்லியன் ரூபாவிலிருந்து 1,688 மில்லியன் ரூபா வரை 13.19% ஆக உயர்வடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் 64% ஆகவிருந்த செயற்பாட்டுச் செலவானது மீளாய்வாண்டில் 67% ஆக அதிகரித்துள்ளதால், பணியாட்டொகுதிச் செலவானது 941 மில்லியன் ரூபாயிலிருந்து 1,113 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. பணியாட்டொகுதிச் செலவானது அதிகரிப்பதில் பிரதானமாகச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாக 2018 சனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட தொழிற் சங்கத்துடனான புதிய கூட்டு ஒப்பந்தத்தின் பெறுபேறான பதவியுயர்வுகள் மற்றும் வெளியீடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. கடந்த வருடத்தில் செயற்பாட்டுச் செலவினை அதிகரித்த ஏனைய பிரதான காரணிகளாக அதிகரித்த வியாபார அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளாகும்.

செயற்பாட்டுச் செலவு

ரூபாய் மில்லியன்கள்



குறைபாடுகள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS9) இன் பிரயோகம்

கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் குறைபாட்டுக் கட்டணங்களில் ஒரு பாதக நிலைமையிலான அதிகரிப்பானது 56.74 மில்லியன் ரூபாயிலிருந்து ரூபா. 92.70 மில்லியனாக உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தில் 9 (SLFRS9) கூறப்பட்டுள்ளவாறு வங்கியானது ஏற்பட்ட நட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நட்டத்திற்கான ஏற்பாடுகளிலிருந்து முழுமையாக குறைபாட்டு மாற்ற மாதிரியுடன் இணங்குகின்றது. அதன்படி, 2018 ஆம் ஆண்டிற்கான குறைபாட்டிற்கான ஏற்பாடானது SLFRS9 இன் படி கணிக்கப்படுகின்றது. பின்பற்றப்பட்ட கொள்கைகளும் எடுகோள்களும் கணக்கீட்டுக் கொள்கைகள் என்பதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன. 2017 இல் விரிவான வருமானத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விற்பனைக்குத் தயாராகவிருந்த நிதிச் சொத்துக்களின் மீள் அளவீட்டு வருவாயாகிய 32,051,025 மில்லியன் ரூபாயானது 2018 ஆம் ஆண்டின் வருமானக் கூற்றில் 2017 இன் ஒப்பீட்டளவுகளில் குறைபாட்டுக் கட்டணங்கள்/ எதிரிடையாக SLFRS9 இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது.

நிதி மீளாய்வு

சொத்து வளர்ச்சி


வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2017 ஆம் ஆண்டில் 49.72 பில்லியன் ரூபா மொத்த சொத்துக்களுடன் நிதியாண்டினை முடிவுறுத்திய அதேவேளை மீளாய்வாண்டின் இறுதியில் 49.2 பில்லியன் ரூபா மொத்த சொத்துக்களைக் கொண்டிருந்தது. வருடாந்தம் வளர்ச்சியடைந்த போதிலும் வங்கியின் மொத்த சொத்துக்களானவை 440 மில்லியன் ரூபாயினால் வீழ்ச்சியடைந்ததைக் கருத்திற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், வங்கியானது பிரதான வியாபாரமாகிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் பெறவேண்டியவைகளில் 9% வளர்ச்சியைப் பராமரித்து வந்துள்ளது. திரவச் சொத்துக்கள் மற்றும் ஏனைய நிதி முதலீடுகள் 25% எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

சொத்துக்களும் பொறுப்புக்களும்

	2014	2015	2016	2017	2018
கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறியது)	23,357	26,685	30,260	34,967	37,934
திரவச் சொத்துக்கள் முதலீடுகள்	9,847	14,474	13,858	12,935	9,698
பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	296	435	457	513	466
ஏனைய சொத்துக்கள்	918	319	1,104	1,305	1,184
மொத்த சொத்துக்கள்	34,418	41,913	45,678	49,723	49,285
வாடிக்கையாளர் வைப்புக்கள்	24479	28592	32,122	36,654	37.016
கடன் பெறுகைகள்	6213	9037	8,862	7,919	6,650
ஏனைய பொறுப்புக்கள்	840	920	896	919	859
பங்குதாரரின் நிதி	2886	3364	3,728	4,231	4,756
மொத்தக் பொறுப்புக்கள்	34,418	41,913	45,678	49,723	49,285

மொத்தச் சொத்து வளர்ச்சி

ரூபா மில்லியன்




கடன்களும் முற்பணங்களும்

2017 ஆம் ஆண்டில்34,967 பில்லியன் ரூபாய்களான கடன் புத்தகமானது 2018 ஆம் ஆண்டில் 37,934 பில்லியன் ரூபாய்களாக விரிவடைந்தது. கடன் பரப்பெல்லையானது பிரதான வியாபாரமாகிய வீடமைப்பு நிதியினாலே இயக்கப்படுகின்றது. 2018 டிசம்பர் 31 ஆம் திகதி கடன் புத்தகமாகியது 80% ஆகவிருந்தது. குத்தகை, பேரின நிதி, பெருநிறுவன நிதி மற்றும் வியாபாரக் கடன்கள் என்பன கடன் பரப்பெல்லையினது வளர்ச்சிக்கு கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது. கடனுதவிப் புத்தகமாகியது தீவு முழுவதும் பரவலாக இணைக்கப்பட்டுள்ளது.

கடன்களும் முற்பணங்களும்

ரூபா மில்லியன்



முதலீட்டுப் பரப்பெல்லை

பதிவு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஏனைய தந்திரோபாய முதலீடுகளுடன் மேலும் ஆதரவளிக்கப்பட்டுள்ளன. கட்டாயமான திரவச் சொத்துப் பரப்பெல்லைக்கு மேலதிகமாக, பட்டியற்படுத்தப்பட்ட பெருநிறுவன தொகுதிக்கடன்கள், அரசாங்க பிணையங்கள் மற்றும் வணிகப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் அதன் முதலீட்டுப் பரப்பெல்லையை பன்முகப்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் வங்கியானது தந்திரோபாயத் தீர்மானமொன்றை எடுத்தது. எவ்வாறாயினும், வட்டி அதிகரிக்கும் சூழலைக் கருத்திற்கொண்டு வங்கியானது 2017 இலும் 2018 இலும் தந்திரோபாய ரீதியில் முதலீட்டுப் பரப்பெல்லையைக் குறைத்துள்ளது.

வைப்புத் திரட்டுதல்

வங்கியானது சில்லறை நிலையான வைப்புக்களைக் கவருவதில் தீவிர கவனத்தைப் பராமரித்துக் கொண்டு மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டினை விட 1% ஆனதொரு எல்லை வளர்ச்சியை பராமரித்து அதன் வைப்புத்தளத்தை 36.654 பில்லியன் ரூபாயிலிருந்து 37.016 பில்லியன்களாக விரிவுபடுத்தியுள்ளது. சேமிப்புக்களைத் திரட்டிக் கொள்ளுவதற்காக வருடம் பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம், 2017 இல் மொத்த வைப்புக்களில் 15% ஆகவிருந்த சேமிப்பு வைப்புக்களானவை 2018 இல் 16% ஆக உயர்வடைந்துள்ளது.


சேமிப்புக்களைத் திரட்டுவதில் பாரியளவில் பங்களிப்புச் செய்யும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினது நடமாடும்

வங்கித் தொழிற்பாடுகளானவை கீழ்மட்ட மற்றும் நடுத்தர வருமானக் குழுவினரை இலக்குவைத்து நாலாபக்கங்களிலும் குறைந்த கிரய நிதியினைத் திரட்டுவதில் ஒரு வெற்றிகரமான வருடமாகப் பதிவு செய்யப்பட்டது.

2018-12-31 ஆம் திகதியன்று வாடிக்கையாளர் வைப்புக்களில் 5.76 பில்லியன் ரூபாய் சேமிப்பு வைப்புக்களும் 31.25 பில்லியன் ரூபாய் நிலையான வைப்புக்களும் உள்ளடங்கியிருந்தன. வங்கியானது சேமிப்புத் தளத்தினை விரிவுபடுத்துவதற்கு இடையறாது முயற்சிப்பதுடன் முன்னைய வருடத்தை 5% ஆன சேமிப்பு வளர்ச்சியை அடைந்துள்ளது.

வைப்புக்களின் வளர்ச்சி

ரூபாய் மில்லியன்கள்



கடன் மற்றும் பெருநிறுவன தொகுதிக்கடன்கள்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2013 இல் ஒரு வெற்றிகரமான கடன் பத்திரங்களை வழங்கியதுடன் 2015 ஆம் ஆண்டில் 4 பில்லியன் ரூபா பெறுமதியான மற்றுமொரு தொகுதிக்கடன்களையும் வழங்கியது. 2013 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 500 மில்லியன் ரூபா பெறுமதியான தொகுதிக்கடன்கள் 2016 இல் உரிய திகதிகளில் செலுத்தித் தீர்க்கப்பட்டதுடன் மற்றுமொரு தொகுதிக்கடன்கள் 2018 ஒக்டோபர் 24 ஆம் திகதி செலுத்தித் தீர்க்கப்பட்டது.

பங்குமூலதனமும் குறைந்தபட்ச மூலதனமும்


எமது பங்குதாரருக்குப் பெறுமதியை உருவாக்குவதே எமது உயரிய முன்னுரிமையாவதுடன் மீளாய்வு காலப்பகுதியில் பங்குதாரர் நிதியானது 12% ஆல் அதிகரித்துள்ளது. பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதியானது 2018 இல் 12.4% அதிகரிப்புடன் 65.39 ரூபாவிலிருந்து 73.51 ரூபாயாக அதிகரித்துள்ளது. அதேவேளை, மீளாய்வில் இலாபத்தன்மை அதிகரிப்பு காரணமக பங்கொன்றிற்கான வருமான உழைப்பானது 6.40 ரூபாவிலிருந்து 8.72 ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஒழுங்குபடுத்துதல் குறைந்தபட்சம் தேவைப்பாடுகளாகிய 6.37%, 7.87% மற்றும் 11.87% ஆகவிருக்கும் போது அடிப்படை மூலதன விகிதம் (நிலை 1) மற்றும் மொத்த மூலதன விகிதம் 13.52% இல் குறைந்தபட்ச தேவைக்கு மேலதிகமாகக் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், மத்திய வங்கியின் (CBSL) 2014 சனவரி 17 ஆம் திகதிய நிதித் துறை ஒருங்கிணைப்பு தொடர்பான பிரதான திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட வழிகாட்டல் இல. 02/17/402/0073/002 மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட நீடிப்பு ஆகியவற்றின்படி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2019 சனவரி 17 ஆம் திகதியன்று 5,000 மில்லியன் ரூபா பிரதான மூலதன மீதியைப் பராமரிக்க வேண்டும். பேசல் 111 (Basal 111) வழிகாட்டல்களின்படி பிரதான மூலதனமாகத் தகைமைபெற்ற அரசாங்கத்திடமிருந்தான நிரந்த கடன் மூலதனத்தை அதிகரிப்பதற்காக மேலதிக நிலை 1 (AT1) ஐ வழங்குவதற்கு இந்த முடிவுத் திகதியானது 2019 யூன் 30 வரை மேலும் நீடிக்கப்பட்டது. குறைந்தபட்ச மூலதன அடிப்படையைப் பாதுகாப்பதற்காக, தக்க வருவாயினை அதிகரிப்பதற்காக வங்கியானது இலாபத்தன்மையையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

உரிமையாண்மை

ரூபாய் மில்லியன்கள்



திரவத்தன்மை நிலைமை

இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட புத்திசாதுரிய எல்லைகளுக்கிணங்கவும் தீவிர நிலைமைகளை முகங்கொடுக்கக் கூடிய அதன் இயலுமையை அழுத்தப் பிரசோதனை மூலமும் அதன் போதியதன்மையை அடையாளங் காண்பதற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் வழக்கமாக வங்கியினது திரவத்தன்மை அளவிடப்பட்டு மதிப்பிடப்படுகின்றது. வங்கியானது ஒரு ஆரோக்கியமான சட்டபூர்வ திரவத்தன்மைச் சொத்து விகிததை (SLAR) ஒழுங்கமைத்தல் குறைந்தபட்சத் தேவையாகிய மொத்த வைப்புக்களில் 20% இற்குமதிகமான மட்டத்தில் சிறப்பாகப் பராமரிக்கின்றது.

அதேவேளை, வங்கியானது வருடம்பூராகவும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளுக்கிணங்க திரவத்தன்மை உள்ளடக்க விகிதமொன்றையும் பராமரித்து வருகின்றது. அதற்கு மேலதிகமாக, வங்கியானது ஒரு மேலதிக திரவத்தன்மைப் பாதுகாப்பு நிதியொன்றாக ஏனைய வங்கிகளிடமிருந்து பெற்ற பயன்படுத்தப்படாத அங்கீகரிக்கப்பட்ட கடன்வழிகளையும் பராமரிக்கின்றது.

சொத்தின் தரம்

2018-12-31 ஆம் திகதியன்று வங்கியினது ஒட்டுமொத்த NPL ஆனது 19.08% ஆகவிருந்தது. மத்திய வங்கியால் வருடாந்த அடிப்படையில் வசூலிக்கப்படும் EPF மீதி அடிப்படையிலான கடனின் உயரிய மீளச் செலுத்தாமையே உயர் NPL இற்குக் காரண மாகின்றது. EPF அடிப்படையிலான வீடமைப்புக் கடன் நீங்கலாக வங்கியின் NPL விகிதமானது 10.34%. ஆகப் பதிவாகியுள்ளது. மேற்படி தொழில்துறைச் சராசரி NPL ஆனது கீழ்மட்ட மற்றும் நடுத்தர வருமான வீடமைப்பு நிதிச் சந்தையின் மீதான அவதானம் காரணமாக ஏற்படும் கடன் அபாயத்தைப் பிரதிபலிக்கின்றது. HDFC வங்கியின் முகாமைத்துவமானது NPL அதிகரித்துச் செல்வதைக் குறைப்பதிலும், NPL ஐக் கையாளுவதை ஒரே திணைக்களத்திடம் ஒப்படைக்காது அதனை ஜனநாயகப்படுத்துவதில் தன்னை அர்ப்பணிக்கின்றது.

மனித மூலதனம்

தொழிலாளர் சட்டங்களுடன் இணங்கும் நிலைமை

HDFC வங்கியானது பிரயோகிக்கக் கூடிய தொழிலாளர் சட்டங்களுடன் முழுமையாக இணங்குவதுடன் சகல சட்டரீதியான ஊழியர் தொடர்பான கட்டணங்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவு உள்ளடங்கலான உரிய நேரத்தில் செலுத்தப்படுகின்றது. வங்கியானது ஏதேனும் பிரயோக தொழிலாளர் சட்டமொன்றுடன் இணங்காமைக்கு அல்லது இணங்காமைத் தாமதம் ஏற்படுவதற்கு எந்தவொரு தண்டப்பணத்திற்கு முகங்கொடுக்காது.

HDFC மனித வளக் கொள்கை

2018 ஆம் ஆண்டில், வங்கியினது அதிகமான மனிதவளக் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்கொள்கைகள் மத்திய வங்கி வழிகாட்டல்களை பிரதிபலிப்பனவாகவுள்ளன.

புதிய கூட்டு ஒப்பந்தம்

2018 டிசம்பரில் HDFC வங்கியானது வங்கியின் தொழிற்சங்கத்துடன் 2018-2020 வரையிலான மூன்று வருடங்களுக்கு ஒரு புதிய கூட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுளது. பெருநிறுவன முகாமைத்துவம் உள்ளடங்கலாக வங்கியினது நிரந்தர ஊழியர்களில் (99.7%) ஆனோர் இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கத்தினது உறுப்பினர் ஆவர். புதிய கூட்டு ஒப்பந்தத்திற்கான 2018 பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் தொழிற்சங்கத்தினது முழு ஒத்துழைப்பும் பெறப்பட்டது.

கூட்டு ஒப்பந்தத்தின் பிரதான பண்புகள் பின்வருமாறு:

1. உடன்பட்ட சம்பள அதிகரிப்பை 3 வருட காலப்பகுதிக்கு தாங்கிக் கொள்ளுதல்
2. சகல ஊழியர்களையும் ஊக்குவிப்பதனையும் வங்கியின் தந்திரோபாயத்திற்கு ஆதரவளிப்பதனையும் நோக்கமாகக் கொண்ட செயலாற்றலுடன் தொடர்புடைய ஊக்குவிப்புக் கொடுப்பனவை உள்ளடக்குதல்



CBEU இனது EXCO, HDFC

பயிற்சியும் அபிவிருத்தியும்

வங்கியானது பயிற்சி மற்றும் அதன் ஊழியர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு 2018 இல் ரூபா 8 மில்லியன்களைச் செலவிட்டுள்ளது. பயிற்சி நிகழ்ச்சிகளில் 98% ஆனவை நிறைவேற்றுதர மற்றும் ஏனைய ஆளணியினரை உள்ளடக்கிய அதேவேளை, 2% ஆன பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2018 இல் மொத்தப் பயிற்சி முதலீடு

வகுதி	%
பயிற்சியும் புலமைப்பரிசிலும் (ரூபா மில்)	6.88
வேளிநாட்டுப் பயிற்சிச் செலவுகள் (ரூபா மில்)	1,16

2018 இல் பயிற்றப்பட்ட ஊழியர்களின் சதவீதம்

வகுதி	%
பெருநிறுவன முகாமைத்துவமும் சிரேஷ்ட முகாமைத்துவமும்	2.00%
நிறைவேற்றுத்தர மற்றும் ஏனைய பணியாளர்கள்	98.00%

2017 மனித மூலதன மாற்றல்கள்

சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் நன்மைகளைப் பிரதிபலித்து ஊழியரொருவருக்கான கிரயம் தொடர்ந்தும் அதிகரித்துள்ளது.

வருடம்	2016	2017	2018
ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை	679	647	640
ஒரு ஊழியருக்கான கிரயம் (ரூபா மில்லியன்கள்)	1.31	1.45	1.73

2017 இலும் 2018 இலும் மொத்த ஊழியரும் ஊழியிர் வகைகளும்

வகை	2017		2018	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
நிரந்தர	259	200	299	224
அமைய	70	32	26	8
ஒப்பந்த	23	13	19	10
பயிலுநர்	48	2	53	1
மொத்தம்	400	247	397	243

2017 இலும் 2018 இலும் மொத்த ஊழியரும் பாலினமும்

வகுதி	2017		2018	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
பெருநிறுவன முகாமைத்துவம்	9	4	8	4
சிரேஷ்ட முகாமையாளர்கள்	5	8	6	7
பிராந்திய முகாமையாளர்கள்	6	1	6	1
நிறைவேற்றுத்தர ஆளணியினர்	85	118	85	117
நிறைவேற்றுத்தரமல்லா ஆளணியினர்	172	109	168	110
வியாபார மேம்படுத்தல் உதவியாளர்கள்	46	4	46	3
கனி'ட வியாபார மேம்படுத்தல் உதவியாளர்கள்	29	1	25	-
வியாபார மேம்படுத்தல் பயிலுநர்கள்	48	2	53	1
மொத்தம்	400	247	397	243

தொழில் நன்மைகள்

HDFC ஊழியர்கள் ஊழியர் வகைகளுக்கேற்ப பல்வேறு உயர்மட்ட நன்மைகளைத் தொடர்ந்தும் பெற்று வருகின்றனர்.

நன்மை	நிரந்தர	தற்காலிக	ஒப்பந்த	பிபீடீ
மருத்துவ நன்மைகள்	√	√	-	-
வீடமைப்புக் கடன்கள்	√	-	-	-
இடர்க் கடன்	√	-	-	-
உத்தரவாதக் கடன்	√	√	-	-
மோட்டார் சைக்கிள் குத்தகை	-	-	-	√
ஊக்குவிப்புத் தொகை	√	√	√	√
எஞ்சிய லீவிற்கான கொடுப்பனவு	√	√	√	-
வாழ்வாதாரக் கொடுப்பனவு	√	√	√	√
இடர் கொடுப்பனவு (காசாளர் மற்றும் கையடக்கம் மட்டும்)	√	√	√	√
தரகுப் பணம்	-	-	-	√
வாகனக் கடன்	√	-	-	-
பண்டிகை கொடுப்பனவு	√	√	√	-
க'டப் பிரதேச கொடுப்பனவு	√	-	-	-
மதிப்பூதியம்	√	-	-	-
திறப்பு கையாளல் கொடுப்பனவு (பாதுகாப்பு திறப்பு)	√	-	-	-
கிளை முகாமையாளர் கொடுப்பனவு	√	√	-	-
இரண்டாம் நிலை அலுவலர் கொடுப்பனவு	√	√	-	-

சமூக மூலதனம்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினது சமூகமூலதனமாவது நம்பகமான வியாபாரக்குறியும் நன்மதிப்பு மிக்க அங்கீகாரமும் ஆகும். பொதுமக்களிடையே அதன் அந்தஸ்து மற்றும் நம்பகத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்காக வங்கியானது அதன் சேவை வழங்கல் ஊடகங்களையும் பொருட்களையும் சேவைகளையும் பயன்படுத்துகின்து. சமூக அங்கீகாரம் மற்றும் ஒன்றிணைந்த வியாபாரக்குறிக்கான நற்பெயரையும் பெற்றுக் கொள்வதற்காக வருடம் பூராகவும் ந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி மற்றும் அதன் கிளைகளும பொதுமக்களுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடிய பல்வேறு பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

உரிய நேரத்தில் அரசாங்கம் தலையிடத் தவறுவதால், கடன் தரப்படுத்தலானது BBB- இலிருந்து BB+ இற்கு வீழ்ச்சியடைந்த போதிலும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2018 ஆம் ஆண்டில் அதன் சமூக மூலதனத்தை வலுப்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளது. நிதிச் சேவைச் சந்தைகளின் உயர் போட்டி மிகுந்த தன்மை காணப்பட்ட போதிலும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது தொடர்ந்தும் அதனது வைப்புத் தளத்தினை விரிவுபடுத்தி கடன் வழங்கும் பரப்பெல்லையை வளர்த்து, வங்கி மீதான பொதுமக்கள் நம்பிக்கையை போதியளவில் விளக்குகின்றது.

சேவைத் தடங்கள்

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன கிளைகள்

2017 ஆம் ஆண்டிலிருந்து வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனக் கிளைகளின் எண்ணக்கை 39 ஆக மாறாதிருக்கின்றது. இதற்குக் காரணம் 2018 ஆம் ஆண்டில் மூலதனப் பற்றாக்குறை காரணமாக வங்கியானது கிளை விரிவாக்கத்தினை துரிதப்படுத்த முடியாது போனமையாகும். எவ்வாறாயினும், வங்கி மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக தலைமையகம் மற்றும் கிளைகளில் வங்கியினது திளனடிப்படை மேம்படுத்துவதற்காக பிரதான ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்த அதேவேளை, சேவைத் தராதரங்களை மேம்படுத்துவதற்காக தலைமையகம் மற்றும் கிளைகளின் பணியாட்டொகுதியினருக்கு பயிற்சி வழங்குவதில் தொடர்ந்தும் கவனம் செலுத்துகின்றது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக் கிளைகளானவை பிராந்திய அலுவலகங்களுக்கு அதிகரித்த அதிகாரங்களுடன் கொத்தணி மாதிரியில் மீள்ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் மையப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன நடமாடும் வங்கியியல்

2018 டிசம்பர் முடிவில், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன கையடக்க வங்கி அணியானது 106 ஆளணியினரைக் கொண்டதாகும். உயர்ந்தளவில் தனிப்பயனாக்கப்பட்ட, வாசற்படிச் சேவையான இது இதன் உயர்ந்தளவிலான வாடிக்கையாளர் சௌகரியம் காரணமாக விசேடமாக சிறு வியாபாரிகளிடத்தே மிகவும் பிரபல்யமிக்க சேவையொன்றாக வளர்ந்து வருவதுடன் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன கையடக்க வங்கியியலாளர்கள் இது கிராமிய மற்றும் நகர வாடிக்கையாளர் துண்டங்களை ஊடுருவிச் செல்வதில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

தனிப்பயனாக்கப்பட்ட தன்னியக்க வங்கி (ATM) சாவடிகள்

கூட்டத்திலிருந்து வெளியே நிற்பதற்கு புதிய துடிப்பாற்றல் மிக்க நிறக்கலவைகளுடன் தலைநிமிர்ந்து நிற்பதற்கு 17 வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன ATM கியோஸ்க்கள் வழங்கப்பட்டுள்ளன. இம்முயற்சியானது HDFC வியாபாரக் குறியினை மேலும் இளமையான மற்றும் நவீன நிலைப்படுத்தலுக்குக் கொண்டு வருவதற்குப் பங்களிப்புச் செய்யும் அதேவேளை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன ATM களை வேறுபடுத்துவதற்கும் HDFC வியாபாரக் குறியின் புலப்பாட்டினை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கின்றது.

கடன் சந்தைப்படுத்தல் அலகு

ஹைட் பார் கோர்னரிலுள்ள விசேட வங்கி மத்திய நிலையமானது ,இறுதி வாடிக்கையாளரின் வசதிக்குப் பொருத்தமான சூழலை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளர் வங்கிக்கு வரும்வரை காத்திராது வாடிக்கையாளரை அவர்களது சொந்த இடங்களில் சந்தித்தல் ஆகியவற்றிற்கு மூலம் வாடிக்கையாளரைக் கவருவதற்காகத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

HDFC இணையத்தளம்

மேலும் அதிநவீன இணையத்தளத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் HDFC வங்கியானது அதன் இலத்திரனியல் வங்கி இயலுமைகளை மேம்படுத்தி வருகின்றது. வங்கியானது அதன் டிஜிடெல் அரங்கினை விரிவுபடுத்துவதன் மூலமாகவும் மேலும் அதிகமான டிஜிடெல் கொடுக்கல் வாங்கல்களை இயலச் செய்வதன் மூலமாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்துவதனூடாக அதன் சமூக மூலதனத்தை கட்டியெழுப்ப எண்ணியுள்ளது.

வங்கியானது அதன் இணையத்தளத்தை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான விற்பனையாளரைத் தெரிவுசெய்யும் செய்முறையில் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

புதிய பொருட்கள்

HDFC வங்கியானதுஅதன் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துவதற்காக 2018 இலும் 2019 இலும் சந்தைக்குப் புதிய பொருட்களைத் தொடர்ந்தும் அறிமுகப்படுத்துகின்றது.

செட் போ லைப்

2018 மார்ச் மாதத்தில், HDFC வங்கியானது இளைஞர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட தனித்துவமான செல்வ உருவாக்கல் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. வங்கியினது தற்போதுள்ள ஓய்வூதிய காப்புறுதி முதலீட்டுத் திட்டம், செட் போ லைப் ஆகியவற்றை இளைஞர்களுக்கு அவர்களது எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்காக நீடிக்கப்பட்டுள்ளது. திட்டமானது ஏனைய பல நன்மைகளையும் வழங்குகின்றது.

ரத்னாபிமானி செயற்றிட்டத்திற்கான அனுபந்தம்

HDFC வங்கியானது தொழிற்பயிற்சி மற்றும் திறனபிருத்தி அமைச்சுடன் இணைந்து 'ரத்னாபிமானி' எனும் ஆயள் காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டமானது தனித்துவமானதும் அதன் காப்புறுத்துவொருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உயர்மட்ட நன்மைகளை வழங்குவதும் ஆகும். இத்தனித்துவமிக்க பொருளுக்கான காப்புறுதிப் பங்காளர் பெயர் பெர்ஸ்ட் இனசூரன்ஸ் ஆகும்.

2018 ஆம் ஆண்டில் வங்கியானது காப்புறுதி நன்மைகளை வழிப்படுத்தவும் வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்துவதற்காக காப்புறுதித் திட்டத்தினது பல்வேறு அம்சங்களை வலுப்படுத்தவும் பெயர் பெர்ஸ்ட் இன்சூரன்சுடன் ஒரு அனுபந்தத்தைக கைச்சாத்திட்டது.





சந்தைப்படுத்தலும் வியாபாரக் குறியிடலும்

HDFC வங்கியானது பொதுமக்களிடையே அதன் பொருட்கள் சேவைகளை மேம்படுத்துவதற்கு அதன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பிரச்சாரங்களை மீயாள்வாண்டில் பராமரித்தது. அத்துடன் புதிய பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கு பல புதிய பிரச்சார நடவடிக்கைகளை நடாத்தியது. வங்கியானது அதிக இணைய, சமூக வலைத்தள நடவடிக்கைகள் மூலமாக அதனது டிஜிடெல் இருப்பனை மேம்படுத்துகின்றது.

கண்காட்சிகள்

மேம்படுத்தல் பிரச்சாரங்களக்கு மேலதிகமாக வங்கியானது BUILD SRI LANKA மற்றும் INCO கண்காட்சியில் HDFC இனால் வழங்கப்படும் பொருட்கள் சேவைகளினது பரந்த வரிசை பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் HDFC வங்கியினது வியாபாரக் குறிப் புலப்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் பங்குபற்றியது.



2018 இல் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (ஊளுசு) நடவடிக்கைகள்



வங்கிக் கடன் வாடிக்கையாளர்களுக்கு ஆயுள் மற்றும் முழு நிரந்தர அங்கவீனம் ஆகியவற்றிற்கு வழங்குவதற்காக சணச காப்புறுதிக் கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது. இது வங்கியின் கடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது குடும்பங்களுக்கும் மேலும் நிதிப் பாதுகாப்பினை வழங்குவதற்கானதொரு பெறுமதி சேர் சேவையாகவிருக்கும்.



வங்கியினது சிறுவர் சேமிப்புக் கணக்குகளை மேம்படுத்துவதற்காக வங்கியினால் உலக சிறுவர் தினத்தன்று ஒரு விசேட நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. லேக் ஹவுஸின் மிஹிர பத்திரிகையுடன் இணைந்து சிறுவர்களுக்கான ஒரு போட்டியை ஏற்பாடு செய்து வெற்றியாளர்களுக்கு HDFC தலைமையகத்தில் நடைபெற்றதொரு வைபவமொன்றில் பரிசுகள் வழங்கப்பட்டன.

சமூக மூலதனம்

HDFC பெருநிறுவன மற்றும் அபிவிருத்தி நிதி

HDFC பெருநிறுவன மற்றும் அபிவிருத்தி நிதிப்பிரிவானது நாட்டிலுள்ள சிறிய நடுத்தர முயற்சியாண்மைகளுக்கும் பெருநிறுவனத் துறைகளுக்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிபுணத்துவ நிதிச் சேவை வழங்குநர் ஆவார். இக்கடன் எல்லைகள் HDFC வங்கியினது 2017 முதல் 2020 வரையிலான கூட்டாட்சித் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காகக் தயாரிக்கப்பட்டுள்ளது. இது வீடமைப்பு அல்லாத கடன்களை 25%. இனால் வளர்ப்பதனூடாக பரப்பெல்லை இடரை மீள்சமப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது.

வங்கியினது நுண்ணிதித் திணைக்களமானது 2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் சிறிய நடுத்தர முயற்சியாண்மைக்கு மேலும் ஆதரவளிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு அது அபிவிருத்திக் கடன் பிரிவாக மாற்றப்பட்டது. திணைக்களமானது 2017 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பெருநிறுவன மற்றும் அபிவிருத்தி நிதி திணைக்களமாக வங்கியினது பல்வகைமைப்படுத்தல் தந்திரோபாயத்தின் பாகமொன்றாக பெருநிறுவன நிதியிடலை உள்ளடக்குவதற்காக சீரமைக்கப்பட்டது. நுண்கடனில் நிருவாக செயற்றிறனை மேம்படுத்துவதற்காக, தனிப்பட்ட நுண்கடன்கள், வங்கிக் கடன்கள், பெருநிறுவனக் கடன்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தாங்கும் செலவு மற்றும் இடர்களுக்குப் பதிலாக நிபுணத்துவம் வாய்ந்த நுண்ணிதியியல் நிறுவனங்கள் அவற்றை தமது வாடிக்கையாளர்களிடையே மீள்கடன் வழங்குவதற்காக ர்னுகுஊ வங்கியானது பிரபல்யமிக்க நுண்ணிதியியல் நிறுவனங்களுக்காக மொத்த நுண்கடன் மாதிரியினை ஏற்றுக் கொண்டது.

	2017	2018	% வேறுபாடு
நுண்கடன் (ரூபா)	55,050,000	19,150,000	-65%
சிநமு கடன்கள் (ரூபா)	481,660,000	275,695,000	-43%
கடன்கள் (ரூபா)	613,500,000	954,003,274	56%

நுண்கடன்நிறுவனங்களில் மொத்த வழங்குகையானது 2017 ஆம் ஆண்டினை விட 2018 இல் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் SME வழங்கல்கள் மத்திய வங்கியினால் சில சலுகைக் கடன் வசதிகள் நிறுத்தப்பட்டமையால் குறைவடைத்துள்ளன. எவ்வாறாயினும், HDFC இனது சொந்த கடன் வசதிகள் சிநமு நிதியிடலைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன. சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மற்றும் அதிகரித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வு கூட்டுப் பொறுப்பு நிதிப் பரப்பெல்லையானது 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் வங்கியானது பெருநிறுவன நிதி, அபிவிருத்தி நிதி மற்றும் வியாபாரக் கடன்கள் ஆகிய மூன்று கடன் செயற்றிடங்களையும்அபிவிருத்தி நிதிக் கடன் செயற்றிட்டம் எனும் ஒரே தனி கடன் சேவையாக ஒருங்கிணைத்தது. தனிப்பட்டவர்கள், பங்குடைமைகள் மற்றும் கம்பனிகளை உள்ளடக்கும் இந்த புதிய கடன் வசதிகள் பிரதானமாக பெருநிறுவன, சிநமு மற்றும் வியாபார சமூக கடன்களில் கவனம் செலுத்தும். வங்கியானது பொதுவாக வணிக வங்கிகளை விரும்பும் வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட கடன் சந்தைப்படுத்தல் அலகினூடாக சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றது. விவசாயத்துறைக்கு 10% இனை வழங்கும் மத்திய வங்கித் தேவைப்பாட்டுடன் இணங்கும் வகையில், HDFC ஆனது தற்போது இத்துறையில் வியாபாரங்களில் கவனம் செலுத்துகின்றது.

2018 இல் சிநமு களையும் பெருநிறுவனத் துறையையும் மேம்படுத்துவதற்கான விசேட நிகழ்வுகள்

நிர்மாணத்துறையுடன் தொடர்புடைய தேசிய மட்ட கண்காட்சிகளை நடாத்துவதற்கு விசேட சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன.



HDFC ஸ்டோல் SL 2018 இன்கோ - BMICH



HDFC பில்ட் ஸ்டோல் SL 2018 - BMICH




கால்நடைக் காப்பீட்டிற்காக அமானா தகாபுல்லுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல்

வியாபாரத்தின் சகல அம்சங்களிலும் எமது உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வினைத்திறன் மிக்க வியாபார நடைமுறைகளை உருவாக்குவதனை நோக்கி



இடர் முகாமைத்துவ அறிக்கை

“எமது வங்கித் துறையினது வளர்ச்சி மற்றும் நிலைபேற்றினை நோக்கி இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு எம்மை நாம் அர்ப்பணித்துள்ளோம்”



கண்ணோட்டம்

ஒரு அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கியென்ற ரீதியில், HDFC வங்கியானது சகல அக்கறையுள்ளோர் மீதும் அதன் பொறுப்பைப் பிரதிபலித்து, சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்தை நோக்கிப் பயணிக்கும் ஒரு உள்ளகக் கலாசாரத்தைத் தொடர்ந்தும் வளர்த்து வருகின்றது. ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ முறைமைக்கு ஆதரவளிக்குமுகமாக வங்கியின் சகல முக்கியமான மற்றும் பொருத்தமான இடர் வகுதிகளுக்கான இடர் பரப்பெல்லைகளும் இடர் மூலதன நிலைமைகளும் மீள்திருத்தப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. தொடர்ந்து வரும் மீளாய்வுகள் மற்றும் திருத்தங்களின் விளைவாக, ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினைச் சீர்திருத்தும் அதேவேளை, வங்கியானது இடர் முகாமைத்துவத்தின் அன்றாட விடயங்களைக் கணக்கிட்டு, முகாமை செய்து, அறிக்கையிட்டு மேம்படுத்துவதற்காகவும் இடர் முகாமைத்துவ கலாசாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. வங்கியின் இருதயமாகிய வியாபார மற்றும் இடர் முகாமைத்துவப் பொறுப்புக்களானவை வங்கி முழுவதிலும் சீரமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, வங்கியினது வளர்ச்சித் தந்திரோபாயத்துடன் இடர் முகாமைத்துவமானது ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. உறுதியானது இடர் உரிமைக் கலாசாரமானது பொறுப்புக் கூறும் கலாசாரத்தை மேம்படுத்துவதுடன் வியாபார நிலைபேற்றிற்குப் பங்களிப்புச் செய்கின்றது என நாம் நம்புகின்றோம்.

இடர் கலாசாரம்

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது (IRMF) உறுதியான இடர் கலாசாரத்திலேயே வெகுவாகத் தங்கியுள்ளது. வங்கியினது நாளாந்த செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் உத்தேச இடர்களை வினைத்திறன்மிக்க முறையில் அடையாளங் கண்டு முகாமை செய்வதற்கு உதவும் செயற்றிறன் வாய்ந்த புத்துசாதுர்ியமிக்க கலாசாரமானது நிலைபேறான அடிப்படையில் எமது நடுத்தரம் முதல் நீண்டகாலம் வரையிலான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திறவுகோல் என நாம் நம்புகின்றோம். சகல செயற்பாடுகளிலும் வலுவான இடர் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என தொடர்ச்சியாக இடர் கலாசாரத்தை மதிப்பீடு செய்யப்படுவதுடன் எமது ஊழியர்கள் பணியாற்றும், சிந்திக்கும் மற்றும் சவால்களுக்குப் பிரதிபலிப்புச் செய்யும் முறையில் இடர் முகாமைத்துவமானது கைமாறுகின்றது என்பது உறுதிப்படுத்தப்டும்.

இடர் ஆளுகைக் கட்டமைப்பு

பணிப்பாளர் சபை மற்றும் அதன் குழுக்களால் வழங்கப்படும் ஒட்டுமொத்த இடர் மற்றும் கட்டுப்பாட்டுக் கண்காணிப்பிற்கு வெளிப்படையான இடர் அறிக்கையிடல் மற்றும் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கானதொரு சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்றையும் HDFC ஆனது இடர் ஆளுகையானது தன்னகத்தே கொண்டுள்ளது. பிரதான நிறைவேற்று அலுவலரும் சிரேஷ்ட நிறைவேற்றுக் குழுவும் வங்கியினது இடர் பரப்பெல்லையினது நீண்ட கால வழிகாட்டலையும் அதன் வியாபார பிரயோகத்தினையும் தீர்மானிப்பர். தலைமை இடர் அலுவலரின் தலைமையிலான இடர் முகாமைத்துவமானது இடர் தந்திரோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கையை வகுப்பதுடன் பரந்தளவிலான மற்றும் செயற்றிறன் வாய்ந்த இடர் முகாமைத்துவ அணுகுமுறைக்கான சுயாதீன மேற்பார்வையினையும் வழங்கும். இடர் முகாமைத்துவக் கொள்கைகள் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினை வகுப்பதற்கும் அதன் வினைத்திறனைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்குமான இறுதி மற்றும் கூட்டுப் பொறுப்பானது பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

வங்கி முகங்கொடுக்கும் சகல இடர்களையும் எல்லா நேரங்களிலும் முகாமைத்துவமானது முழுமையாக மதிப்பீடு செய்து, கண்காணித்துக் கட்டுப்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான மேற்பார்வையினை பணிப்பாளர் சபையானது வழங்குகின்றது. இதனை அடைந்து கொள்வதற்கு, ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான பணிப்பாளர் சபை உப குழுவானது வங்கியினுள் நிலவும் இடர்களை அடையாளங் கண்டு, மதிப்பிட்டுக் கட்டுப்படுத்துவதற்கு ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைப் (IRMF) பிரயோகிக்கின்றது. ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றில் (IRMF) வங்கி முழுவதிலும் இடரை வினைத்திறனாக முகாமை செய்வதற்கு அவசியமான முக்கிய பாத்திரங்களாகவும் பொறுப்புக்களாகவும் விளங்கும் □மூன்று பாதுகாப்பு வரிகள் (three lines-of defence)□ ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றின் (IRMF) மையத்தில் காணப்படுகின்றது.

HDFC இனது மூன்று வரியிலான இடர் முகாமைத்துவம்



பாதுகாப்பின் முதல் வரியானது இடர் திணைக்களத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்புடன் தொடர்புடையதாகும்.

இடர் திணைக்களமானது வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபை / பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு மற்றும் ஏனைய நிறைவேற்றுக் குழுவுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக செயற்பாட்டு மட்டங்களில் அளவிடுவதற்கும் கண்காணிப்புச் செய்வதற்கும் பொறுப்பாகவிருக்கும். இத்திணைக்களமானது, பொருள் அல்லது வியாபாரத் தந்திரோபாய அபிவிருத்தியிலும் புதிய வியாபார வழிகளில் ஈடுபடுவதிலும் ஆரம்ப வடிவமைப்புக் கட்டம் முதல் இடர் முகாமைத்துவக் கண்ணோட்டம் பூராகவுமுள்ள செய்முறையிலும் ஈடுபடுகின்றது.

பாதுகாப்பின் இரண்டாவது வரியாவது சொத்து மற்றும் பொறுப்புக் குழு, கடன் குழு, முதலீட்டுக் குழு, தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு, ICAAP மீளாய்வுக்குழு, தந்திரோபாயச் செய்முறை நடைமுறைப்படுத்தல் குழு உள்ளடங்கலாக பல முகாமைத்துவக் குழுக்களினூடாக அமுல்படுத்துகின்றது. இக்குழுக்களின் பொறுப்புக்களும் பணிகளும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் குறிப்பு விதிமுறைகளினால் நிர்ணயிக்கப்படுவதுடன் ஒவ்வொரு குழுவினதும் உறுப்பாண்மையானது, வியாபாரம் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் உச்ச சமநிலையைக் கொண்டுவருவதற்காக வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த உயரிய நிலையில், சுயாதீன இடர் கண்காணிப்புச் செயற்பாடு, சரிபார்ப்பு, கொள்கை மீளாய்வு மற்றும் இணக்கச் செயற்பாடானது பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)இ பணிப்பாளர் சபைக் கணக்காய்வுக் குழு மற்றும் தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல் குழு ஆகியவற்றினால் அமுல்படுத்தப்படும்.

பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)

பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) இடர் முகாமைத்துவச் செயற்பாட்டினை மேற்பார்வை செய்யும் பணிப்பாளர் சபை உபகுழுவாகும். பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகைத் தேவைப்பாடுகளைக் கூட்டிணைக்கும் பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கான (BIRMC) சமவாயத்தில் வகுக்கப்பட்ட பொறுப்புக்களின் கீழ் செயற்படுகின்றது. பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) கடன் இடர், சந்தை இடர், செயற்பாட்டு இடர், இணையப் பாதுகாப்பு இடர் மற்றும் திரவத்தன்மை இடர் உள்ளடங்கலான வங்கி முழுவதற்குமான இடர் முகாமைத்துவத்திற்கான கொள்கைகளை வகுத்துள்ளது.

பணிப்பாளர் சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையாவது சந்தித்து இடர் தகவல்கள் மற்றும் வெளிப்பாடு பற்றி மீளாய்வு செய்யும். இடர் அறிக்கையிடலில் வங்கியின் மூலதனம், இடர் பரப்பெல்லை, வரையறை நிலைமை, அழுத்த சோதனை, வங்கியினால் முகங்கொடுக்கப்பட்ட ஏதேனும் தந்திரோபாய இடர்கள் பற்றிய அறிக்கைகள் உள்ளடங்கும். அதற்கு மேலதிகமாக, அவற்றுள் கடன் இடர், சந்தை இடர், திரவத்தன்மை இடர், செயற்பாட்டு இடர், தகவல் முறைமைகள் பாதுகாப்பு இடர் மற்றும் இணக்க இடர் போன்ற பிரதான இடர் பரப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இடர் பரப்பெல்லையும் சகிப்புத்தன்மையும்

இடர் பரப்பெல்லை என்பது வங்கியானது அதன் நோக்கங்களில் ஏற்றுக் கொள்ளத் தயாராகவுள்ள உயர்ந்தபட்ச இடர் மட்டமாவதுடன் அது ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள், கடன் ஒப்பந்தங்கள் மற்றும் விவேக நோக்கங்களுக்கான உள்ளக எல்லைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இடர் பரப்பெல்லை மற்றும் சகிப்புத்தன்மை மட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் சகல மூன்று மட்டங்களிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் இடர் முகாமைத்துவமானது முன் நிர்ணயிக்கப்பட்ட சகிப்பு மட்டங்களினுள் கண்காணிக்கப்படும். வங்கியானது எதிர்கால பேரினப் பொருளாதார அதிர்ச்சிகளுக்கு முகங்கொடுக்க முடியுமாகவுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கே அழுத்த சோதனை நடாத்தப்பட்டது.

இடர் சகிப்பு எல்லை மீறப்படுகையில் அல்லது அது வங்கியினால் விரும்பத்தகாத மட்டங்களை அடையும் போது, ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையினுள் வெளிப்பாட்டு மட்டங்களை மீண்டும் கொண்டு வருவதற்கு இடர் கட்டுப்பாட்டு மற்றும் வியாபாரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகையால், இடர் பரப்பெல்லையும் சகிப்புத்தன்மையும் புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட வரையறைகள் அல்லது மூலதனம், வருமான ஏற்ற இறக்கம் மற்றும் அபாயங்களின் செறிவு போன்ற தரரீதியிலான பரிமாண சோதனைகள் போன்ற செயற்பாட்டு நடவடிக்கைகளாக மாற்றப்படும்.

இடர் முகாமைத்துவ அறிக்கை

அழுத்தச் சோதனை
எமது இடர் முகாமைத்துவச் செய்முறையில் அழுத்த சோதனையானது இன்றியமையாத பாகமாகும். இது பாதகமான பேரினப் பொருளாதாரச் சூழலுக்கு வங்கியின் சாத்தியமான ஏதுநிலையை அடையாளங்கண்டு, அத்தகைய பாதக நிகழ்வு நிகழுவதற்கு முன்னர், அவற்றைக் கட்டுப்படுத்துவதாகும். உயர்ந்தளவு உணர்திறன் கொண்ட வியாபாரங்களாகிய கடன்வழங்கல், வட்டி உணர்திறன் சொத்து/ பொறுப்பு மற்றும் திரவத்தன்மை போன்றவற்றிற்கு பரப்பெல்லை குறிப்பிட்ட அழுத்த சோதனையானது காலாண்டுரீதியாக நடாத்தப்படும் அதேவேளை, சகல பிரதான இடர் வகுதிகளுக்கும் குறைந்தபட்சம் காலாண்டு ரீதியான அழுத்த சோதனையானது நடாத்தப்படும். அழுத்த சோதனையின் பெறுபேறுகள் வங்கியின் இடர் எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் வரையறை வகுத்தலுக்குப் பயன்படுத்தப்படும். உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறையுடன் (ICAAP) தொடர்புபட்ட வகையில் வழமையான அழுத்த சோதனை நடாத்தப்படும். சகல அழுத்த சோதனைகளும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு பலதரப்பட்ட சூழ்நிலைகளுக்கான சகல கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் விபரதாக பதியப்பட்டு முகாமைத்துவக் குழுக்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றது.

எமது பிரதான இடர்கள்
நிலைபேறாக வளருவதற்கான எமது இயலுமையைப் பாதிக்கும் பிரதான இடர்களை நாம் ஆய்வுசெய்து அடையாளங் காண்பர். இவ்விடர்கள் எமது ஒட்டுமொத்த இடர் கட்டுப்பாட்டுத் தந்திரோபாயங்களின் மைல்கற்களாகவுள்ளதுடன் அவை வங்கியினது ஒன்றிணைந்த இடர் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பில் நடைபெறும் மேம்பாடுகளுடன் தொடர்ச்சியான கண்காணிப்பில் கீழிருக்கும்.

கடன் இடரும் கடன் பரப்பெல்லை இடரும்	நேே விகிதம் (ஊசேநி இல்லாது)	உத்தரவாதக் கடன்களுக்கான கடன் செறிவு	சேத உள்ளடக்கம்	பரப்பெல்லை வரையறைகள் கிளைக்
திரவத்தன்மை இடர்	நிலையான வைப்புச் செறிவு	மொத்த சொத்துக்களுக்கான முதலீடுகள்	நிலையான திரவச் சொத்து விகிதம்	திரவத்தன்மை உள்ளடக்க வீதம்
வட்டி வீதமும் சந்தை இடரும்	நிலையான வைப்பு தவணைக் கட்டண AWPR	நிலையான வைப்புக்களுக்கான கடன்கள்	வட்டி வருமானத்திற்கான வட்டிக் கிரயமும்	மொத்த சொத்தக்களுக்கான கடன்கள்
செயற்பாட்டு மற்றும் ஏனைய இடர்கள்	தகவல் தொழில்நுட்ப மதிப்பீடு	கிளைக் கணக்காய்வு (குறைந்த வீத சதவீதம்)	ஐந்தொகையில் வளர்ச்சி (ஆ/ஆ)	தலா இலாபம் (ரூபா)- ஒருமாதத்திற்கு
கடனிறுக்க வகையற்ற இடரும் மூலதனமும்	குறைந்தபட்ச மூலதனக் குறைபாடு	மூலதன போதியதன்மை விகிதம்	மொத்த சொத்து விகிதத்திற்கான உரிமையாண்மை	இடரினால் நிறையிடப்பட்ட சொத்து விகிதம்

பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் இடர் அறிக்கையிடலின் பரப்பெல்லையும் பிரதான உள்ளடக்கமும்

இடர் வகை	இடர் அறிக்கையிடலின் பரப்பெல்லையும் பிரதான உள்ளடக்கமும்
ஒட்டு மொத்த இடர்	• உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ஐஊயுபீ) மீளாய்வு
	• ஒட்டு மொத்த இடர் வரையறையுடன் ஒப்பிடுகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மூலதன போதியதன்மை நிலைமை மற்றும் போக்குகள் ஒழுங்கமைக்கப்பட்ட மதியுரை/ உள்ளகக் கட்டுப்பாட்டு வரையறைகள் உள்ளடங்கலாக
	• பிரதான இடர்கள் மற்றும் ஒட்டுமொத்த வெளிப்பாடுகளுக்கு அழுத்த சோதனை நடாத்துதல். உயரிய மற்றும் வளர்ந்து வரும் தந்திரோபாய மற்றும் ஒட்டு மொத்த வியாபார இடர் ஆய்வு தொடர்பான அறிக்கைகள்
மூலதன இடர்	• ஒழுங்குபடுத்தும் மூலதனத் தேவையை நிறைவேற்றுதல்
	• மூலதனத் போதியதன்மை விகிதத்தைக் கண்காணிப்புச் செய்தலும் அறிக்கையிடுதலும்
கடன் இடர்	**கடனுக்கு முன்னரான இடர் முகாமைத்துவம்**
	• 2.5 மில்லியனுக்கு மேலான கடன்களுக்கான கடன் இடர் தரப்படுத்தல்
	• கடன் அபாயக் கொள்கைகளும் அதிகாரத்தை வழங்குதலும்
	• கடன் இடர் முகாமைத்துவக் கொள்கைகளின் மீளாய்வு
	• பணியாட்டொகுதிப் பயிற்சி மற்றும் அறிவினைப் பகிரும் அமர்வுகள்
	• கடன் நிருவாகப் பிரிவின் கீழ் வழங்கலை மையப்படுத்தல்
	கடனுக்குப் பின்னரான இடர் முகாமைத்துவம்
	• கடன் மீளாய்வுப் பொறிமுறை
	• சரிபார்ப்புப் பெறுபேறுகள் மற்றும் இடர் தரப்படுத்தல் மாதிரிகள் பற்றிய அறிக்கை
	• இடர் பரப்பெல்லையைக் கண்காணித்தல்
	• கண்காணிப்புப் பட்டியலை மீளாய்வு செய்தல்
	• புதிய இடரை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் பொறிமுறையை நடைமுறைப்படுத்தல்
சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்	• திரவத்தன்மை மற்றும் சந்தை இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல்
	• திரவத்தன்மை மற்றும் திறைசேரி சந்தை இடர் ஆய்வு
	• திறைசேரி மத்திய அலுவலகம் மற்றும் ஏதேனும் எல்லைகளில் மீளாய்வு
	• பேசல் III (BASEL III) தேவைப்பாடுகளின்படி திரவத்தன்மை இடர் கண்காணிப்பு
	• எல்கோவினது ALCO பரிந்துரைகளின்படி மீளாய்வு செய்தல்
செயற்பாட்டு இடர்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முறைமைப் பாதுகாப்பு இடர்	• வியாபாரத் தொடர்ச்சித் திட்டம் மற்றும் அனர்த்தத்திலிருந்து மீளுவதற்கான பயிற்சி பற்றிய அறிக்கை பொறுப்பேற்கப்பட்டுள்ளது.
	• செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல்
	• KRI இன் கண்காணிப்பு அறிக்கையிடல்
	• உள்ளக நட்ட நிகழ்வுகள் மற்றும் வெளிவாரி நிகழ்வுகளால் எழும் இடர்கள்
	• தகவல் தொழில்நுட்ப முறைமை இடர்கள், சட்ட இடர், மக்கள் இடர்
இணக்க இடர்	• ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கமைவாக வங்கியினது இணக்க நிலை
	• பொறுப்பேற்கப்பட்ட இணக்க சோதனையின் பெறுபேறுகள் மற்றும் இணக்க அபாய மட்டங்களின் மதிப்பீடு
	• புதிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய அறிக்கை
	• இணக்கத்துடன் தொடர்பான கொள்கைகளையும் செய்முறைகளையும் மீளாய்வு செய்தல்


இடர் முகாமைத்துவ அறிக்கை

மூலதன முகாமைத்துவம்

அனுமதிப் பத்திரம் பெற்ற வங்கிகளினது குறைந்தபட்ச மூலதனத் தேவையானது ரூபா 5,000 மில்லியன்களாகவிருக்க வேண்டுமெனும் இலங்கை மத்திய வங்கியினால் வகுக்கப்பட்ட நிபந்தனையுடன் HDFC வங்கியானது இணங்க வேண்டும். வங்கியானது மேலதிக நிலை 1 மூலதனத்தைத் திரட்டுவதற்கு நிரந்தரப் பிணையங்களை வழங்குவதற்குப் பொதுத் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது. குறைந்தபட்ச மூலதனத் தேவையை நிறைவேற்றுவதற்கான நீடிக்கப்பட்ட இறுதித் திகதியானது 2019 யூன் 30 ஆகும். வங்கியானது அக்காலக்கெடுவினுள் ரூபா. 5,000 மில்லியன் எல்லையை அடையும். மேலும், உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறையின் (ICAAP) கீழ் அடுத்த மூலதன எல்லையை அடையும் தந்திரோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மூலதன போதியதன்மை முகாமைத்துவம்

மூலதன முகாமை மற்றும் வங்கியின் திரவத்தன்மை ஆகியவற்றை முகாமை செய்வதற்காகத் தற்போது நடைமுறையிலுள்ள புதிய உலகளாவிய ஒழுங்குபடுத்தல் தராதரமே பேசல் III (BASEL III) ஆகும். 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பேசல் III (BASEL III) இன் அறிமுகத்துடன் வங்கிகளின் மூலதனத் தேவைகள் தரம், அளவு, இசைவு மற்றும் மூலதன அடிப்படையின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் அதிகரிக்கப்பட்டு நட்டத்தை உறிஞ்சும் இயல்திறன் மேம்படுத்தப்பட்டது. மேலதிகமாக, பேசல் III (BASEL III) ஒழுங்குவிதிகளின் கீழான நிலை II (மேற்பார்வை மீளாய்வுச் செய்முறை-SRP) ஆனது மூலதன மட்டங்களைப் பராமரிப்பதற்கான தந்திரோபாயமொன்றாக இடர் விபரங்களுடன் தொடர்புடையதாக மூலதனப் போதியதன்மையை மதிப்பீடு செய்வதற்காக வங்கிகள் உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP) எனும் உள்ளகச் செய்முறையை நடைமுறைப்படுத்துகின்றன. வங்கியானது உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறையை (ICAAP) ஆரம்பித்துள்ளதுடன் இது இடர் முகாமைத்துவ நடைமுறைகளையும் மூலதனத் திட்டமிடல் செய்முறையையும் வலுப்படுத்தியுள்ளது. இது அதன் வியாபாரச் செயற்பாடுகளினூடாக சகல தொடர்புடைய இடர்கள் மற்றும் ஒரு எதிர்கால நோக்கிலான மற்றும் மதிப்பிடப்பட்ட இடர் வெளிப்பாடுகளின் மட்டத்தில் அழுத்த



நிலைமைகளையும் உள்ளடக்கும் வங்கியினது மூலதனத் தேவையை மதிப்பிடுவதற்கான பொறிமுறையொன்றினை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றது. உள்ளக மூலதன போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP) வங்கியினது மூலதன இலக்குகள், மூலதன முகாமை நோக்கங்கள் மற்றும் மூலதன அதிகரித்தல் திட்டம் ஆகியவற்றை உருவாக்குகின்றது.

2018 இல் HDFC இல மேற்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ மேம்பாடுகள்

2017 ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலம் முதல் இலங்கையிலுள்ள வங்கிகளால் பின்பற்றப்பட்டு வந்து அதனை 2018 ஆம் ஆண்டிலும் தொடருவதால் பேசல் III (Basel III) HDFC வங்கியின் இடர் முகாமைத்துவ பரப்பெல்லையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது. இவை மேலும் தீவிரமான மற்றும் விரிவான இடர் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைக் குறிப்புக்கள் மற்றும் பேசல் III (Basel III) இற்கு மேலதிகமாக வியாபாரத் தந்திரோபாயத்தில் நடைபெறும் மாற்றங்கள், துறைரீதியான காரணிகள் மற்றும் சர்வதேச மிகச் சிறந்த நடைமுறைகள் ஆகியனவும் மேம்படுத்தல் செய்முறையில் கருத்திற்கொள்ளப்படும். இடர் முகாமைத்துவ முறையின் பிரதான மேம்பாடுகள் கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

- குறித்த காலப்பகுதியில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சகல இடர் முகாத்துவக் கட்டமைப்புக்கள், சமவாயங்கள் மற்றும் நிபந்தனை ஒழுங்குவிதிகள் விசேடமாக புதிய ஒழுங்குவிதிகளிலும் வங்கியின் வியாபார மாதிரியில் விசேடமாகக் கருத்திற்கொள்ளப்படும்.
- இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் பாகமொன்றாக வங்கியானது செலுத்தத் தவறுதல் நிகழ்தகவு (PD), செலுத்தத் தவறுதல் வெளிப்பாடு(ED), செலுத்தத் தவறுதல் நட்ட வழங்குகை(LGD) மற்றும் பேசல் III (Basel III) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் தராதரங்கள (IFRS) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுப் பரிந்துரைக்கப்பட்ட நட்ட விகிதங்கள் ஆகியவற்றை வங்கி கணிப்பிட்டுள்ளது.
- மையத்தில் செயற்படுத்தப்பட்ட சில்லறைக் கடன்கள் தவிர, ஒவ்வொரு கடன் முன்மொழிவும் வியாபாரத் துறையுடன் தொடர்புடாத சுயாதீன

அதிகாரசபையால் மதிப்பிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு புதியதொரு கடன் பணிப்பாய்வானாது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- NPL விகிதங்களைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டு, கடன் உருவாக்கல் செய்முறையானது மீளாய்வு செய்யப்பட்டு, கடன் வழங்குதல் அங்கீகாரத்தை மையப்படுத்தல், கடன் அங்கீகார வழங்கலைக் கட்டுப்படுத்தல் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன.
- பேசல் III (Basel III) இன் கீழ் கடன் வசதிகளுக்கான இடரினை அளவிடுவதற்கும் தரமான வாடிக்கையாளர்களைக் கவருவதற்கும் இடரை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- கடன் இடரை மதிப்பீடு செய்வதன் சுயாதீனத்தை மேம்படுத்துவதற்காக, முன்னெச்சரிக்கைகளை ஆய்வு செய்து கடன் நிருவாகச் செயற்பாடு வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- தேவையானபோது புதிய எல்லைகளை வகுப்பதன் மூலமாக தற்போதைய இடர் பரப்பெல்லையைப் பிரதிபலிப்பதற்கு விவேகமிக்க இடர் எல்லைகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- தொடர்புடைய விகிதங்களை நெருக்கமாகக் கண்காணிப்பதுடன் வைப்புச் செறிவினை முகாமை செய்வதற்காக திரவத்தன்மை இடருக்குப் புதிய எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன.
- சில்லறைக் கடன்களுக்குப் புதிய மதிப்பீட்டு அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை, சிறந்த வேறுபடுத்தல் சக்தியைப் பெறுவதற்காக கடன் தரப்படுத்தல் மாதிரிகளைக் காலத்துக் காலம் சரிபார்த்தல்கள் நடாத்தப்பட்டன.
- பொருளாதார மற்றும் பேரின சூழல் காரணிகளுடன் தொடர்புடைய அழுத்தச் சோதனை உள்ளடங்கலான அழுத்தச் சோதனைக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டது.
- விசேடமாகப் புதிதாக நியமிக்கப்பட்ட கிளை முகாமையாளர்களுக்காக வங்கி முழுவதிலும் செயற்பாட்டு இடர் பற்றிய பணியாட்டொகுதி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

2019 ஆம் ஆண்டிலுள்ள பிரதான இடர் சவால்கள்

தொழில்நுட்ப முன்னேற்றங்கள், புத்தாக்கம் மற்றும் சிக்கலான வங்கியியல் பொருட்கள், தொழில்நுட்ப அடிப்படையிலான ஊழலைக் கட்டுப்படுத்தும் விதிமுறை மற்றும் இணக்கத் தேவைப்பாடுகள், உயர் வரிவிதிப்புக்கள் காரணமாக சேர் பெறுமதி குறைதல் போன்றன வங்கியியல் முறையில் பல சவால்களை அதிகரிக்கின்றன. துறைரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கும் அதேவேளை, HDFC வங்கிக்கு எதிர்வரும் வருடத்தில் தனித்துவமிக்க சவால்கள் காணப்படுகின்றன.

- இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல்
- கடன் தரப்படுத்தலை BB+ (நிலையான) தரத்திலிருந்து முதலீட்டுத் தரத்திற்கு மேம்படுத்தல்
- இணைய பாதுகாப்பினை மேம்படுத்தலும் தகவல் தொழில்நுட்பக் கீழ்க்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தலும்
- செறிவு இடரினைக் குறைப்பதற்காக நிதியிடல் பொறிமுறையினை மீள்கட்டமைத்தல்

இணக்கம் பற்றி தலைவரின் கூற்று

நாம் எமது 2018 ஆம் ஆண்டிற்கான பெருநிறுவன ஆளுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வறிக்கையானது ஆளுகைக் கட்டமைப்பின் அடிப்படைப் பகுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. சபையானது வங்கியினது ஒட்டுமொத்த ஆளுகைக் கட்டமைப்பினையும் வலுப்படுத்துவதற்கு எமது உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை மேம்படுத்துவதைத் தொடர்ந்தும் செய்து வருவதுடன் வினைத்திறன் வாய்ந்த வங்கியியல் செயற்பாடுகளுக்காக பொறுப்புணர்வு மிக்க மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒழுக்கநெறிசார்ந்த கலாசாரத்தினை வகுப்பதன் முக்கியத்துவத்தினையும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

HDFC வங்கியானது வங்கிச் சட்டம், மத்திய வங்கியினது பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல்கள் ஆகியவற்றுடன் இணங்குவதுடன் கொழும்பு பங்குவர்த்தனையின் பிரிவு 7.10 இன் கீழான பட்டியற்படுத்தல் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்து வருகின்றது என்பதை பதிவு செய்து கொள்ள பணிப்பாளர் சபை விரும்புகின்றது.

வங்கியினது பெருநிறுவன ஆளுகைக் கட்டமைப்பானது நன்கு கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் அடிப்படையில் பொறுப்புணர்வு, நியாயம் மற்றும் வெளிப்படை எண்ணக்கருக்களைக் கொண்டுள்ளது. நாம் துறையிலும் நாட்டிலும் உயர்ந்த மட்ட தராதரம் கொண்ட பெருநிறுவன ஆளுகை நடைமுறைகளை அடைந்து கொள்ளப்பாடுபடுகின்றோம்.

பின்வரும் அறிக்கையானது உயர்ந்த மட்ட தராதரம் கொண்ட பெருநிறுவன ஆளுகையை பராமரிப்பதனையும அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும். 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழான (அதனுடைய தொடர்புடைய திருத்தங்கள் உள்ளடங்கலாக) பெருநிறுவன ஆளுகை ஒழுங்குவிதி அணுகுமுறைகளையும் கணக்கிடுகின்றது.

அறிக்கையானது இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமும் இணைந்து 2013 ஆம் ஆண்டு வெளியிட்ட பெருநிறுவன ஆளுகையில் மிகச் சிறந்த நடைமுறைகளுக்கான கோவையுடனான வங்கி மட்ட இணக்கத்தையும் கொண்டுள்ளது.

வெளிவாரிக் கணக்காய்வாளர் மத்திய வங்கியின் கூட்டு ஆளுகை வழிகாட்டலுடன் வங்கியினது இணக்கம் பற்றிய மீளாய்வினை மேற்கொண்டார். கணக்காய்வாளர் அறிக்கையின் உண்மையான சகல கண்டுபிடிப்புக்களும் □தொடர்புடைய சேவைகள் நடைமுறைக் கூற்று பற்றிய இலங்கைத் தராதரம் 4400□ என்பதன் கீழ் வெளியிடப்பட்டு இவ்வறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.



ஆர். எச். மீவக்கல
தலைவர்

கொழும்பு, இலங்கை
2019 மே 17

இணக்க மீளாய்வு

இலங்கை மத்திய வங்கி, இலங்கைப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஆணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்ட 2018 ஆம் நிதியாண்டில் HDFC வங்கியினது பெருநிறுவன ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பிலான இணக்க நிலைமை பின்வருமாறு.

முதலாம் பாகம்

அனுமதிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான மத்திய வங்கியின் கூட்டுப் பொறுப்பாட்சி வழிகாட்டல்களுடனான இணக்கம்
வழிகாட்டல் இணக்க நிலை இல்லை

பிரிவு	பெருநிறுவன ஆளுகைத் தேவைப்பாடு	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படியிலான இணக்க மட்டம்
3(1)	சபையின் பொறுப்புக்கள்	
3(1)(i)	சபையானது வங்கியினது பாதுகாப்பையும் உறுதிப்பாட்டினையும் வலுப்படுத்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியுள்ளன.	
	அ) வங்கியினது தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் பெருநிறுவன விழுமியங்களுக்கு வங்கியினது பணிப்பாளர் சபை அங்கீகாரம் வங்கியினது தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் பெருநிறுவன விழுமியங்களை வங்கி முழுவதிலும் வங்கியானது கலந்துரையாடியுள்ளது.	**இணங்கியுள்ளது** தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் 2017- 2020 வரையிலான சபை அங்கீகாரம் பெற்ற பெருநிறுவனத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டமானது பெருநிறுவனத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் அவையிரண்டும் வங்கி பூராகவும் கலந்துரையாடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன. காலத்திற்குக் காலம் பிராந்திய முகாமையாளர்களுக்கான கூட்டங்கள் நடைபெறும்.
	ஆ) வங்கியினது ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயத்திற்கான சபை அனுமதி. ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயத்தில் ஒட்டுமொத்த இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ செய்முறைகள் மற்றும் பொறிமுறைகள் உள்ளடக்கப்பட்டு அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயத்தில் குறைந்தபட்சம் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குரிய அளவிடக்கூடிய இலக்குகள் உள்ளடங்கியிருக்கும்.	**இணங்கியுள்ளது** 2017- 2020 வரையிலான காலப்பகுதிக்கான ஒட்டுமொத்த வியாபாரத் தந்திரோபாயம் உள்ளடக்கப்பட்ட சபை அங்கீகாரம் பெற்ற பெருநிறுவனத் திட்டம் காணப்படுகின்றது. இடர்க் கொள்கை, இடர் பரப்பெல்லைக் கட்டமைப்பு ஆகியன சபையினால் பெருநிறுவனத் திட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	இ) சபையினால் அடையாளங் காணப்பட்ட இடர்களை முகாமை செய்வதற்குக் காணப்படும் முறைகள் பொருத்தமாகவிருப்பதுடன் அவை புத்திசாதுரியமிக்கவையாகவும் உள்ளதுடன் அவை முறையாக அமுல்படுத்தப்படுகின்றன.	**இணங்கியுள்ளது** இடர் திணைக்களமும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவும் நிறுவப்பட்டுள்ளன, குழுவினால் பின்பற்றப்படும் இடர் கொள்கையானது மேலே தரப்பட்டவாறானதாகவிருக்கும். ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது ஆளுநர் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பிரதான இடர்களை முகாமைசெய்தல் என்பவற்றில் ஈடுபடும்
	ஈ) வைப்பாளர்கள், கடன்கொடுத்தோர், பங்குதாரர்கள் மற்றும் கடன்பட்டோர் உள்ளடங்கலான சகல அக்கறையுள்ளோருடனும் சபையானது ஒரு தொடர்பாடல் கொள்கையை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துகின்றது:	**இணங்கியுள்ளது** நிலைபேண் தகைமை அளவீடுகள் பிரயோகிக்கப்படலாம்.
	உ) சபையானது வங்கியினது உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகளின் போதியதன்மை மற்றும் ஒருங்கிணைப்பு பற்றி மீளாய்வு செய்துள்ளது.	**இணங்கியுள்ளது** சபையின் கணக்காய்வுக் குழு மற்றும் சபையானது காலத்திற்குக் காலம் உள்ளகக் கட்டுப்பாட்டு அளவீடுகளை மீயாய்வு செய்கின்றது. உள்ளகக் கணக்காய்வுப் ஆரிவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடு செய்து சபையின் கணக்காய்வுப் பிரிவிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றது.

இணக்க மீளாய்வு

பிரிவு	பெருநிறுவன ஆளுகைத் தேவைப்பாடு	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படியிலான இணக்க மட்டம்
ஊ)	சபையானது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின்படி (i) குறிப்பாக கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் (ii) நடவடிக்கைகளை வழிநடாத்தும் மற்றும் (iii) வியாபார நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் இடங்களிலுள்ள பிரதான முகாமைத்துவ ஆளணியினரை அடையாளங்கண்டு பதவியில் அமர்த்தியுள்ளது.	**இணங்கியுள்ளது** சபையானது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின்படி பிரதான முகாமைத்துவ ஆளணியினரை அடையாளங்கண்டு பதவியில் அமர்த்தியுள்ளது.
எ)	சபையின் கொள்கையுடன் இணங்கும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரது பொருத்தமான கண்காணிப்பினை சபையானது நடைமுறைப்படுத்துகின்றது.	**இணங்கியுள்ளது** செயலாற்றல் அறிக்கைகள் சபையினால் காலத்திற்குக் காலம் கலந்துரையாடப்படுவதுடன் தேவையான மேம்பாடுகளுக்காக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
உள்ளகக் கட்டுப்பாடு				
ஈ.2 உள்ளகக் கட்டுப்பாடு	**இணங்கியுள்ளது** உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளரின் கூற்றிற்காக தயவு செய்து 77 ஆம் பக்கத்திலுள்ள அறிக்கையைப் பார்க்கவும்.			
ஈ2.1 62. உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வருடாந்த மதிப்பீடு	**இணங்கியுள்ளது** உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளரின் கூற்றிற்காக தயவு செய்து 77 ஆம் பக்கத்திலுள்ள அறிக்கையைப் பார்க்கவும்.			
ஈ 2.2 63. உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டிற்கான தேவை	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.			
கணக்காய்வுக் குழு				
ஈ 3 கணக்காய்வுக் குழு	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.			
ஈ3.1 64. கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கமும் விதிகளும் நிபந்தனைகளும்	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.			
ஈ 3.2 65. கணக்காய்வுக் குழுவின் கடமைகள்	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.			
ஈ 3.3 66. கணக்காய்வுக் குழுவின் விதிமுறைகள் மற்றும் குறிப்பு	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவின் அறிக்கைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.			
ஈ3.4 67. கணக்காய்வுக் குழுவின் வெளிப்படுத்தல்கள்	**இணங்கியுள்ளது** உறுப்பாண்மைக்காக தயவு செய்து 86, 87 ஆம் பக்கங்களிலுள்ள கணக்காய்வுக் குழுவின் அறிக்கையைப் பார்க்கவும்.			

இணக்க மீளாய்வு

வழிகாட்டல்	முழு இணக்கம்	பகுதியளவிலான இணக்கம்	இணக்கமின்மை	பொருந்தாது
வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கக் கோவை				
ஈ 4 வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கக் கோவை	**இணங்கியுள்ளது**			
ஈ 4.1 68. வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கக் கோவை	**இணங்கியுள்ளது**			
ஈ 4.2 69. வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கக் கோவையை உறுதிப்படுத்தல்				இல்லை மேற்படி ஈ 4.2 இல் குறிப்பிட்டவாறு
உ நிறுவனரீதியான பங்குதாரர்				
உ1 பங்குதாரர் வாக்களித்தல்	**இணங்கியுள்ளது**			
உ 1.1 70. நிறுவனரீதியான பங்குதாரர்	**இணங்கியுள்ளது** நிறுவனரீதியான பங்குதாரர் அவர்களின் வாக்குகளைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும் அவர்களது வாக்குகளைப் பயன்படுத்துமாறும் முதலிடுதல் அல்லது விலகுதலில சுயாதீன மதியுரையைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.			
உ 2 பெருநிறுவன ஆளுகை முன்னெடுப்புக்களை மதிப்பிடுதல்	**இணங்கியுள்ளது**			
ஊ. ஏனைய முதலீட்டாளர்கள்				
ஊ1 முதலிடுதல் / விலகுதல் தீர்மானங்கள் 71. தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கான அவதானங்களை எச்சரித்தல், அவர்கள் நேரடியாகக் கம்பனியில் பங்கில் முதலீடு செய்தால் வங்கி பரிந்துரைக்கின்றது. முதலிடுதல் அல்லது விலகுதல் தீர்மானங்களின் போது அவர்கள் முழுமையான ஆய்வொன்றினை அல்லது சுயாதீன மதியுரைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.	**இணங்கியுள்ளது**			
ஊ 2 பங்குதாரர் வாக்களித்தல்	**இணங்கியுள்ளது** வங்கியானது பொதுக் கூட்டங்களில் தனிப்பட்ட வாடிக்கையாளரின் பங்கேற்பினை வரவேற்பதுடன் அவர்களுக்கு அவர்களது வாக்குரிமையையும் பயன்படுத்த முடியும்.			
ஊ 2.1 72. தனிப்பட்ட பங்குதாரர் வாக்களித்தல்	**இணங்கியுள்ளது**			

மூன்றாம் பாகம்

பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளுக்கான பெருநிறுவன ஆளுகை தொடர்பாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலிருந்து வழங்கப்பட்ட ஆரிவு 7.10 இன் கீழான பட்டியற் தேவைப்பாடுகளுடன் HDFC இன் இணக்க நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பளார் சபை தொடர்பிலான வெளிப்பாடுகள்	முழு இணக்கம்	பகுதியளவிலான இணக்கம்	இணக்கமின்மை	பொருந்தாது
7.10.1 (அ) வழ (இ) (i) சபையிலுள்ள நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களது சரியான எண்ணிக்கையினை உறுதிப்படுத்துதல்	**இணங்கியுள்ளது**			
7.10.2 (அ) (ii) சபையிலுள்ள சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களது சரியான எண்ணிக்கையினை உறுதிப்படுத்துதல	**இணங்கியுள்ளது**			
7.10.2 (ஆ) (iii) பணிப்பாளர் சபைக்கு சுயாதீன மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத தன்மையை பணிப்பாளர் வருடாந்த அடிப்படையில் உறுதிப்படுத்துதல்	**இணங்கியுள்ளது**			
7.10.3 (அ) (iv) பணிப்பாளர்களது சுயாதீனம் மற்றும் சுயாதீனமற்ற தன்மை என்பவற்றை சபை வருடாந்த ரீதியில் நிர்ணயித்தல்	**இணங்கியுள்ளது**			
7.10.3 (ஆ) (v) பணிப்பாளர் தகைமையைப் பூர்த்தி செய்யவில்லை				பொருந்தாது
7.10.3 (இ) (vi) ஒவ்வொரு பணிப்பாளரினதும் சுருக்கமான விண்ணப்பம்	**இணங்கியுள்ளது** தயவு செய்து பக்கம் 90 முதல் 93 வரையிலுள்ள பணிப்பாளரின் விபரங்களைப் பார்க்கவும்.			
7.10.3 (ஈ) (vii) அதன் சபைக்குப் புதிய பணிப்பாளரை நியமித்தது முதல், அந்த பணிப்பாளரிடமிருந்து சுருக்கமானதொரு விண்ணப்பத்தைப் பெற்று PUBLIC – 13 மூலம் பொதுமக்களுக்குப் பரப்ப வேண்டும். அவ்விண்ணப்பத்தில் மேற்படி பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) இன்படியிலான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.	**இணங்கியுள்ளது**			
ஊதியங்கள் மற்றும் ஊதியக் குழு தொடர்பான வெளிப்பாடுகள				
7.10.5 (அ) (viii) ஊதியக் குழுவில் சரியான எண்ணிக்கையில் சுயாதீன நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் உள்ளனர்.	**இணங்கியுள்ளது** தயவு செய்து 69 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.			
7.10.5 (அ) (ix) தனிப்பட்ட ஊதியக் குழு	இணங்கியுள்ளது			
7.10.5.(அ) (x) ஊதியக் குழுவின் தலைவர்	**இணங்கியுள்ளது** திரு. ஏச். யூ. சீ பிரியந்த (சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள்)			

இணக்க மீளாய்வு

பணிப்பளார் சபை தொடர்பிலான வெளிப்பாடுகள்	முழு இணக்கம்	பகுதியளவிலான இணக்கம்	இணக்கமின்மை	பொருந்தாது
7.10.5 (ஆ) (xi) ஊதியக் குழுவின் தொழிற்பாடுகள்	**இணங்கியுள்ளது** 81 ஆம் பக்கத்திலுள்ள பணிப்பாளர் சபையின் மனித வள மறறும் ஊதியக் குழு அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்			
7.10.5 (இ) (xii) ஊதியக் குழுவிலுள்ள பணிப்பாளர்களின் பெயர்கள்	**இணங்கியுள்ளது** தயவு செய்து 69ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.			
7.10.5 (இ) (xiii) ஊதியக் கொள்கை	**இணங்கியுள்ளது** 81 ஆம் பக்கத்திலுள்ள பணிப்பாளர் சபையின் மனித வள மறறும் ஊதியக் குழு அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்			
7.10.5 (இ) (xiv) நிறைவேற்றுத் தர மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படும் மொத்த ஊதியம் (காசு மற்றும் காசல்லாத நன்மைகள் உள்ளடங்கலாக)	**இணங்கியுள்ளது** தயவு செய்து 129 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 09 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.			
கணக்காய்வுக் குழு அறிக்கையின் கீழான உள்ளடக்கம்				
7.10.6 (அ) (xv) சபையிலுள்ள சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களது சரியான எண்ணிக்கை	**இணங்கியுள்ளது** கணக்காய்வுக் குழுவானது விதி 7.10.6 (அ) இன்படி சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியிருக்குமென HDFC உறுதிப்படுத்துகின்றது.			
7.10.6 (அ) மற்றும் 7.10.6 (இ) (xvi) தனிப்பட்ட கணக்காய்வுக் குழு	**இணங்கியுள்ளது**			
7.10.6 (ஆ) (xvii) கணக்காய்வுக் குழுவின் தொழிற்பாடுகள்	இணங்கியுள்ளது இலங்கை மத்திய வங்கியின் 3(6) ஆம் விதி மற்றும் நிதிச் சுற்றறிக்கைகளினால் கட்டாயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் கணக்காய்வுக் குழு ஈடுபடுகின்றது.			
7.10.6 (இ) (xviii) கணக்காய்வுக் குழுவிலுள்ள பணிப்பாளர்களின் பெயர்கள்	இணங்கியுள்ளது தயவு செய்து 70 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.			

பணிப்பளார் சபை தொடர்பிலான வெளிப்பாடுகள்	முழு இணக்கம்	பகுதியளவிலான இணக்கம்	இணக்கமின்மை	பொருந்தாது
7.10.6.(அ) மற்றும் 7.10.6 (இ) (xix) கணக்காய்வுக் குழுவின் தலைவர்	**இணங்கியுள்ளது** திரு. ஏம். சுரேந்திரன் - 2018 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை (நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீனமற்ற பணிப்பாளர்) திரு. டீ. பீ. விமலசேன 2018 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை 2018 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை (நிறைவேற்றுத் தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)			
7.10.6 (அ) மற்றும் 7.10.6 (இ) (xx) தலைவரினது தகைமைகள்	இணங்கியுள்ளது தயவு செய்து 90 முதல் 93 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.			
7.10.6 (அ) மற்றும் 7.10.6 (இ) (xxi)குழுக் கூட்டங்களுக்கு CEO மற்றும் CFO சமூகமளித்தல்	இணங்கியுள்ளது			
7.10.6 (இ) (xxii)வெளிவாரிக் கணக்காய்வாளரின் சுயாதீனம்				இல்லை வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர் இலங்கைக் கணக்காய்வாளர் நாயகமாவார்.

ஆளுகையும் ஒழுக்கமும்

பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கான வருகை - 2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. டீ.பீ. விமலசேன	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	14	13
திரு. எல். ஜயசிங்க	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	14	14
திருமதி ஆர். ஏ. சூலாநந்த	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	14	13
திரு. என். விஜயநாதன்	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	14	13
திரு. ஜே. ஆர். யூ.டீ. சில்வா (2018 யூன் 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	05	04
திரு. யூ. எச். சீ பிரியந்த (2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	04	04
டாக்டர். ஆர். ஏச். மீவக்கல (இராஜினாமா - 2018/11/09)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர் (தலைவர்)	14	13	10
திரு. ஜே. ஆர். .டீ. சில்வா (இராஜினாமா - 2018/09/30)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர் (தலைவர்)	14	12	12
திரு. ஏம். சுரேந்திரன் (இராஜினாமா - 2018/09/30)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனமல்லாத பணிப்பாளர்	14	12	10
திரு. எல். எஸ். பலன்சூரிய (இராஜினாமா - 2018/11/09)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	13	13
திரு. பீ. எம். குணவர்தன (இராஜினாமா - 2018/01/16)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	01	01
திரு. எஸ். ஏ. என. சரணதிஸ்ஸ (இராஜினாமா - 2018/05/10)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	14	07	07

பெயர் நியமனக் குழுக் கூட்டங்கள் - 2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. டீ.பீ. விமலசேன	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	03	03
திருமதி ஆர். ஏ. சூலாநந்த	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	02	02
திரு. யூ. எச். சீ பிரியந்த	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	01	01
திரு. ஜே. ஆர். யூ.டீ. சில்வா (2018 செப்டம்பர் 30ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	02	02
டாக்டர். ஆர். ஏச். மீவக்கல (இராஜினாமா- 2018/11/09)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	01	01
திரு. எஸ். ஏ. என. சரணதிஸ்ஸ (இராஜினாமா- 2018/05/10)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	01	01

மனிதவள / ஊதியக் குழுக் கூட்டங்கள் - 2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. எம். சுரேந்திரன்	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனமற்ற பணிப்பாளர் (குழுவின் தலைவர்)	04	04	04
திரு. ஜே. ஆர். .டீ. சில்வா	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	04	04
திரு. ஜே. ஆர். யூ.டீ. சில்வா (2018 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மவ உப குழுவக்கு நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	02	02
திரு. யூ. எச். சீ பிரியந்த (2018 செப்டம்பர் 27 ஆம் திகதி மவ உப குழுவக்கு நியமிக்கப்பட்டார்)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	01	01
திரு. எஸ். ஏ. என. சரணதிஸ்ஸ (இராஜினாமா- 2018/05/10)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	02	02

ஆளுகையும் ஒழுக்கமும்

ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் - 2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. என் விஜேநாதன்	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர் (குழுவின் தலைவர்)	04	04	03
திரு. எல். ஜயசிங்க	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	04	04
திரு. டீ.பீ. விமலசேன	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	02	02
திரு. ஜே. ஆர். .டீ. சில்வா (இராஜினாமா- 2018/09/30)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	03	03
திரு. ஏம். சுரேந்திரன் (இராஜினாமா- 2018/09/30)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	01	01
திரு. பீ. எம். குணவர்தன (இராஜினாமா- 2018/01/16)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	04	01	0

சுபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள - 2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. டீ.பீ. விமலசேன	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர் (தலைவர்)	06	06	06
திரு. எல். ஜயசிங்க	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர	06	06	05
திரு. யூ. எச். சீ பிரியந்த	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர	06	01	01
திரு. ஏம். சுரேந்திரன் (இராஜினாமா- 2018/09/30)	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர	06	05	04

தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிக்கும் கூட்டங்கள் -2018

பெயர்	2018-12-31 ஆம் திகதியிலான பணிப்பாளர் பதவி அந்தஸ்து	2018 நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	உரித்தான கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஜே. ஆர். .டீ. சில்வா	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	03	03
திரு. எல். எஸ். பலன்சூரிய	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	03	03
திரு. எம். சுரேந்திரன்	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனமற்ற பணிப்பாளர்	03	03	03
திரு. டீ.பீ. விமலசேன	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	01	01
திரு. என் விஜேநாதன்	நிறைவேற்றுத் தரமல்லாத / சுயாதீனப் பணிப்பாளர்	03	01	0

பணிப்பாளர்களின் அறிக்கை

01. பொது

HDFC வங்கியின் பணிப்பாளர் சபையானது, அதன் பங்குதாரருக்கு 2018 ஆம் ஆண்டறிக்கையினை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கண்காய்வாளர் அறிக்கையுடன் சமர்ப்பிக்கின்றது.

அறிக்கையானது 2018 ஆம் நிதி ஆண்டினை (சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை மற்றும் இதனகத்துப் பின்னர் □மீளாய்வு காலப்பகுதி□ என அழைக்கப்படும்) உள்ளடக்குவதுடன் 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டமெனப்படும் வங்கிக் கூட்டிணைத்தல் சட்டம், 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் (பொருத்தமான இடங்களில்), 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் கொழும்புப் பரிவர்த்தனையின் பட்டியற்படுத்தப்படும் விதிகள் ஆகியவற்றுடன் இணங்குகின்றது.

பணிப்பாளர் சபையானது சட்ட, ஒழுங்குபடுத்தல் மற்றும் தற்போது காணப்படும் சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளுடன் இணங்குவதாக மீளாய்வு காலப்பகுதிக்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கின்றது. வங்கியின் சகல தகவல்களும் முக்கியமானவையாகவிருப்பதுடன் பங்குதாரரின் மிகச் சிறந்த ஆர்வத்துடன் வங்கி வெளிப்படுத்துகின்றது.

தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

02. பிரதான செயற்பாடுகள்

வங்கியின் ஆணையில் எந்தவொரு மாற்றமுமின்றி வீடமைப்பு மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதை வங்கியின் பிரதான வியாபாரமாகக் கொண்டுள்ளது. வங்கியானது வங்கிச் சட்டத்தின் அட்டவணை (iv) இல் காட்டப்பட்டவாறு அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கி என்ற ரீதியில் ஏனைய வங்கி நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. பிரதான செயற்பாடுகளின் தன்மையில் எவ்வித விசேட மாற்றமும் இல்லை.

03. வியாபார மீளாய்வு

வங்கியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் 03 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

தலைவரின் செய்தி (14 முதல் 17 வரையிலான பக்கங்கள்) மற்றும் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு (18 ஆம் பக்கம் முதல் 22ஆம் பக்கம் வரை) ஒட்டுமொத்த நிதி நிலைமை, செயலாற்றல், விவகாரங்களின் நிலைமை, மீளாய்வு காலப்பகுதியில் வங்கியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் என்ப பற்றிக் கலந்துரையாடுகின்றன.

2018 நிதியாண்டில், செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயற்பாட்டு விளைவுகள் என்பன 110 ஆம் பக்கத்திலுள்ள வருமானக கூற்றில் தரப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளானவை பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாத பாகங்களாகும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டம், மற்றும் 1998 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் ஆகியவற்றிற்கு இயையானதாக தயாரிக்கப்பட்டுள்ளன. 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாதபாகமொன்றாக விளங்குகின்றது.

06. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டில் பின்பற்றப்பட்ட விசேட கணக்கீட்டுக் கொள்கைகள் ஆண்டறிக்கையின் 115 ஆம் பக்கம் முதல் 125 ஆம் பக்கம் வரையில் தரப்பட்டுள்ளன. உரிமையாண்மை மாற்றத்தின் விளைவாகது ஆண்டறிக்கையின் 113 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

07. கணக்காய்வாளர்களின் அறிக்கை

HDFC வங்கியின் கணக்காய்வாளராகிய இலங்கைக் கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் மீளாய்வாண்டிற்குரிய HDFC வங்கியின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்துள்ளதுடன் குறித்த கணக்காய்வாளரின் அறிக்கையானது ஆண்டறிக்கையின் 105 முதல் 109 வரையிலான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

08. தொடர்ந்திருத்தல் எண்ணக்கரு

HDFC வங்கியானது எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளைத் தொடருவதற்குப் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது.

ஆகையால், நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்ந்தும் நாம் இணக்கத்தினைப் பின்பற்றி தொடர்திருக்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கின்றோம்.

09. வருமானம்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானமானது ரூபா 7,120 மில்லியன்களாகும். வருமான ஆய்வொன்றானது நிதிக் கூற்றுக்களுக்கான 01,02,03,04 மற்றும் 05 ஆம் குறிப்புக்களில் வழங்கப்பட்டுள்ளன.

10. இலாபமும் ஒதுக்கீடும்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதிச் சேவைகள் மீதான வருமான வரி, சேர்பெறுமதி வரி, DRL மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றிற்கு முன்னரான இலாபம், ரூபா 919 மில்லியன்களாதுடன் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபமானது ரூபா 564 மில்லியன்களாகும்.

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானதான	2017 (மீள் கூறப்பட்டது) ரூபா மில்லியன்	2018 ரூபா மில்லியன்
நிதிச் சேவைகள் மீதான வரி, சேர்பெறுமதி வரி, DRL மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி		
வுரிக்கான ஏற்பாடு		
வரிக்குப் பின்னரான இலாபம் மற்றும் சாதாரண நடவடிக்கைகள்		
நிறுத்தி வைத்த இலாபம் /(திரண்ட நட்டங்கள்) மு.கொ. செ		
ஒதுக்கீட்டிற்குள்ள இலாபம்		
ஆரம்ப மற்றும் இறுதிப் பங்கிலாபம் முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு		
ஒதுக்க நிதிகளுக்கு மாற்றுதல்		
நிறுத்தி வைத்த இலாபம் கீழ் கொண்டு சென்றது		

11. ஒதுக்கங்கள்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி மொத்த ஒதுக்கங்கள் ரூபா4,756 மில்லியன்களாகும். இதன் விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 30, 31,32 ஆம் குறிப்புக்களில் வழங்கப்பட்டுள்ளன.

12. நன்கொடைகள்

மீளாய்வாண்டில் வங்கி எந்தவொரு நன்கைாடையையும் வழங்கவில்லை.

13. சட்டரீதியான கொடுப்பனவுகள்

அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பான சட்டரீதியான கொடுப்பனவுகளும் உரிய திகதிக்கு முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள என பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர்.

14. வரிக்கான ஏற்பாடு

வங்கியின் செயற்பாடுகளிலிருந்து எழும் வரிசெலுத்த வேண்டிய வருமானத்தில் 28மூ வருமான வரியாக 2018 ஆம் ஆண்டிற்கு ஏற்பாடு செய்துள்ளதுடன் ஆண்டறிக்கையின் 130 முதல் 131 வரையிலான பக்கங்களிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 11ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

15. பங்கிலாபம்

குறைந்த பட்ச மூலதனமாக ஐந்து மில்லியன்கள் இருக்க வேண்டுமெனும் வங்கியின் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாட்டினைக் கருத்தினைக் கொண்டு 2018 நிதியாண்டிற்குப் பங்கிலாபங்கள் வழங்கப்பட மாட்டாது.

16. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், அறுதிச் சொத்துக்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான மூலதனச் செலவு ரூபா 45 மில்லியன்களாகும். இது 136 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 19 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

17. அறுதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

அறுதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பற்றிய விபரங்கள்138 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 19.2 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

18. நிதி நிலைமைக்கான கூற்றுத் திகதியின் பின்னர் நடைபெறும் நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்களை வெளிப்படுத்த வேண்டியளவிற்கு நிதி நிலைமைக்கான கூற்றின் திகதியின் பின்னர் முக்கிய நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

19. வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கியின் வெளிப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா 962 பில்லியன்களாவதுடன் இது 64,710,520 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது.

20. பங்கு தொடர்பான தகவல்கள்

பங்குகள் தொடர்பான தகவல்கள் ஆண்டறிக்கையின் 155 முதல் 157 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

21. கடன் பத்திரங்கள்

மேலும் HDFC பட்டியற்படுத்தப்பட்ட பாதுகாப்பான மீட்கக் கூடிய கடன்பத்திரங்களை ரூபா 4,000 முகப் பெறுமதியில் 2015 ஆம் ஆண்டு வழங்கியுள்ளதுடன் நிதி நிலைமைக் கூற்றின் திகதிக்கு நிலுவையிலுள்ள கடன்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் 141 ஆம் பக்கதிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 25 ஆம் குறிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் பத்திரங்களை வங்கியானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பிரதான குழுவில் பட்டியற்படுத்தியுள்ளது.

22. சகல அக்கறையுள்ளோரையும் சமமாக மதித்தல்

அவர்களுக்கு வழங்கப்பட்ட மூல விதிகளின் படி சகல அக்கறையுள்ளோரும் சமமாக மதிக்கப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர்களின் அறிக்கை

23. பணிப்பாளர் சபை

பணிப்பாளர் முழுப் பட்டியல், அவர்களது தகைமைகள் மற்றும் அனுபவத்திற்காக தயவு செய்து 88 முதல் 93 வரையிலான பக்கங்களிலுள்ள பணிப்பாளர் சபை எனும் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

மீளாய்வுக் காலப்பகுதியிலான பணிப்பாளர் சபை நியமனங்களும் இராஜினாமாக்களும்

இல.	பெயர்	மீளாய்வுக் காலப்பகுதியிலான நியமனங்கள்	மீளாய்வுக் காலப்பகுதியிலான இராஜினாமாக்கள்
01.	திரு. எம். சுரேந்திரன்	29/06/2018 (மீள் நியமனம்)	30/09/2018
02.	திரு. எல். எஸ். பலன்சூரிய	29/06/2018 (மீள் நியமனம)	09/11/2018
03.	திரு. ரொகான் யூ டீ. சில்வா	29/06/2018	-
04.	கலாநிதி ஆர். எச். மீவக்கால	01/10/2018 (பணிப்பாளர் சபைத் தலைவராக நியமனம)	09/11/2018
05.	திரு. யூ. எச். சீ பிரியந்த	23/08/2018	-
06.	திரு. மனுர குணவங்ச	09/11/2018	20/12/2018
07.	திரு. பீ. எம். குணவர்தன	-	16/01/2018
08.	திரு. எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ	-	10/05/2018
09.	திரு. ஆர். ஜே.டீ. சில்வா	-	30/09/2018

24. சபை உபகுழுக்கள்

இலங்கை மத்திய வங்கி, கொழும்புப் பரிவர்த்தனை ஆகியவற்றின் பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல்களில் கூறப்பட்டவாறு குறித்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி உப குழுக்களினது உறுப்பாண்மை, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயலாற்றலானது ஆண்டறிக்கையின் 81 முதல் 87 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

25. நேரடிக் கூட்டங்கள்

68 முதல் 71 வரையிலான பக்கங்களிலுள்ள பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபை உப குழுவிற்கு சமூகமளித்தல் எனும் பிரிவினைத் தயவு செய்து பார்க்கவும்.

26. நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர் பொறுப்பு

HDFC வங்கியின் விவகாரங்களின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்குமாறு வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாகவிருப்பர். பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் இன்றியமையாத பாகமாகிய 104ஆம் பக்கத்திலுள்ள நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளரின் பொறுப்புக் கூற்றினைத் தயவு செய்து பார்க்கவும்.

27. பணிப்பாளரின் ஆர்வம்

பணிப்பாளரின் ஆர்வம் தொடர்பான அவசியமான பிரகடனங்களைவ ங்கியானது 148 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தியுள்ளதுடன், அந்த வெளிப்பாடுகளுக்குப் புறம்பாக, ஒரு ஒப்பந்தத்தில் அல்லது உத்தேச ஒப்பந்தத்தில் பணிப்பாளரிடம் நேரடி அல்லது மறைமுக ஆர்வம் காணப்படுமாயின் அது பங்குதாரருக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். கலந்துரையாடல்களில் அல்லது அங்கீகாரச் செய்முறையில் அல்லது விடயங்களுக்கு வாக்களிக்கும் போது அல்லது ஒப்பந்தங்களில் அவர்களது ஆர்வத்தின் பேரில் பணிப்பாளர்கள் பங்குபற்றாது விலகியிருப்பர்.

பணிப்பாளர் அவர்களுக்கு ஆர்வமுள்ள பிரச்சினைகளில் (ஏதேனுமிருப்பின்) அவர்கள் வாக்களிக்காது விலகியிருப்பதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

28. பங்குகளை வைத்திருப்பதில் பணிப்பாளருக்குள்ள ஆர்வம்

பணிப்பாளர் வைத்துள்ள பங்குகள் பின்வருமாறு:

	31/12/2018	01/01/2018
திருமதி ஆர். ஏ. சூலாநந்த	இல்லை	இல்லை
திரு டீ. பீ. விமலசேன	இல்லை	இல்லை
திரு எல். எஸ். ஜயசிங்க	1,000	1,000
திரு. விஜயநாதன்	3,979	3,979
திரு. ரொகான் யூ. டீ. சில்வா	2,241	இல்லை
திரு யூ. எச். சீ பிரியந்த	இல்லை	இல்லை
மொத்தம்	7,220	4,979

29. கடன் பத்திரங்களை பங்குகளை வைத்திருப்பதில் பணிப்பாளருக்குள்ள ஆர்வம்

பணிப்பாளர் தனிப்பட்ட ரீதியில் வைத்துள்ள கடன்பத்திரங்கள் பின்வருமாறு::

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2018	
	கடன் பத்திரங்களின் எண்ணிக்கை	பெறுமதி (ரூபா.)
திருமதி ஆர். ஏ. சூலாநந்த	இல்லை	இல்லை
திரு டீ. பீ. விமலசேன	இல்லை	இல்லை
திரு எல். எஸ். ஜயசிங்க	இல்லை	இல்லை
திரு. விஜயநாதன்	இல்லை	இல்லை
திரு. ரொகான் யூ. டீ. சில்வா	இல்லை	இல்லை
திரு யூ. எச். சீ பிரியந்த	இல்லை	இல்லை
மொத்தம்	இல்லை	இல்லை

30. தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் படி □தொடர்புடைய தரப்பு வெளிப்பாடுகள்□ பின்பற்றப்பட்டதுடன் அத்தகையன ஏதேனுமிருப்பின் அது லங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் படி தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல் என வெளிப்படுத்த முடியுமென பணிப்பாளர்கள் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வாறு பணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையில் ஒரு பாகமாக 148 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களுக்கு (மீளாய்வு காலப்பகுதியின் போது) வங்கியானது RPT விதிகளுடன் இணங்குகின்றது எனவும் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது.

31. பணிப்பாளர்களின் ஊதியம்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிமுடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஊதியமானது 129 ஆம் பக்கத்திலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான 09 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

32. சூழல் பாதுகாப்பு

பணிப்பாளர் சபையின் அறிவுக்கெட்ய வகையில் வங்கியானது பொருத்தமான சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றது. வங்கியானது சூழலுக்கு அபாயகரமான மற்றும் ஆபத்தை விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடாது.

33. இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளும்

வங்கியானது இடர் திணைக்களம் மற்றும் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினூடாகவும் (IRMC) பணிப்பாளர் சபை மட்டத்திலும் தொடர்ச்சியான இடர் முகாமைத்துவச் செய்முறையைப் பின்பற்றுகின்றது. 34 முதல் 39 வரையிலான இடர் மதிப்பீட்டு அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்.

அதற்கு மேலதிகமாக, பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழு (BAC) உள்ளக் கட்டுப்பாட்டுச் செய்முறையை ஒழுங்கு முறையில் மீளாய்வு செய்யும். IRMC மற்றும் BAC இரண்டும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக குழுவின் கூட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அதன்படி, அதன் செயற்பாடுகளை சீராக மேற்கொள்வதற்கு, சபையானது வங்கியிடம் முழுமையானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் இடர் கட்டுப்பாட்டு கட்டமைப்பு காணப்படுகின்றது என பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது.

தயவு செய்து 86 மற்றும் 87 ஆம் பக்கங்களிலுள்ள சபை கணக்காய்வுக் குழு அறிக்கையைப் பார்க்கவும்.

34. பெருநிறுவன ஆளுகை

அனுமதி பெற்ற விசேட வங்கிகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல்களை 4,400 (SLSRS) இன் கீழ் கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட □உண்மைக் கண்டுபிடிப்பு அறிக்கைகளுடன்□ கூடிய 41 முதல் 67 வரையிலான பக்கங்களிலுள்ள பெருநிறுவன ஆளுகை அறிக்கையைத் தயவு செய்து பார்க்கவும்.

பணிப்பாளர்களின் அறிக்கை

35. பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கம்

இணக்க அலுலர் சட்டங்களை நிருவகித்தல் தொடர்பான வங்கியின் நிலைமையை நேரடியாக இற்கு அறிக்கையிடுவார். பணிப்பாளர்களின் அறிவுக்கெட்டிய வகையில், வங்கி வெளிப்படுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எந்தவொரு சட்டத்திலும் உள்ள விதிகள் ஒழுங்குவிதிகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வங்கி மீறவோ அல்லது வங்கியின் முக்கிய நிதியியல் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவாறாக ஊழியர்களை முகாமை செய்வதில் எந்தவொரு ஒழுங்கீனமும் ஏற்படவோ இல்லை.

எவ்வாறாயினும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவையாகிய 5 பில்லியனினை அடைய வேண்டியுள்ளதுடன் திறைசேரி முதலீட்டிற்காக எதிர்பார்த்துள்ளது.

36. கணக்காய்வாளர்களின் நியமனம்

1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க HDFC சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு வங்கியின் கணக்காய்வாளராக தொடர்ந்தும் கணக்காய்வாளர் நாயகமே இருப்பார்.

37. வங்கியுடனான ஒப்பந்தத்தில் கணக்காய்வாளரின் ஊதியமும் ஆர்வமும்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு கணக்காய்வாளருக்கு ரூபா 649,800 செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளருக்கு வங்கியுடன் வேறெந்த உறவோ ஆர்வமோ கிடையாது.

38. கணக்காய்வுக் குழு


இந்த ஆண்டறிக்கையின் 86 முதல் 87 வரையிலான பக்கங்களில் கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கமும் அவர்களது அறிக்கையும் தரப்பட்டுள்ளன.

39. கூட்டத்திற்கான அறிவித்தல்

வங்கியினது 34 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமானது 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 07, சுதந்திர சதுக்கம், இலங்கை மன்ற மாவத்தை, இல.100 இலிலுள்ள இலங்கை மன்றத்தில் (மண்டப இல. 08) நடைபெறும்.

கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் 161 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க கையொப்பமிடப்பட்டுள்ளது.



ஆர் எச் மீவக்கால
தலைவர்



கே. டீ. டி. டி. த சில்வா
கம்பனிச் செயலாளர்

2019 மே 17

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று

இவ்வறிக்கையானது 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 3 (8) (ii) (ஆ) விலுள்ள வழிகாட்டல்கள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA Sri Lanka) வழிகாட்டல்களின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் போதியளவு மற்றும் வினைத் திறன் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாடொன்று நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதை உறுதிப்படுத்துவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். எவ்வாறாயினும், அத்தகைய முறைமையானது வங்கியின் நோக்கங்களை அடைநந்து கொள்ளுதல் தோல்வியடையக் கூடிய தன்மை இல்லாதொழிப்பதை விட ஏற்றுக்கொள்ளக் கூடிய இடர் அளவுகோல்களை முகாமை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, உள்ளகக் கட்டுப்பாடுகள் நிதித் தகவல்களின் முக்கிய தவறுகளுக்கெதிரான அல்லது நிதி நட்டங்கள் அல்லது முறைகேடுகள் நியாயமான ஆனால் முழுமையற்ற உத்தரவாதத்தை வழங்க முடியும்.

சபையானது வங்கியினால் முகங்கொடுக்கப்படும் குறிப்பிடத்தக்க இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான தொடர்ந்து செல்லும் செய்முறையொன்றை உருவாக்கியுள்ளது. இச்செய்முறையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்தல் வியாபார சூழல் அல்லது ஒழுங்கமைத்தல் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய வழிகாட்டல்களில் எங்கு எப்போது மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்பது உள்ளடங்கும். செய்முறையானது பணிப்பாளர்களினால் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பணிப்பாளர்கள் கூற்றுக்களிலுள்ள வங்கிப் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுக்கிணங்க ஒழுங்குமுறைப்படி மீளாய்வு செயயப்படுகின்றது.

போதியளவு மற்றும் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்றபடும் பிரதான செய்முறைகள்

- பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழு மற்றும் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, நியமனக் குழு மனிதவளக் குழு மற்றும் ஊதியக் குழு மற்றும் தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக்குழு ஆகிய பணிப்பாளர் சபை உப குழுக்கள் வரையறுக்கப்பட்ட பரப்பெல்லையினுள் நிறுவப்பட்டுள்ளதுடன் வங்கிச் செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட பெருநிறுவன நோக்கங்கள், தந்திரோபாயங்கள், கொள்கைகள் மற்றும் வியாபார வழிகாட்டல்கள்களுக்கு இயைபானதாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதில் சபைக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு, கடன் குழு, முதலீட்டுக் குழு மற்றும் தகவல் தொழில்நுட்ப வழிநடாத்துதல் குழு உள்ளடங்கலான பல்வேறு முகாமைத்துவக் குழுக்களை வங்கியின் வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான வலுவூட்டலுடன் நிறுவுதல் மற்றும் வங்கியின் வியாபாரச் செயற்பாடுகளின் மூலாதார பகுதிகளைக் கண்காணித்தல்
- சபையானது வங்கியின் ஒட்டுமொத்த வியாபார தந்திரோபாயங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கொள்கைகளை அங்கீகரித்து மீளாய்வு செய்வதுடன் வங்கி முகங்கொடுக்கும் பிரதான இடர்களை அடையாளங் கண்டு அத்தகைய இடர்களை அடையாளங் கண்டு, அளவிட்டு,கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உதவுகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்துமுகமாக வங்கியினால் வெளிளிடப்பட்ட செயற்பாட்டுக் கைநூல்கள், வழிகாட்டல்கள் மற்றும் நியமங்களில் கொள்கைகளும் நடைமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.
- ஆளணினரை வாடகைக்கமர்த்தவும் முடிவுறுத்தவும் ஆளணியினருக்கு முறையான பயிற்சி நிகழ்ச்சிகள், வருடாந்த செயலாற்றல் மதிப்பீடுகள் மற்றும் ஏனைய பொருத்தமான நடைமுறைகள் ஆளணியினர் திறமையுள்ளவர்கள் மற்றும் அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றப் போதியளவு பயிற்றப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் காணப்படுகின்றன. சபையானது மீளாய்வு நிதியாண்டில் வங்கியின் ஒழுக்கவியல் கோவையை மீளாய்வு செய்து அங்கீகரித்தது.
- உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளினது வினைத்திறன் மற்றும் செயற்றிறனினது சுயாதீன உத்தரவாதத்தை வழங்குவதுடன் எந்தவொரு இணக்கமின்மை தொடர்பிலும் கண்டுபிடிக்கப்பட்டவை கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றனவா என்பதையும் கண்காணிக்கும். சகல கிளைகளிலும் திணைக்களங்களிலும் சபை கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. கிளைகளிலும் திணைக்களங்களிலும் கணக்காய்வு செய்யப்படும் தடவைகள் அவை முகங்கொடுக்கும் மதிப்பிடப்பட்ட இடர் மட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படும்.. உள்ளகக் கணக்காய்வின் கண்டுபிடிப்புகள் அவர்களது காலரீதியான கூட்டங்களில் மீளாய்வுக்காக சபை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

உறுதிப்படுத்தல்

மேற்படி செய்முறையினடிப்படையில், பணிப்பாளர் சபையானது வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வெளிவாரி நோக்கங்களுக்கு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கமைத்தல் தேவைப்பாடுகளுக்கமைவாக தயாரிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வெளிவாரிக் கணக்காய்வாளரால் கூற்று மீளாய்வு செய்யப்படுதல்

வெளிவாரிக் கணக்காய்வாளர்கள உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கியுள்ள மேற்படி பணிப்பாளரின் கூற்றினை மீளாய்வு செய்து அதில் வங்கியின் நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மற்றும் வடிவமைப்புடன் எதுவும் முரண்பாடானதாக இல்லை என அவர்கள் நம்புவதற்கான ஏதுக்கள் எதுவுமில்ல என அவர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கான அவர்களது அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கங்கள் 78, 79 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பாலித கமகே
பொது முகாமையாளர்/பிறிஅ

கே.டீ. குணவர்தன
தலைவர்- கணக்காய்வுக்குழு

ஆர். ஏச் மீவக்கால்
தலைவர்

கொழும்பில்
2019 மே 17

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை


ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/01/C/HDFC/IC/18/27
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 17 May 2019

தலைவர்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாகப் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்படும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உத்தரவாத அறிக்கை.

அறிமுகம்
இவ்வறிக்கையானது 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடந்த ஆண்டிற்குரிய இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி அறிக்கையிடல் (□கூற்று□) மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக உத்தரவாதம் வழங்குவதாகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு
இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல் இல. 12 இன் 3 (8) (ii) (ஆ) இற்கிணங்க வெளியிடப்பட்ட □உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக வங்கிப் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்களுக்கு□ இணங்க, கூற்றினைத் தணாரித்துச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவமானது பொறுப்பாகவிருக்கும்.

இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் (SLSAE) 3050 மீதான எனது பொறுப்பும் இணக்கமும்

புரியப்பட்ட பணி தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையொன்றை வழங்குவது எனது பொறுப்பாகும். நான்இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமம் (SLSAE) 3050 - உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கைக்கிணங்க எனது ஈடுபாட்டை நான் மேற்கொண்டேன்.

புரியப்பட்ட பணி தொடர்பான சுருக்கம்
கூற்றானது தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அல்லது பணிப்பாளர்கள் சார்பாக ஆதரிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதுடன் வங்கியின் நிதி அறிக்கையிடலுக்கான உள்ளகக் கட்டுப்பாடு மீதான முறைமையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய முறைமை சரியாகப் பிரதிபலிக்கப்படுகின்றதா என்பதையும் மதிப்பீடு செய்வதற்காக நான் எனது ஈடுபாட்டை மேற்கொண்டேன்.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் முதன்மையாக வங்கி ஊழியர்களின் விசாரணைகள் மற்றும் பணிப்பாளர் சபையால் பின்பற்றப்பட்ட செயல்முறையின் மாதிரி அடிப்படையிலான ஆவணங்களின் இருப்பு ஆகியவற்றுக்கு வரையறுக்கப்பட்டன.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது (SLSAE) 3050 கூற்றுக்கள் சகல இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றனவா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை. இலங்கை உத்தரவாத ஈடுபாடுகளுக்கான நியமமானது (SLSAE) 3050 ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு குறிப்பிடத்தக்க பிரச்சினைக்கும் உண்மையில் தீர்வைக் கொண்டு வருவதற்கான முக்கிய உள்ளகக் கட்டுபாட்டு அம்சம் பற்றி செயன்முறைகளில் விபரிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவுமில்லை.

முடிவு

புரியப்பட்ட செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுபாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்காக பணிப்பாளர் சபை பின்பற்றிய செயன்முறை தொடர்பான எனது புரிதலின்படி, எத்தகைய முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் எந்தவொரு விடயமும் என்னால் அவதானிக்கப்படவில்லை.

ஒப்பம்
டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

பெருநிறுவன ஆளுகை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/01/C/HDFCB/CG/2018/28
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 17 May 2019

தலைவர்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர் சபைக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு மீதான உண்மைக் கண்டுபிடிப்புகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2018 டிசம்பர் 31

இலங்கை மத்திய வங்கியினால் (இமவ) வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆளுகை அறிக்கையின் பிரகாரம், இவ்வறிக்கையின் இணைப்பு -01 இல் கணக்கிடப்பட்டவாறு சென்முறைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இச்செயற்பாடானது, தொடர்புடைய சேவைகளுக்கான இலங்கை நியமம் 4400 (SLSRS 4400) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கருக்களினடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. தாங்கள் பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு உதவுவதற்காக மட்டுமே இச்செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வறிக்கையின் இணைப்பு -01 இல் எனது கண்டுபிடிப்புக்களை நான் அறிக்கையிடுகின்றேன்.

ஏனெனில், மேற்படி செயன்முறைகளானவை இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வுச் செயற்பாடுகள் மீதான இலங்கை நியமங்களின் பிரகாரம் ஒரு கணக்காய்வு அல்லது மீளாய்வினை உள்ளடக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு மீதான எனது உத்தரவாதத்தினை நான் வெளிப்படுத்தவில்லை.

நான் மேலதிக செயன்முறைகளை அல்லது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வுச் செயற்பாடுகள் மீதான இலங்கை நியமங்களின் பிரகாரம் ஆளுகை அறிக்கை மீது ஒரு கணக்காய்வு அல்லது மீளாய்வினை மேற்கொண்டிருப்பின் அல்லது, தங்களுக்கு அறிக்கையிட வேண்டுமென் எனது அவதானத்திற்குட்பட்ட ஏனைய விடயங்கள் இருப்பின் அவற்றைத் தங்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பேன்.

எனது அறிக்கையானது முற்றிலும் இவ்வறிக்கையின் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காவும் தங்களுக்கு தகவல் வழங்குவதற்குமானதாவதுடன் இதனை வேறேதேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவோ அல்லது வேறு எவரேனும் தரப்பினருக்கு விநியோகிக்கப்படவோ கூடாது.

இவ்வறிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் மாத்திரம் தொடர்புபட்டதுடன், முழுமையாக இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் (HDFC) எந்தவொரு நிதிக் கூற்றுக்களுக்கும் விரிவுபடுத்தப்படலாகாது.

ஒப்பம்
டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

பணிப்பாளர் சபை உபகுழு அறிக்கைகள்

பணிப்பாளர் சபை மனிதவள மற்றும் ஊதியக் குழு

மனிதவள மற்றும் ஊதியக் குழுவானது வங்கியின் வினைத்திறன் வாய்ந்த மனிதவள செயற்பாடுக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் சபை உப குழுவாகும்.
அதன்படி மனிதவள மற்றும் ஊதியக் குழுவானது பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகவிருக்கும்:

01. வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல்.

02. பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான இலக்குகளை நிர்ணயித்தல்.

03. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கெதிராக பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றல் மதிப்பீட்டினை அவ்வப்போது மேற்கொண்டு ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய செயலாற்றல் அடிப்படையான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை மீளமைத்தல்.

04. சம்பள மீளாய்வுகள், முன்நிபந்தனைகள், ஆட்சேர்ப்புக்கள், பணிநிலையைத் தீர்மானித்தல், பதவியுர்வுகள் /பதவிப் பெயர் மாற்றங்கள் /புதிய பதவிகள் அல்லது பதவி நிலைகளை உருவாக்குதல் /தொழிலிலமர்த்துதல் /பணிநிலை மற்றும் பணிநிலைப் பாதீடு, வங்கியின் ஆளணி உறுப்பினர்கள் வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் பங்குபற்றுதல் போன்றவை தொடர்பான அவசியமான பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

ஊழியர் திறன் அபிவிருத்தி மற்றும் இயல்திறனைக் கட்டியெழுப்புதல் / பயிற்சி/ அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் ஆகியவற்றினூடாக HDFC இன் மனிதவளத்தில் சீரான அபிவிருத்தியை மேற்கொள்வதில் குழுவானது மீளாய்வாண்டில் அதிக ஆர்வத்துடனுள்ளது.

அதன்படி, குழுவானது தற்போது காணப்படும் கொள்கைகள் மற்றும் சில முக்கிய கொள்கைகளை (பயிற்சிக் கொள்கை, பௌதீகப் பாதுகாப்புக் கொள்கை, மதிப்பூதியக் கொள்கை மற்றும் ஒழுங்கீனங்களை முறையிடுதல் கொள்கை, அயலாக்கக் கொள்கை போன்ற) மீளாய்வு செய்வதற்கு அவசியமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, குழுவானது கூட்டு ஒப்பந்த முடிவுறுத்தல் செய்முறையில் அவசியமான பரிந்துரைகளைப் பணிப்பாளர் சபைக்கு வழங்கியுள்ளது.

2018 ஆம் ஆண்டில் நான்கு (04) குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. குழுவினது உறுப்பாண்மை மற்றும் குழுக் கூட்டத்திற்கான வருகை பற்றி ஆண்டறிக்கையின் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

யூ. எச். சீ பிரியந்த
தலைவர்

தர்'னி டீ சில்வா
கம்பனிச் செயலாளர்

கொழும்பில்.
2019 மே 13.

பணிப்பாளர் சபை உபகுழு அறிக்கைகள்

சபை நியமனக் குழு

சபை நியமனக் குழுவானது பின்வருவனவற்றிற்குப் பொறுப்பான உபகுழுவாகும்:

01. புதிய பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கு /நியமிப்பதற்கு ஒரு செயல்முறையை நடைமுறைப்படுத்துதல்.

02. பணிப்பாளர் சபையின் ஒட்டுமொத்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக சம்பந்தப்பட்ட பணிப்பாளரினது செயலாற்றல் மற்றும் பங்களிப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு தற்போதைய பணிப்பாளர்களை மீளவும் தெரிவு செய்வதற்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

03. பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவப் பதவிகளுக்குரிய நியமனம் அல்லது பதவியுயர்வினை வழங்குவதற்கான தகுதியாக அவசியப்படும் தகைமைகள், அனுபவம் மற்றும் பிரதான பண்புகளைக் கருத்திற் கொள்வதற்கான பொருத்தமான அளவுகோல்களைப் பின்பற்றுவதற்கு.

04. பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர், வழிகாட்டல் 3(3) மற்றும் விதிமுறைகளில் அமைக்கப்பட்டுள்ள அளவுகோல்களின் படி உரிய பதவிகளை வகிப்பதற்குப் பொருத்தமானவர்களாவென உறுதிப்படுத்துவதற்கானதொரு பொருத்தமான முறைமையொன்றைப் பின்பற்றுவதற்கு.

05. ஓய்வுபெறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு மேலதிக புதிய நிபுணத்துவ மற்றும் அடுத்தடுத்த ஏற்பாடுகளுக்கான தேவைகளை (காலத்திற்குக் காலம்) பரிந்துரை செய்தல்.

மேற்கூறப்பட்டவாறு குழுவானது மீளாய்வு காலப்பகுதியில் நியமனக் குழுவினது கட்டளையின்படி தேவையான முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. குழுவின் உறுப்பாண்மையும் குழுக் கூட்டத்திற்கான உறுப்பினர் வருகையும் ஆண்டறிக்கையின் 69 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் நியமனக் குழுவானது (03) முறை கூடியது.



ஆர். எச். மீவக்கால
தலைவர்



தர்ஷனி டீ சில்வா
கம்பனிச் செயலாளர்

கொழும்பில்.
2019 மே 02.

சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (□குழு□) வங்கியின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ள உபகுழுவாகும்.

பரப்பெல்லையும் அர்ப்பணிப்பும்

இலங்கை மத்திய வங்கியின் பெருநிறுவன ஆளுகை வழிகாட்டல்களுக்கமைய சபையினால் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) பின்வரும் கட்டளைக்காக நிறுவப்பட்டது:

01. குழுவானது பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றி குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரக் கட்டமைப்பு மற்றும் பொறுப்பினுள் பணிப்பாளர் சபை சார்பாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும்.

02. குழுவானது சகல இடர்களையும் அதாவது வங்கியினது கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்களை பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாக மதிப்பீடு செய்யும்.

03. கடன் குழு மற்றும் செத்து- பொறுப்புக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதியதன்மை மற்றும் வினைத்திறனை விசேட இடர்களை முகாமை செய்வதற்கும் மற்றும் அத்தகைய இடர்களை குழுவினால் குறிப்பிட்டவாறு அளவு மற்றும் பண்புரீதியான இடர் எல்லைகளினுள் முகாமை செய்வதற்கும குழுவானது மீளாய்வு செய்யும்.

04. வங்கியினது கொள்கைகள் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில், அத்தகைய இடர்கள் புத்திசாதுரிய மட்டத்திற்கு அப்பாற்பட்டவை எனக் குழுவினால் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய இடர்கள் விசேட இடர்களின் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குக் குழுவானது உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

05. இற்றைப்படுத்தப்பட்ட வியாபாரத்தைத் தொடரும் திட்டங்கள் உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் சகல விடயங்களையும் மதிப்பீடு செய்வதற்காக குழுவானது குறைந்தபட்சம் காலாண்டு ரீதியாகக் கூட வேண்டும்.

06. விசேட இடர்களை அடையாளங்கண்டு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு பொருத்தமான திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக தோல்விக்குப பொறுப்பான அலுவலர்களுக்கெதிராகக் குழுவானது பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

07. சபையின் கருத்துக்கள், ஒத்திருத்தல் மற்றும்/ அல்லது விசேட வழிகாட்டல்கள் என்பவற்றை வேண்டி ஒவ்வொரு கூட்டமும் நடைபெற்று ஒரு வரத்தினுள் குழுவானது ஒரு இடர் மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

08. சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்கமைத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வியாபாரச் செயற்பாடுகளின் சகல பரப்புக்களிலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவற்றுடன் வங்கியின் இணக்கப்பாடினை மதிப்பீடு செய்வதற்காக குழுவானது ஒரு இணக்கச் செயற்பாட்டினை உருவாக்கும். பிரதான முகாமைத்துவ ஆளணியினரிடமிருந்து தெரிவு செய்யப்படும் ஒரு அர்ப்பணிப்புமிக்க இணக்க அலுவலர் இணக்கச் செயற்பாட்டினை மேற்கொண்டு அவ்வப்போது குழுவிற்கு அறிக்கையிட வேண்டும்.

அதன்படி, BIRMC ஆனது மீளாய்வாண்டில் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது:

01. இடர் முகாமைத்துவக் கொள்கைகள்: மீளாய்வாண்டில் இடர் முகாமைத்துவ மற்றும் இணக்கப் பரப்பெல்லைகளுடன் தொடர்புடய கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டுப் பொருத்தமானவாறு திருத்தப்பட்டதுடன் வங்கியினுள் அவை கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

02. இடர் பரப்பெல்லை: இடர் பரப்பெல்லை வரையறைகள் மற்றும் சகல இடர் பிரதேசங்களுக்குமான பிதான இடர் குறிகாட்டிகள் வகுக்கப்பட்டு அவை அவ்வப்போது இடர் தளத்தினைப் (Risk Dash Board) பயன்படுத்திக் கண்காணிக்கப்பபட்டன.

03. பேசல் ii / பேசல் iii பரிந்துரைகளின் மீதான முன்னேற்றம் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கால எல்லைகளை வங்கியினால் அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட இலக்குகளுக்கெதிரான பேசல் ii / பேசல் iii பரிந்துரைகளின் மீதான முன்னேற்றமானது மீளாய்வு செய்யப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது.

04. மனஅழுத்தப் பரிசோதனை: ஒட்டுமொத்த மனஅழுத்தக் கட்டமைப்பினையும் மீளாய்வு செய்யப்பட்டு பரிசோதனையின் விளைவுகளானவை மீளாய்வு செய்யப்பட்டன. வங்கியின் மனஅழுத்தத்தைச் சகித்துக் கொள்ளும் மட்டத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான பரிந்துரைகள் ஆலோசிக்கப்பட்டது கட்டாயமானவையாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

05. உள்ளக மூலதனப் போதியதன்மை மதிப்பீட்டுச் செய்முறை (ICAAP): ICAAP ஆவணமானது 2017 வருட இறுதிக் காலகட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், அது குழு மற்றும் பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாவணமானது 2018 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்துவோனுக்கு அனுப்பப்பட்டது.

06. இணக்கம்: குழுவானது இணக்க அலுவலரிடமிருந்து இணக்க அறிக்கையைப் பெற்று அதனை ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடனான இணக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வு செய்தது.

07. உள்ளகக் கட்டுப்பாடுகள்: உள்ளக நட்ட நிகழ்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டின் போதிய தன்மை மற்றும் செய்முறை ஆகியன ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டதுடன் மேம்பாடுகளுக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிந்துரைகளின் அமுலாக்கலின் செயலாற்றலும் கூட கண்காணிக்கப்பட்டது.

08. தகவல் தொழில்நுட்ப முறைமை ஆதரவு:

பணிப்பாளர் சபை உபகுழு அறிக்கைகள்

கண்காணிப்பினது வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் வங்கியில் கடன் மற்றும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் பயன்பாட்டினூடாக இடர்களைக் கண்காணித்துக் குறைத்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடர்களை நோக்குவதற்கும், நிலையான இடர் அளவீடுகளில் உள்ளடக்கப்படாத வங்கிக்கு வெளிவாரியான நிகழ்வு மற்றும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் கவனம் செலுத்துவதற்கும் குழுவானது சகல பங்கேற்பாளர்களை இயக்கபூர்வமாக ஊக்குவித்தது.

அத்தகைய அக்கறைகளுக்கு முகங்கொடுப்பதற்கு வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்என வங்கியின் மேற்பார்வை மற்றும் நாணயச் சபையால் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கமைத்தல் அல்லது மேற்பார்வை அக்கறைகள் அல்லது வங்கியின் இடர் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுடனான இணங்காமை எதுவும் காணப்படவில்லையென குழு உறுதிப்படுத்துகின்றது.

குழுவினது உறுப்பாண்மை மற்றும் கூட்டத்திற்கான குழு உறுப்பினர்களின் வருகை என்பன ஆண்டறிக்கையின் 70 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் குழுவானது நான்கு (04) தடவைகள் கூடியது.

என் விஜயநாதன்
தலைவர்

தர்ஷினி டி சில்வா
கம்பனிச் செயலாளர்

கொழும்பில்.
2019 மே 02.

சபையுடன் தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கும் குழு

சபையுடன் தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கும் குழுவானது வங்கியானது ஒழுங்கமைத்தல் நிறுவனங்களினால் வகுக்கப்பட்ட விதிகளுடன் இணங்குகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிப்பத்குப் பொறுப்பான உபகுழுவாகும்.

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC), கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (CSE), மற்றும் மத்திய வங்கி ஆகிய ஒழுங்கமைத்தல் அதிகாரசபைகளால் உரிய விதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பரப்பெல்லையும் ஈடுபாடும்

எந்தவொரு நபருடனுமான, விசேடமாக சட்டத்தின் கீழ் தொடர்புடைய நபர் என வரையறுக்கப்படுபவர்களுடனான வங்கியினது எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழக்கூடிய எந்தவொரு அக்கறை முரண்பாட்டினையும் தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குழுவானது பொறுப்பாகவிருக்கும்.

மேலும், தொடர்புடைய தரப்பினருனான கொடுக்கல் வாங்கல்கள் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதி (SEC Code), கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை விதிகள் (CSE Rules) ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கான எண்ணக்கருக்களை அபிவிருத்தி செய்து பராமரிப்பதற்கான பொறுப்பு குழுவினைச் சாரந்ததாகும்.

ஆகையால், மீளாய்வாண்டில் குழுவானது தொடர்புடைய தரப்பினர் கொள்கையைப் (02/04/RPTC/2017) பின்பற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதிக ஆதரவாக நடாத்தும் முறை காணப்படவில்லை என உறுதிப்படுத்தி அதன் மூலமாக தொடர்புடைய தரப்பினருக்கு ஆதரவான நிபந்தனைகளின் கீழ் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை வங்கி மேற்கொள்வதில்லை என்பதை உறுதிப்படுத்தி அக்கறை முரண்பாட்டினைத் தடுப்பதற்காக குழுவானது முன்கூட்டியே தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை மீளாய்வு செய்தது.

மேலும், குழுவானது மீளாய்வாண்டில் நிதியாண்டின் போது மீளாய்வு செய்யப்பட்ட தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் மீதான கருத்துக்கள் / அவதானிப்புக்களை பணிப்பாளர் சபைக்கு அறிவித்தது.

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, குழுவின் ஆணையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை விதிகளின் (CSE Rules) 9 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான பொருத்தமன ஆண்டறிக்கை வெளிப்பாடுகளை மேற்கொள்வதில் சபையினை அறிவுறுத்துவதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிரதான முகாமைத்துவ ஆளணியினர (KMP), பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் (CFM) பற்றிய தகவல்கள் உள்ளடங்கலான தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பொருத்தமான தகவல்களைவ வங்கியின் தரவுச் சேகரிப்பிற்கு உள்ளடக்கி அதனை பதிவேற்றம் செய்வதனையும் அதன் துல்லியமான தன்மையையும் கண்காணிப்பதற்கான முறைமைகள் காணப்படுகின்றன.

குழுவினது உறுப்பாண்மையும் கூட்டத்திற்கான குழு உறுப்பினர்களினது வருகையும் ஆண்டறிக்கையின் 71 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியில் குழுவானது மூன்று (03) தடவைகள் கூடியது. (டிசம்பர் மாதம் நடைபெறவிருந்து நான்காவது கூட்டமானது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதுடன் சில பணிப்பாளர்கள் இதன் விளைவாக பணிப்பாளர் சபையில் தமது பதவிகளை விட்டு விலகியுள்ளனர்.)



ஆர். எச். மீவக்கால
தலைவர்



தர்ஷினி டீ சில்வா
கம்பனிச் செயலாளர்

கொழும்பில்.
2019 மே 02.

பணிப்பாளர் சபை உபகுழு அறிக்கைகள்

பணிப்பாளர் சபைக் கணக்காய்வுக் குழு
கணக்காய்வுக் குழுவானது, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினது "பட்டியற்படுத்தப்படும் விதிகள்", இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகியவற்றினால் இணைந்து விநியோகிக்கப்பட்டுள்ள "பெருநிறுவன ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளின் கோவை" மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பெருநிறுவனத் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் இவ்வறிக்கையினை 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்காகச் சமர்ப்பிக்கின்றது.

கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்
2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலின்படியிலான உள்ளடக்கத் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான மூன்று (3) நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களை நியமித்துள்ளது. உறுப்பினர்களது விபரங்கள் 90 ஆம் பக்கம் முதல் 93 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழுவின் சமவாயம்
கணக்காய்வுக் குழுவின் சமவாயமானது குழுவின் ஒழுங்குவிதிகளைத் தெளிவாக வரையறுப்பதுடன் அவை அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் சம்மதத்துடன் திருத்தப்படுகின்றன. இச்செய்முறையானது புதிய அபிவிருத்திகள் மற்றும் அக்கறைகள் போதியளவில் முகங்கொடுக்கக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கணக்காய்வுக் குழுவானது பணிப்பாளர் சபைக்குப் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதுடன் அதன் நடவடிக்கைகளைப் பணிப்பாளர் சபைக்கு ஒழுங்காக அறிக்கையிடல் வேண்டும். நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வுகளுடன் தொடர்புடைய தொழிற்பாடுகள் ஆகியவற்றின் மீதான அதனது பொதுவான மேற்பார்வைப் பொறுப்பில் பணிப்பாளர் சபைக்கு உதவுவதே கணக்காய்வுக் குழுவின் பணியாகும்.

கணக்காய்வுக் குழுவின் கூட்டங்கள்
2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் குழுவானது ஆறு கூட்டங்களை நடாத்தியுள்ளது. கூட்டங்களுக்கான உறுப்பினர்களின் வருகையானது ஆண்டறிக்கையின் பெருநிறுவன ஆளுகைப் பரிவில் தரப்பட்டுள்ளது.

பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பிரதானநிதி அலுவலர் பொதுவாக கூட்டங்களுக்குச் சமூகமளிப்பர். பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதான செயற்பாட்டு அலுவலர், இடர் அலுவலர் மற்றும் இணக்க அலுவலர் அழைப்பின் பேரில் கூட்டத்திற்குச் சமூகமளித்தனர். ஏனைய அலுவலர்கள் தேவையினடிப்படையில் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். குழுவின் அழைப்பின் பேரில், வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் மீளாய்வாண்டில் 05 கூட்டங்களுக்குச் சமூகமளித்துள்ளார்.

குழுவினால் பின்பற்றப்படும் முறையியல்
- வெளிப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களின் சீரான தன்மையை உறுதிப்படுத்தல், பணிப்பாளர் சபைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்தல்.
- வங்கியின் நிதி மற்றும் ஏனைய விவகாரங்களுடன் தொடர்புடைய எந்தவொரு விடயத்தையும் பரிசீலித்தல்
- துல்லியமான, பொருத்தமான, உரிய நேர தகவல்களைப் பணிப்பாளர் சபை, ஒழுங்கமைத்தல் அதிகார சபைகள், முகாமைத்துவம் மற்றும் ஏனைய அக்கறையுள்ளோருக்கு வழங்குவதற்கு வினைத்திறன் மற்றும் மிகச் சிறந்த நிதி அறிக்கையிடல் முறைமைகள் காணப்படுவதை உறுதிப்படுத்தல்
- சிறந்த பெருநிறுவன நடைமுறைகளின் உயரிய தராதரங்களை அடைவதற்கு உறுதியான அர்ப்பணிப்புடன் ஈடுபடும் கொள்கைகளை வங்கி பின்பற்றுவதை உறுதிப்படுத்தல்.
- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்பு இணக்கத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களை மீளாய்வு செய்தல்
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள், உரிய நடைமுறைகளை மீறுதல், முறைகேடுகளையும் தவறுகளையும் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுதல்
- வெளியகக் கணக்காய்வு மற்றும் சட்டபூர்வமான விசாரணை அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் அவற்றின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளைப் பின்தொடருதலும்.

நடவடிக்கைகளின் சாரம்சம்
மீளாய்வாண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **நிதி அறிக்கையிடல்**
குறிப்பிடத்தக்க நிதி அறிக்கையிடல் பிரச்சினைகள்,கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் அக்கறைகளில் கவனம் செலுத்துவதனூடாக வருடாந்த மற்றும் இடைக்கால கூற்றுக்கள் மற்றும் வேறு ஏதேனும் முறைசார் அறிவுப்புக்கள் உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களின் சீரான தன்மையைக் குழுவானது கண்காணித்தது.

- **உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவ முறைகள் மற்றும் இணக்கத் தேவைப்பாடுகள்**
இலங்கைக் கணக்காய்வு நியமங்களினது தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குக் காணப்படும் செய்முறைகள் போதியளவானவையா என்பதை உறுதிப்படுத்துமுகமாகவும் வங்கியினால் முகங்கொடுக்கப்படும் சகல குறிப்பிடத்தக்க இடர்களையும் அடையாளங்கண்டு முகாமைசெய்வதற்கு குழுவானது வங்கியினது உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ முறைகளைப் பராமரித்துள்ளது. அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கான கட்டாயத் தேவைப்பாடுகள் மற்றும் முறைமைகள் மற்றும் நடைமுறைகளையும் மேற்பார்வை செயதுள்ளது.

- **உள்ளகக் கணக்காய்வு**
  வங்கியின் ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவ முறையின் பரப்பெல்லையின் போதியதன்மை, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள் மற்றும் வளங்களைக் குழுவானது மீளாய்வு செய்தது. அது கணக்காய்வு செய்யும் செயற்பாடுகளைச் சுயாதீனமாக மேற்கொள்ளக் கூடியதாக உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு நிலவுகின்றது என்பதை குழு உறுதிப்படுத்தியுள்ளது.

குழுவானது உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்து, மதிப்பிட்டு அங்கீகரித்துள்ளது. உள்ளகக் கணக்காய்வுப் பிரதானி மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் சட்டபூர்வமான தேவைப்பாடுகளின் இணங்குகின்றதா என்பதற்கான மீளாய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

- **வெளியகக் கணக்காய்வும் ஏனைய சட்டபூர்வமான கணக்காய்வுகளும்**
  குழுவானது வெளியகக் கணக்காய்வாளர்களது கண்டுபிடிப்புக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட சட்டபூர்வமான தேவைப்பாடுகளை மீளாய்வு செய்ததுடன் சட்டத்தை மீறுதல், முறைகேடுகள் மற்றும் பிழைகளைத் தடுப்பதற்கான முன்கூட்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெருநிறுவன முகாமைத்துவத்துடன் இணைந்து பணியாற்றுகின்றது.

ஒழுக்கமும் பெருநிறுவன ஆளுகையும்

உள்ளகக் கணக்காய்வுச் சமவாயத்தை மீளாய்வு செய்து அங்கீகரிப்பதன் மூலமாக பெருநிறுவன ஆளுகையை குழுவானது மேம்படுத்துவதுடன் ஆளணி உறுப்பினர்களினது ஒழுக்கவியல் விழுமியங்களினை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்துகின்றது. இது தொடர்பில், ஏதேனும் பிழையான நடத்தை காணப்படின் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமற்றவைகள் நடைபெற்றால் தகவல் பெறுவதற்கு இரண்டு பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது பெருநிறுவன ஆளுகையின் உயர்தராதரமானது வங்கியினால்பின்பற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் வங்கியின் நிதிக் கூற்றுக்கள்.

வங்கியின் உத்தரவாதம் வழங்குவோரது பணியினை அடிப்படையாகக் கொண்டு, வங்கியின் உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கீட்டு நடைமுறைகள் ஒரு நம்பகமற்ற வருடாந்த நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கான அடிப்படையை வழங்கும் எந்தவொரு ஏதுவும் குழுவினால் அவதானிக்கப்படவில்லை. வங்கியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் சகல முக்கிய விடயங்களுடனும் இணங்குவதுடன், கம்பனிகள் சட்டம், மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதையிட்டு குழு திருப்தியடைவதுடன் நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்குப் பரிந்துரை செய்கின்றது.



கே. டீ. குணவர்தன
தலைவர்:

பணிப்பாளர் சபைக் கணக்காய்வுகக் குழு

2019 மே 02.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்



01

கலாநிதி கே. டீ. குணவர்தன
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

02

கலாநிதி ஆர். எச். மீவக்கால
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

03

திரு. யூ எச். சீ பிரியந்த
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

04

திருமதி ஆர். ஏ. சூலானந்த
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)



05 **திரு. எல். ஜயசிங்க**
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

06 **திரு. என். விஜயநாதன்**
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

07 **திரு. ஜே. ஆர்யூ. டீ சில்வா**
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

08 **திருமதி நூர் ரிஸ்னா அனீஸ்**
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

09 **திரு. எல். எஸ். பலன்சூரிய**
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீனமற்ற பணிப்பாளர்)

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள்

கலாநிதி ஆர். எச். மீவக்கால
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

கலாநிதி மிவக்கால HDFC வங்கியின் பணிப்பாளராகவும் தலைவராகவும் 2019 சனவரி 02 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார். கலாநிதி மீவக்கால அவர்கள் பட்டய சந்தைப்படுத்துனர் நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, ஸ்ரெட்ச்லைட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சந்தைப்படுத்துதல் முதுமாணி மற்றும் கொனலாலு மூலமாக கலாநிதிப்பட்டம் ஆகியவற்றைக் கொண்ட தொழில்சார் சந்தைப்படுத்துனராவார். சந்தைப்படுத்தல் தொழில் துறையில் அவரது தொழில் வாழ்க்கைக்குள்ள 25 வருட ஆயுட் காலத்தில் 19 வருடங்கள் அவர் சந்தைப்படுத்துதல் பணிப்பாளராகவும் மற்றும் குழுவினது நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகித்ததுமான சிலோன் டுபேக்கா கம்பனியில் (CTC) சேவையாற்றினார்.

அவரது சர்வதேச அனுபவத்தில் 3 வருடங்களாக பிரிடி' அமெரிக்கன் டுபேக்கோ, கம்போடியா, லாவோஸில் சந்தைப்படுத்தல் தலைவராக கடின பணியை மேற்கொண்டார். அவர் பிரிடி' அமெரிக்கா டுபேக்கோவினது தெற்காசிய சந்தைப்படுத்தல் தலைமைக் குழுவினது உறுப்பினராகவும் பணியாற்றினார். நாடு பூராகவும் வியாபார நிலையங்களைக் கொண்டுள்ள, அரசாங்கத்தினால் வழிநடாத்திச் செல்லப்படும் மிகப்பெரிய சில்லறை விற்பனையை 2015 செப்டம்பரில் அவர் சிலோன் டுபேக்கோ கம்பனியிலிருந்து விலகியதுடன் 2015 ஆம் ஆண்டில் கைத்தொழில், வாணிப அமைச்சரினால் லங்கா சதொசவின் பிரதான நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டில் அவர் சதொசவிலிருந்து விலகித் தனது சொந்த சந்தைப்படுத்தல் ஆலோசனைக் கம்பனியை ஆரம்பித்தார். பின்பு, இவர் வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி மீவக்கால 2017 ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் சிலோன் பெவரேஜ் கோல்டிங் மற்றும் சிலோன் பிரெவரியின் நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

திருமதி ஆர். ஏ. சூலானந்த
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திருமதி ஆர். ஏ. சூலானந்த HDFC வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினராக 2016 ஆகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டார்.

திருமதி சூலானந்த (விசேட தர இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்) தற்போது வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளராக (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) பணியாற்றகின்றார். அவர் 1991 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையில் ஒரு உதவிச் செயலாளராகத் தமது பணியை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் அவர் கஹவத்தை மற்றும் இம்புல்பேயில் உதவிப் பிரதேச செயலாளராகவும், அனுராதபுர மாவட்ட உதவிச் செயலாளராகவும், சொரனதொட்ட மற்றும் திம்பிரிகஸ்யாயவில் பிரதேச செயலாளராகவும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் இலங்கை மகளிர் பணியகப் பணிப்பாளராகவும் பல பதவிகளை வகித்தார். அவர் சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தில் ஒரு கலை மாணிப் பட்டத்தையும், இலங்கை ரஜரட்டைப பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு டிப்ளோமாதாரியாகவும், இலங்கை சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பொது நிருவாக முதுமாணியாகவும் விளங்குகின்றார்.

திரு. எல். ஜயசிங்க
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திருமதி லயனல் ஜயசிங்க HDFC வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினராக 2016 யூன் மாதம் நியமிக்கப்பட்டார்.

திரு லயனல் ஜயசிங்க தகவல் தொழில்நுட்பத்துறையில் முப்பத்தைந்து வருட அனுபவமுள்ள தகவல் (IS) பாதுகாப்பு ஆலோசகராவார். அவர் ஒரு கருத்திட்ட முகாமைத் தொழில் நிபுணராகவும் (PMP), சான்றுப்படுத்தப்பட்ட தகவல் முறைமைக் கணக்காய்வாளராகவும் (CISA) தகவல் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு சங்கத்தின் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகவும் விளங்குகின்றார். அவர் தகவல் தொழில்நுட்ப தொழில் திறன் அபிவிருத்திக் கவுன்சிலின் (ISACA), சபை உறுப்பினரவார். அவர் தேசிய மட்ட தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டங்களை முகாமை செய்துள்ளார். திரு ஜயசிங்க தகவல் தொழில்நுட்ப ஆளுகை, மென்பொருள் தர உத்தரவாதம் மற்றும் மென்பொருள் பொருளியல் தராதரங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளதுடன் அவர் இலங்கையில் CMMI மட்டம் 4 இனை நடைமுறைப்படுத்திய முதலாவது கருத்திட்டத்தை முகாமை செய்தார். அவர் தகவல் தொழில்நுட்ப கணக்காய்வு, தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட முகாமைத்துவம், மென்பொருள் தர உத்தரவாதம் மற்றும் தேசிய மற்றும் சர்வசேத கருத்தரங்குகளில் தகவல் பாதுகாப்பு தொடர்பாக பல பகிரங்க விரிவுரைகளையும் சமர்ப்பித்தல்களையும் மேற்கொண்டுள்ளார். அவர் தரவு களஞ்சியப்படுத்தல் மற்றும் தகவல் பாதுகாப்புக் கணக்காய்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்று வியாபார நிருவாகத்துறை முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் வியாபார நிருவாகத்திற்கான கொழும்பு பல்கலைக்கழக பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவினையும் கொண்டுள்ளார் (கொழும்புப் பல்கலைக்கழகம், 1996)

அவர் 2017 ஆம் ஆண்டில் COBIT5 சான்றுப்படுத்தலைப் பெற்றுக் கொண்டார். ஐக்கிய அமெரிக்காவின் கருத்திட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் இலங்கைக் கிளை உறுப்பினர் ஒருவராகவும், ஐக்கிய அமெரிக்காவின் தகவல் முறைமைகள் கணக்காய்வு மற்றும் கட்டுப்படுத்தல் சங்கம் மற்றும் பிரிடி' கணணிச் சங்கத்தினது உறுப்பழனராவார். அண்மையில் இவர் ஓமான் மத்திய வங்கியில் ஒரு தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுநராகப் பணியாற்றினார்.

திரு. என். விஜயநாதன்
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திரு. நிரூபன் விஜயநாதன் வேல்ஸின் கார்டிப் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தைக் கொண்டுள்ளார். அவருக்கு வங்கியியல், பொது வங்கியியலை உள்ளடக்கிய நிதிச் சேவைகள், திறைசேரி மற்றும் பணத் தரகு ஆகியவற்றில் 26 வருட காலத்திற்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இதில் இலங்கை சிட்டி வங்கியில் உப தலைவர்- பூகோள சந்தைகள் பெருநிறுவன விற்பனைகள் மற்றும் கட்டமைப்பு தலைவராக 11 வருடங்கள் பணியாற்றியமையும் உள்ளடங்கும். அவருக்கு அந்நியச் செலாவணி வியாபாரம்/ பணச் சந்தை/ நிலையான வருமானக் கருவிகள் (கடன் பிணையங்கள்) மற்றும் வாடிக்கையாளர் கட்டமைத்தலும் மதியுரை வழங்கலும் ஆகியவற்றில் பரந்த அனுபவம் காணப்படுகின்றது. அவர் இலங்கை பொரெக்ஸ் அமைப்பில் 2007- 09 வரை தலைவராகவும் 12 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் நிறைவேற்றுக் குழுவிலும் பணியாற்றினார். அவர் கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவனாவார்.

திரு. ஜே. ஆர். யூ. டீ சில்வா
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திரு. ரொஹான் டீ சில்வாவிற்கு முனாமைத்துவம், வணிகம் மற்றும் அரச துறையில் நாற்பத்தியொரு வருட அனுபவமுள்ளது. அவர் கப்பற்துறை, கடல் சம்பந்தமான, விமானப் போக்குவரத்து மற்றும் ஹோட்டல் வியாபாரத் துறையில் முன்னணி வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பதிலும் வணிகத்துறை தொழில் சார் சேவைகளில் புத்தாக்கத்தினைக் கொண்டு வருவதில் பரந்த அறிவுள்ளது.

திரு சில்வா இலங்கையிலுள்ள பாரிய நிறுவனக் குழுமமொன்றாகிய மெக் லேரன்ஸ் கம்பனிகளின் குழுமத்தின் தற்போதைய தலைவராவார். அவர் இலங்கைக்கான நமீபியக் குடியரசின் கௌரவத்திற்குரிய கவுன்சலாகவும் உள்ளார். திரு சில்வா அவர்கள் கப்பல் முகவர்களுக்கான மதியுரைக் குழுவின் இலங்கை அமைப்பிலும், துறைமுக, கப்பற்றுறை அமைச்சின் கப்பல் துறை போக்குவரத்து விவகாரங்களுக்குமான மதியுரைக் குழு ஆகிய இரண்டினதும் உறுப்பினராவார்.

கடந்த காலத்தில் அவர் கப்பற்றுறைக் கொள்கையொன்றை அமைப்பதற்கான சனாதிபதியின் படையணியின் உறுப்பினரொருவராகவும், இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளராகவும், வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் விமானப் போக்குவரத்து சேவைகளின் பணிப்பாளர்களாகவும் உள்ளனர். திரு. சில்வா வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் விமானப் போக்குவரத்து சேவைகளின் கணக்காய்வுக் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.

திரு டீ. சில்வா கொழும்பு சர்வதேச கடல் சம்பந்தமான கருத்தரங்கு 2015 இல் பெற்றுக் கொண்ட விசேட விருது மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கப்பற்போக்குவரத்து நிறுவனத்தின் இலங்கைக் கிளையினால் வழங்கப்பட்ட 'கப்பல்துறை ஆளுமை' எனும் விசேட அங்கீகாரம் உள்ளடங்கலாக இலங்கை கப்பற்றுறைக்கு அவர் வழங்கிய பங்களிப்பிற்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவருக்கு பூகோள வணிகச் சிறப்பிற்கான □மத்திய வங்கி ஆளுநர் கிண்ணம் -2012□ உம் வழங்கப்பட்டது.

திரு. யூ எச். சீ பிரியந்த
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திரு. யூ.எச். சீ. பிரியந்த இலங்கை நிருவாகச் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த சிரே'ட அலுவலர் ஒருவராவார். தற்போது அவர் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பணியாற்றுகின்றார். அமைச்சொன்றின் மேலதிகச் செயலாளராகவிருப்பவர் நிருவாகம், திட்டமிடல் மற்றும் பாராளுமன்ற அலுவல்களுக்குப் பொறுப்பாகவிருப்பார்.

அவரது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளில் சிறீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் இரண்டாம் வகுப்புடன் கூடிய விஞ்ஞான மாணி (வியாபார நிருவாகம்) பட்டத்தையும், வயம்ப பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தையும், களனிப் பல்கலைகழகத்தின் முது கலைமாணி (சமூகவியல்), சிறீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, சர்வதேச கற்கைளுக்கான பண்டார நிலையத்தின் சர்வதேச உறவுகளுக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் கௌரவமிக்க பல்கலைக்கழகங்களிலிருந்து வேறு சில டிப்ளோமாக்களையும் குறிப்பிடலாம்.

வியாபாரம், முகாமைத்துவம், வணிகம் மற்றும் பொது நிருவாகம், சர்வதேச உறவுகள், குடியகல்வு நிருவாகம், தொழிலாளர் உறவுகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை அவர் பெற்றுள்ளார்.

அவர் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அவர் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரதி பணிப்பாளர் நாயகமாகவும் (நிருவாகம், நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள்), குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் சிரே'ட பிரதிக் கட்டுப்பாட்டாளராகவும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் கணக்காய்வுப் பரிசோதகராகவும் பணியாற்றியுள்ளார்.

அரசாங்கக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக பகிரங்க சேவையில் திரு. பிரியந்தவினது தொழில் வாழ்க்கை 31 வருடங்களுக்கும் மேலானதாகவிருப்பதுடன் முகாமைத்துவம், பொது நிருவாகம், நிதி கொள்கை வகுத்தல், திட்டமிடல் விடயங்கள் ஆகிய துறைகளில் அவருக்குப் பரந்த அனுபவம் காணப்படுவதுடன் பல அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளார்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள்

திரு. எல். எஸ். பலன்சூரிய
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

திரு. லக்விஜய சாகர பலன்சூரிய வீடமைப்பு மற்றும் குடியேறுதல் துறையில் கடந்த 3 ½ தசாப்த காலமாகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒரு முகாமையாளராக 1984 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டு பின்னர் சிரேஷ்ட முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் பொது முகாமையாளர் பதவிகளுக்கு பதவியுயர்த்தப்பட்டார்.

1985 ஆம் ஆண்டு முதல் இவர் ஐக்கிய நாடுகள் வாழ்விட வருடாந்த கருத்தரங்கிற்கான இலங்கைத் தூதுக் குழுவின் உறுப்பினரொருவராகவிருந்ததுடன் கடந்த 30 வருடங்களாக வீடமைப்பு மற்றும் வதிவிடத் துறையில் பணியாற்றி வருகின்றார்.

2011 ஆம் ஆண்டில் திரு பலன்சூரிய நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டு பின்னர். தேசிய வீடமைப்புச் செயலகத்தின் ஆலோசகரொருவராக நியமிக்கப்பட்டார்.

அவர் தேசிய வீடமைப்புக் கொள்கைக் குழுவினது உறுப்பினரொருவராகவிருந்ததுடன் அக்காலப்பகுதியில் தேசிய வீடமைப்புக் கொள்கையை ஆவணப்படுத்துவதில் சிரேஷ்ட ஆசிரியராக ஆசிரியர் குழாத்தில் பணியாற்றினார்.

தற்போது அவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகப் பணியாற்றுவதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட ஓஷயன் வீவ் அபிவிருத்திக் கம்பனி, தேயிலை, இறப்பர் தென்னைத் தோட்டங்கள் துண்டாடல் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் செவன முகாமைத்துவ சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகப் பணியாற்றுகின்றார்.

திரு. பலன்சூரிய பேராதனைப் பல்கலைக்கழக பொதுப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் (1975) அவர் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பணியாற்றும் போது கைத்தொழில்துறை அபிவிருத்தித் தகவலில்1982 ஆம் ஆண்டில் மணிலாவிலுள்ள பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு உயர் தேசிய டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். 2005 ஆம் ஆண்டில் அவர் சிங்கப்பூர் சிவில் கல்லூரியில் இணைந்து 2009 ஆண்டில் டிப்ளோமாவொன்றைப் பெற்றுக் கொண்டார்.

திரு. பலன்சூரிய 1984 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை வீடமைப்பு மற்றும் குடியிருப்பு தொடர்பாகப் பல்வேறு வெளியீடுகளையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளார்.

கலாநிதி கே. டீ. குணவர்தன
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)

கலாநிதி கென்னடி டீ குணவர்தன அவர்கள் இலங்கை சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுத் திணைக்களத்தின் கணக்கீட்டுத் தகவல் முறைமைகள் பேராசிரியர் ஆவார்.

கணக்கீட்டுத் திணைக்களத்தில் ஒரு பேராசிரியராவதற்கு மேலதிகமாக, அவர் கற்கைகள் சபையின் தலைவராகவும் அதே பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் கலாநிதிக் கற்கைகளின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுகின்றார். அவர் கிரயம் மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு, கணக்கீட்டுத் தகவல் முறைமை, பட்டதாரி மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு கணக்கீடு மற்றும் நிதியியல் தொடர்பான கணக்கீடு மற்றும் ஆய்வு முறையியலுக்கான செயற்கை நடுநிலை வலையமைப்புக்களையும் அவர் கற்பிக்கின்றார்.

திரு. குணவர்தன அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தலைவராகப் பணியாற்றியுள்ளதுடன் தற்போது அவர் சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (PIM) சபை உறுப்பினராகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவ மேம்பாட்டு நிறுவகத்தின் (IHRS) ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

கலாநிதி குணவர்தன கணக்கீடு மற்றும் பெருநிறுவன துறை எதிர்வு கூறல்களுடன் செயற்கை நுண்ணறிவினை இணைத்த முதலாவது இலங்கையராவார். அவர் அதற்காக கணக்கீட்டிற்கான செயற்கை நரம்பு வலையமைப்பு எனும் புதிய கற்கைநெறி அலகினை அபிவிருத்தி செய்தார். இது தற்போது பல்கலைக்கழக மாணவர்களிடத்திலே மிகவும் பிரபல்யமான கற்கைநெறியாகவுள்ளது.

கலாநிதி குணவர்தன கணக்கீடு, முகாமைத்துவ தகவல் முறைமைகள் மற்றும் ஆய்வு முறைமை ஆகிய விடயப் பரப்புக்களில் மொரட்டுவை, களனி மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக வியாபார நிருவாக முதுமாணிக் கற்கை நெறிகளுக்கான வருகை தரும் பீட உறுப்பினராகப் பணியாற்றுகின்றார். நடுவர் மாநாட்டு வெளியீட்டு நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுடன், ஏனைய பல ஆய்வுப் பத்திரங்கள், 6 ஆங்கிலப் புத்தகங்கள், 3 சிங்களப் புத்தகங்கள் சர்வதேச புத்தகங்களில் 2 அத்தியாயங்கள் ஆகியன அவரது சான்றுகளின் கீழ் வருகின்றன. கலாநிதி குணவர்தன கல்வித் துறையில் கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆய்வுகளில் உயர் நிலையில் இருக்கின்றார். தற்போது அவர் இலங்கை சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுத் தகவல் முறைமையில் சிரே‘ட பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.

திருமதி நூர் ரிஸ்னா அனீஸ்
(நிறைவேற்று தரமல்லாத, சுயாதீன பணிப்பாளர்)
திருமதி நூர் ரிஸ்னா அனீஸ் HDFC இன் பணிப்பாளர் சபை உறுப்பினராக 2019.03.25 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார். திருமதி அனீஸ் தற்போது நிதி அமைச்சின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகின்றார். அவர் தனது தொழிலினை இலங்கைத் திட்டமிடல் சேவையில் உதவிப் பணிப்பாளரொருவராக ஆரம்பித்தார்.

பின்பு அவர் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக 2011 ஆம் ஆண்டு வரையிலும் (2011- 2016) மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்கத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் (2016-2019) பணியாற்றினார். அதன் படி, அவருக்கு

அரச துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமான சேவை அனுபவமுள்ளது. நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் தொடர்பான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்ட கிராமிய நிதியுடன் கூடிய பல்வேறு இயல்திறன் கொண்ட கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு அனுபவமுள்ளது.

அவருக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வணிக மாணி (கௌரவ) பட்டமொன்றும், கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு தொழிலாளர் கற்கைகள் டிப்ளோமா மற்றும் யப்பானின் நகோயா பல்கலைக்கழகத்திலிருந்து விவசாய விஞ்ஞானத்திற்கான முதுமாணிப் பட்டமும் உள்ளன. தற்போது அவர் மலேசியாவின் ஆசியா பல்கலைக்கழகத்தின் கேம்பிரிட்ஜ் கல்லூரியின் வியாபார நிருவாக கலாநிதிப் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்ட வருகின்றார்.

SLIDA நிறுவனமானது பலதரப்பு அபிவிருத்திப பங்காளர்களுடன் இணைந்து நடாத்தும் பூகோள அபிவிருத்திக கற்கை வலையமைப்பினுடாக நடாத்தும் தொலைதூரக் கற்கை நெறியாகிய பயிற்றுவிப்போருக்குப் பயிற்றுவித்தல் கற்கைநெறியினை நுண்ணிதியியல் துறையில் பூரணப்படுத்தியுள்ளதுடன் USAID இனால் நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட அரசாங்கத் தனியர் துறைப் பங்காண்மை (அடிப்படை மட்ட, நடுத்தர மட்ட மற்றும் உயர் மட்ட) பயிற்றுவிப்போருக்குப் பயிற்றுவித்தல் கற்கைநெறியினையும் பூர்த்தி செய்துள்ளார். அதற்கு மேலதிகமாக, அவர் கருத்திட்ட முகாமைத்துவம், நுண்ணிநிதியியல், சிறிய நடுத்தர முயற்சியாண்மை, நிதிச் சந்தை, கீழ்க்கட்டமைப்பு கருத்திட்ட திட்டமிடல் மற்றும் ஏனைய விடயங்களில் பல சர்வதேச மற்றும் உள்நாட்டு பயிற்சி நெறிகளில் பங்குபற்றியுள்ளார்.

அவருக்குத் திறைசேரிப் பிரதிநிதியாகவும் பல பணிப்பாளர் சபைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் பணியாற்றிய அனுபவம் உள்ளது.

பெருநிறுவன முகாமைத்துவம்



01 திரு. எச். ஏ. அனுர
பிரதான முகாமையாளர் - நிதி

02 திருமதி டப்ளியூ. என். டீ. பொதேஜு
பிரதான முகாமையாளர் - மனித வள முகாமை மற்றும் நிதி

03 திரு. பாலித கமகே
பொது முகாமையாளர் /பிநிஅ

04 திரு. எம். கே. நம்பியூரான்
பிரதான செயற்பாட்டு அலுவலர்

05 திருமதி எச். எஸ் குணதிலக
உதவிப் பொது முகாமையாளர் - நிருமாணம் மற்றும் பராமரிப்பு

06 திரு. கே. ஆர். எம். ஏ பண்டார
பிரதான முகாமையாளர் - இணக்கம்



07 திருமதி டப்ளியூ. டப்ளியூ டீ. எஸ் சீ பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்- சட்டம்

08 திரு சீ. ஆர். பீ. பாலசூரிய
உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரி

09 திரு ஏ. ஜே. அதுகோரல
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

10 திரு டீ. எம். டீ. எம்.கே. திஸாநாயக்க
தலைவர் - கடன்கள்

11 திருமதி கே. டீ.டீ. சில்வா
பிரதான முகாமையாளர் - வங்கி சபைச் செயலாளர்

12 திரு டீ. வீ. பதிரண
பிரதான நிதி அலுவலர்

13 திரு ஏ. எம். நீலச் சந்திர
பதில் தகவல் தொழில்நுட்ப தலைவர்

பெருநிறுவன முகாமைத்துவம் பற்றிய விபரங்கள்

திரு பாலித கமகே
பிநிஅ/ பொமு

30 வருடங்களுக்கும் அதிகமான வங்கித்துறை ஆனுபவம் வாய்ந்த திரு பாலித கமகே அவர்கள் 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. கமகே தனது வங்கியியல் தொழிலை DFCC இல் 1987 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 1987 ஆம் ஆண்டில் DFCC இல் இணைய முன்னர், அவர் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தில் சிவில் பொறியியலாளராகப் பணியாற்றினார்.

DFCC இல், அவர் பெருநிறுவன வங்கியியல், சிறிய நடுத்தர முயற்சியாண்மை வங்கியியல், முதலீட்டு வங்கியியல், திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளில் பல சிரேட்ட முகாமைத்துவப் பதவிகளில் பணிபுரிந்துள்ளார். அதற்கு மேலதிகமாக, DFCC வர்தன வங்கியின் கூட்டுக் கடன் பிரிவின் தலைவராகவும் அவர் பணியாற்றினார்.

அதன் பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளராக வங்கியில் இணையும் போது, அவர் DFCC வங்கியின் நிறைவேற்று உதவித் தலைவர்(ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவம்) / பிரதான இடர் அலுவலர் பதவியை வகித்து வந்தார். அவர் வியாபார முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் ஆளுகைச் சபையின் உறுப்பினராக 2010 முதல் மூன்று வருடங்கள் சேவையாற்றியதுடன் வரையறுக்கப்பட்ட தேசிய சொத்து முகாமைத்துவ கம்பனியின் [NAMAL] நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளராக 2014 ஆம் ஆண்டு முதல் சேவையாற்றினார். அதற்கு மேலதிகமாக, இரண்டு வருட காலமாக NAMAL இல் சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும், வரையறுக்கப்பட்ட எயூடிடி செகியூரிடீஸ் நிறுவனத்தின் இடர் முகாமைத்துவத் தலைவராகவும் பணியாற்றினார்.

அவரது தொழில் வாழ்க்கையில் திரு கமகே வங்கியின் பல்வேறு அமடசங்களையும் உள்ளடக்கும் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளில் பங்குபற்றியுள்ளார்.

திரு. கமகே மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணி (பொறியியல்) கௌரவப் பட்டத்தையும் தாய்லாந்தின் ஏசியன் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னொலொஜியின் வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். அவர் பட்டய முகாமைத்துவ கணக்காளர் (CIMA), UK இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் இலங்கைப் பொறியிலாளர் நிறுவகத்தின் பெருநிறுவன உறுப்பினரும் ஆவார்.

திரு. எம். கே. நம்பியூரான்
பிரதான செயற்பாட்டு அலுவலர்

திரு. எம். கே. நம்பியூரான் 2018 யூலை 16 ஆம் திகதி HDFC வங்கியின் பிரதான செயற்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டார். திரு. எம். கே. நம்பியூரான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிதிப் பொருளாதார முதுமாணிப் பட்டதாரியாகவும் சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் நிருவாக முகாமைத்துவ முதுமாணிப் பட்டதாரியாகவும் விளங்குகின்றார். அவர் ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ நிறுவகத்தின் சக உறுப்பினரொருவராகவும் அவுஸ்திரேலியா பட்டயத் தொழில்சார் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும் உள்ளார். அவர் வங்கியியலாளர் நிறுவக உறுப்பினரொருவரும் ஆவார்.

கடன், குத்தகை, பொருள் அபிவிருத்தி, கிளைச் செயற்பாடுகள், நிதி, பாதீட்டுத் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு, திறைசேரி மற்றும் தந்திரோபாயம் என்பவற்றில் 27 வருடங்களை விடக் கூடிய கால அனுபவத்தைக் கொண்டவராவார்.

திரு. நம்பியூரான் அபான்ஸ் கம்பனிகள் குழுமத்தில் 7 வருடங்களுக்கு மேல் குழுத் திறைசேரித் தலைவராகவும் அபான்ஸ் பைனான்ஸ் பீஎல்சீயில் பொது முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது வெளிநாட்டு அனுபவத்தில் அபுதாபி டெல்மா எக்ஸஸசேன்ஜில் முகாமைப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலருக்கான மாற்றுப் பணிப்பாளராகவும் மஜான் எக்ஸ்சேன்ஜ் மற்றும் கனேடிய வணிக இன்டர்லிங்க் ஆகியவற்றில் பணியாற்றியமை உள்ளடங்கும்

திரு டீ. விதானபதிரண
பிரதான நிதி அலுவலர்
BSc, MBA, FCA, FCMA, FCPM

நியமனத் திகதி - 2004 செப்டம்பர் 2004

இலங்கையிலும் வெளிநாட்டிலும் கணக்காய்வு, கணக்கீடு, நிதி முகாமைத்துவம், கருத்திட்டங்கள் மற்றும் முதலீட்டு மேம்படுத்தல்கள், முகாமைத்துவக் கணக்கீடு, கருத்திட்ட நிதி, வியாபார அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல், வங்கியியல், திறைசேரி முகாமைத்துவம் என்பவற்றில் அவருக்கு 34 வருட அனுபவமுள்ளது. அவர் தற்போது வங்கியின் நிதி மற்றும் திட்டமிடல் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ளார்.

திரு ஏ. ஜே. அதுகோரல
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
BSc, ACMA, CISA, CISM, கணணி முறை வடிவமைப்பு டிப்ளோமா *(NIBM)*

நியமனத் திகதி- -2009 யூலை 1
கணக்காய்வுச் செயற்பாட்டில் சிறப்புத் தேர்ச்சி பெற்று 31 வருடங்களை விடக் கூடுதலான நிறைவேற்றுத்துறை அனுபவத்தை இவர் கொண்டுள்ளார். அவருக்கு அவ்வனுபவம் அரசாங்க மற்றும் தனியார் ஆகிய துறைகளில் காணப்படுகின்றது.

திருமதி டப்ளியூ. டப்ளியூ டீ. எஸ் சீ பெரேரா
உதவிப் பொது முகாமையாளர்- சட்டம்
சட்டத்துறை அற்றோனியும் பிரசித்த நொத்தாரிசும்

நியமனத் திகதி- 1992 நவம்பர் 16

அவர் வங்கியின் சட்ட அலுவலராக அவரது தொழில்வாழ்க்கை ஆரம்பித்து 2001 இல் சட்ட முகாமையாளராகப் பதவியுயர்த்தப்பட்டார். 2015 ஆம் ஆண்டில் அவர் சட்டத்துறைக்கான உதவிப் பொது முகாமையாளராகத் தரமுயர்த்தப்பட்டார்.

அவர் வீடமைப்பு நிதித்துறை, வங்கியியல் மற்றும் வழக்காடலில சிறப்புத் தேர்ச்சி பெற்று சட்டத்துறையில் 26 வருடங்களுக்கும் அதிகமான தொழில் நிபுணத்துவ அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

திருமதி எச். எஸ் குணதிலக
உதவிப் பொது முகாமையாளர் - நிருமாணம் மற்றும் பராமரிப்பு (வியாபார அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும்)
MBA, சந்தைப்படுத்தலில் PGD, நகர முகாமைத்துவத்தில் PGD (IHS நெதர்லாந்து), BA (இலங்கை)

நியமனத் திகதி- 1991 யூன் 20

அரசாங்க மற்றும் தனியார் துறை வீடமைப்புத்துறையில் 34 வருடங்களுக்குமதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

திரு சீ. ஆர். பீ. பாலசூரிய
உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரி நிதிப் பொருளாதார முதுமாணி, *B Com (விசேட), MAAT*

நியமனத் திகதி- 2004 மார்ச் 22
அவருக்கு வணிக மற்றும் வங்கியியல் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட தொழில்சார் அனுபவத்தைக் கொண்டவராவார்.

திரு. மஞ்சுள கித்சிறி திஸாநாயக்க
தலைவர் கடன்கள்
ACA, ADCM (IBSL)

நியமனத் திகதி- 2012 யூன் 18

கடன் மற்றும் நிதித் துறையில் 20 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். HDFC வங்கியில் இணைய முன்னர் அவர் கடன் அலுவலர், கணக்கு முகாமையாளர், சிரே்ட கணக்கு முகாமையாளர், கணக்காளர் மற்றும் சிரே்ட முகாமையாளர் கடன்கள் மற்றும் செயற்பாடுகளில் பிரதான தனியார் துறை நிதி நிறுவனங்களில் பணியாற்றினார். அவர் கணக்காய்வு, நிதி முகாமைத்துவம், வரியியல், செயற்பாடுகள் மற்றும் கடன் முகாமைத்துவத் துறையில் அவருக்கு அனுபவமுள்ளது.

திருமதி கே. டீ. தர்'னீ டீ. சில்வா
வங்கி / சபைச் செயலாளர் / பிரதான முகாமையாளர்
சட்டத்துறை அற்றோனியும் பிரசித்த நொத்தாரிசும், *LLM, MBA,* வங்கி நிதி மற்றும் காப்புறுதியில் உயர் டிப்ளோமா

அவர் HDFC தொழில் வாழ்க்கையை ஒரு சட்டத்தரணியாக சட்டத் திணைக்களத்தில் ஆரம்பித்ததுடன் அதன் பின்னர் வங்கி / சபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார். அவர் 25 வருடங்களுக்கும் அதிகமான வழக்காடல், மீளப்பெறல், மனித வளம் போன்ற துறை அனுபவங்களைக் கொண்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக தற்போது அவர் கம்பனியில் செயலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். அவரது தொழில் துறையின் ஆரம்ப கட்டத்தில் அவர் சிவில் வழக்குகளில் ஈடுபட்டதுடன் அதன் பின்னர் HDFC இல் இணைய முன்னர் எலயன்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தில் பணியாற்றினார்.

அவர் வியாபார நிருவாக முதுமாணி (MBA), சட்ட முது மாணி (LLM) மற்றும் வங்கியியல் நிதி மற்றும் காப்புறுதியில் உயர் தேசிய டிப்ளோமா ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.

திரு. எச் ஏ. அருண
பிரதான முகாமையாளர் - நிதி
MBA,PGDM (RJT), B.Sc. Accy& Fin. MGT (Sp) Degree (USJ), MIPA (Au), MIFA(UK), MAAT, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைத் தகுதிஇ

நியமனத் திகதி- 2004 ஒக்டோபர் 1

அவருக்கு வங்கித்துறை, கடன், மீளப்பெறல், நிதி திரட்டுதல், கிளை செயற்பாடுகள், கணக்கீடு, நிதி முகாமைத்துவம், வரியியல், கணக்காய்வு, திறைசேரி முகாமைத்துவம், இணக்கம், பெருநிறுவன நிதி அறிக்கையிடல் மற்றும் ஆண்டறிக்கைகள், பாதீடு மற்றும் நிதித் திட்டமிடல் துறைகளில் இரண்டு தசாப்த கால வேலை அனுபவமுள்ளது.

அவர் அவரது கணக்கீட்டு தொழில் வாழ்க்கையை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்து ஒரு கணக்காய்வாளர் நிறைவேற்று அலுவலர், உதவி முகாமையாளர் தரத்தில் 1998 ஆம் ஆண்டு பிராந்திய அபிவிருத்தி வங்கியில் இணைந்தார். HDFC இல் 2004 இல் கம்பஹாவிற்கான கிளை முகாமையாளராக இணைந்து கொண்டு 2007 முதல் திறைசேரிக் கணக்காளராக, நிதிக் கணக்காளராக மற்றும் நிதித்துறை சிரேஷ்ட முகாமையாளராக அவர் பணியாற்றினார்.

திருமதி டப்ளியூ. என். டீ. பொதேஜு
பிரதான முகாமையாளர் - மனிதவளமும் நிருவாகமும்
டீளஉ. வியாபார நிருவாகம் (விசேட), CBA (CA இலங்கை), CBF

நியமனத் திகதி- 1995 யூலை 1

அவருக்கு தனியார் துறை மற்றும் வங்கித் துறையில் கள முகாமைத்துவம், நிதி மனித வளம் மற்றும் ஏனைய துறையில் 24 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுள்ளது.

திரு. கே. ஆர். எம். அருண பண்டார
பிரதான முகாமையாளர் - இணக்க அலுவலர்
B.Com (விசேட), CBA (CA இலங்கை), SAT (AAT இங்கை), CBF

நியமனத் திகதி- 1999 மே 3

அவருக்கு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 29 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுள்ளது. HDFC வங்கியில் இணைய முன்னர் அவர் பகிரங்க கூட்டுத்தாபனம் மற்றும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்களில் கணக்காய்வு செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுக் காணப்பட்டார். அவர் 2012 சனவரி 02 ஆம் திகதி முதல் இணக்கத்திற்கான தலைவராக நியமிக்கப்பட்டார்

திரு. ஏ. எம். நீலச்சந்திர
பதில் பிரதான முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம்
BSc, NIBM

நியமனத் திகதி- 1997 டிசம்பர் 1.

அவரிடம் வங்கியியல் மற்றும் அரசாங்கத் துறையில் தகவல் தொழில் நிபுணத்துவத்தில் 23 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுள்ளது. UNIX அடிப்படையான முறைமைகளை நிறுவுதல்,கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல், தரவுத்தளத்தைக் கட்டமைத்தலும் பராமரித்தலும், வலையமைப்பு நிருவாகம் ஆகிய துறைகளில் அவருக்கு பரந்ததொரு அனுபவமுள்ளது. அவர் HDFC இனது அடிப்படை வங்கியியல் நடைமுறைப்படுத்தல் மற்றும் முறைமை மாற்றம் ஆகியவற்றில் கருத்திட்ட முகாமையாளராகப் பணியாற்றினார். அவர் கணணி மற்றும் தொழில்நுட்பக் கவுன்சிலில் இரண்டு வருடங்களாகப் பணியாற்றினார்.

பிரிவுத் தலைவர்கள்















1 திருமதி. எல். ஏ. எஸ். சீ விஜேதுங்க - சிரேஷ்ட முகாமையாளர்- ஆதனங்கள்
2 திரு. டப்ளியூ. எம். சந்திரசேன - முகாமையாளர்- விலை மதிப்பீடு
3 திரு. பீ. எஸ். பிடவல - சிரேஷ்ட முகாமையாளர்- நிருவாகம்
4 திரு. பீ. எம்.பீ. பெரேரா- முகாமையாளர்- கடன் நிருவாகம் மற்றும் பிற வருமானத்தின் பொறுப்பில்
5 திரு. டீ. பீ கருணாபந்து - முகாமையாளர்- தங்கக் கடன்
6 திரு. டீ. எம். ஏ. திஸாநாயக்க – முகாமையாளர் - பெருநிறுவன மற்றும் அபிவிருத்தி நிதி
7 திரு. ஐ. நிஷாந்த - இடர் அலுவலர் - சிரேஷ்ட முகாமையாளர்













8 திருமதி எல். குணதிலக - சிரேஷ்ட முகாமையாளர்- மீளப்பெறல்
9 திருமதி எல். டீ. எஸ். எச். லியனகே – முகாமையாளர் - (கொடுப்பனவு)
10 திருமதி கே. ஏ. ஏ. நிர்மலீ – முகாமையாளர்- கணக்கீட்டுக் கட்டுப்பாடு
11 திரு. டீ. என. தர்மரத்ன - சிரேஷ்ட முகாமையாளர்- குத்தகை
12 திருமதி எம். யூ. எஸ். டீ. கொஸ்தா- முகாமையாளர் - செயற்பாடுகள்
13 திருமதி என். எல். விஜேசிறி- முகாமையாளர் - தொழில்நுட்பம்

பிராந்திய முகாமையாளர்கள்













1 திரு. டப்ளியூ. டீ. கே. செனவிரத்ன – பிராந்திய முகாமையாளர்
2 திருமதி ஆர். ஆர். குணவர்தன- பிராந்திய முகாமையாளர் / பிரதான முகாமையளார் – கடன்
3 திரு. எச். எம். திலகரத்ன – பிராந்திய முகாமையாளர்
4 திரு. ஐ. கே. தவடங்க – பதில் பிராந்திய முகாமையாளர்
5 திரு. ஆர். ஏ. ஜே. என். ரணசிங்க – பிராந்திய முகாமையாளர்
6 திரு. பீ. டப்ளியூ. எம். சீ. குமாரசிறி – பிராந்திய முகாமையாளர்

கிளை முகாமையாளர்கள்

பெயர்	கிளை	பதவி
திரு. எஸ். எச். கே. கமகே	சிலாபம்	கிளை முகாமையாளர்
திருமதி என். ஏ. ஏ. என். எஸ். நிஸ்ஸங்க	கம்பளை	கிளை முகாமையாளர்
திரு. டப்ளியூ. பீ. ராஜசிங்க	இரத்தினபுரி	கிளை முகாமையாளர்
திருமதி டி. டீ. ஏ ஜயசிங்க	அவிஸ்ஸாவளை	கிளை முகாமையாளர்
திரு. எஸ். எம். எஸ். கே. பண்டார	நுவரெலியா	கிளை முகாமையாளர்
திரு எல். எஸ். பீ ரத்னாயக்க	கண்டி	கிளை முகாமையாளர்
திரு. பீ. ஏ. சேனாரத்ன	மாத்தளை	பதில் கிளை முகாமையாளர்
திரு. ஜீ டப்ளியூ. ஏ. என் கலிந்த	மாத்தறை	கிளை முகாமையாளர்
திருமதி எம் மாலனி	குளியாபிட்டிய	பதில் கிளை முகாமையாளர்
திரு. எச். எம். யூ. சமரவீர	குருணாகல்	கிளை முகாமையாளர்
திரு. டீ. கே. பீ. த சில்வா	நுகேகொடை	கிளை முகாமையாளர்
திருமதி ஆர். எஸ். ஐ சில்வா	களுத்துறை	கிளை முகாமையாளர்
திருமதி டீ. எம். டீ. டீ. கே. மடாடுவ	ஜா எல	கிளை முகாமையாளர்
திருமதி ஏ. ஏ. எஸ். ஸ. டீ. சோமதிலக	காலி	கிளை முகாமையாளர்
திருமதி யூ. கே. சமராரச்சி	கொழும்பு	கிளை முகாமையாளர்
திரு. ஈ. டீ. டீ. சம்பத்	ஹைட் பார்க்	கிளை முகாமையாளர்
திரு. ஏ. ஐ. கிரியல்ல	பிலியந்தல	கிளை முகாமையாளர்
திரு. எச். ஏ. எஸ். எல். ஹபன்கம	கிரிபத்கொடை	கிளை முகாமையாளர்
திரு. ஏ. யூ. எம். எஸ். பீ அத்தநாயக்க	நிட்டம்புவ	கிளை முகாமையாளர்
திரு. பீ. ஏக்கநாயக்க	எம்பிலிபிட்டிய	கிளை முகாமையாளர்
திரு. எம். ஏ. எஸ். தேசப்பிரிய	தங்கல்லை	கிளை முகாமையாளர்
திரு. எம். எல். ஏன். அனுராத	திஸ்ஸமஹாராமை	கிளை முகாமையாளர்
திருமதி டப்ளியூ எம். ஏ. பீ. பெர்னான்டோ	கம்பஹா	கிளை முகாமையாளர்
திருமதி எம். ஜீ. டீ. பீ. செனவிரத்ன	பதுளை	கிளை முகாமையாளர்
திரு. எஸ். ஆர் சீ. பீ. குமார	அம்பலாங்கொடை	கிளை முகாமையாளர்
திரு. டீ. ஜீ. ஆர். எம்.ஆர். எம். ரத்னாயக்க	தம்புள்ளை	கிளை முகாமையாளர்
திரு.. டீ. ஏ. என். பீ. கே. பியதாஸ	நிகவரெட்டிய	கிளை முகாமையாளர்
திரு. எச். ஆர். எம் தாரக்க	பொலந்நறுவை	பதில் கிளை முகாமையாளர்
திரு. டீ. எச. எம். ஏ. ஹேவகே	பேலியகொடை	கிளை முகாமையாளர்
திரு. டீ. வீ. டீ. நயனஜித்	மொனராகலை	பதில் கிளை முகாமையாளர்
திரு. கே. ஏ. ஏ. பீ. எஸ். குமார	ஹோமாகமை	கிளை முகாமையாளர்
திரு. ஆர். ஏ. சீ. எஸ் புஷ்பகுமார	கேகாலை	கிளை முகாமையாளர்
திரு. டீ. ஏ. ஜெகதீபன்	மட்டக்களப்பு	கிளை முகாமையாளர்
திரு. பீ. ஏ. விராஜ் சம்பத்	ஹெரணை	பதில் கிளை முகாமையாளர்
திரு எம். எஸ். எம். கடாபி	அம்பாறை	பதில் கிளை முகாமையாளர்
திரு. டீ. எஸ். ஆர் திஸாநாயக்க	அனுராதபுரம்	பதில் கிளை முகாமையாளர்
திருமதி எஸ். சுயனியா	யாழ்ப்பாணம்	பதில் கிளை முகாமையாளர்
திரு. ஏ. ஜீ. ஸ்டீபன்	திருகோணமலை	பதில் கிளை முகாமையாளர்
திரு. பீ. ராஜராஜன்	வவுனியா	பதில் கிளை முகாமையாளர்

நிதி அறிக்கைகள்

நிதி அறிக்கையிடல் மீது பணிப்பாளருக்குள்ள பொறுப்பு / 104
கணக்காய்வாளரின் அறிக்கை / 105
வருமானக் கூற்று / 110
விரிவான வருமானக் கூற்று / 111
நிதி நிலைமைக் கூற்று / 112
பங்குமூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று / 113
காசுப்பாய்ச்சல்கள் கூற்று / 114
கணக்கீட்டுக் கொள்கைகள் / 115
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் / 126

தேசத்திற்கான
தங்குமிடத்தை
உருவாக்குவதன்
மூலமாக நாம்
வாழ்க்கைக்கு
வலுவூட்டுவதால்
சிறந்த
நடைமுறையை
உள்வாங்குவதனை
நோக்கி



நிதி அறிக்கையிடல் மீது பணிப்பாளருக்குள்ள பொறுப்பு

(2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, HDFC சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களுக்குள்ள பொறுப்பானது பின்வரும் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் வெளிவாரிக் கணக்காய்வாளருக்குள்ள பொறுப்பானது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதி ஆண்டிற்குமான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அவற்றைப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். 2018 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்தவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, பங்குமூலதன மாற்றங்களுக்கான கூற்று மற்றும் முடிவடைந்த வருடத்திற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அவை தொடர்பான குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

வங்கியின் நிதிக் கூற்றுக்கள்:
1. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்தவாறான வங்கி விவகாரங்களின் நிலைமை
2. முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் இலாப நட்டம்

ஆகியன பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தை வழங்கும்.

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பணிப்பாளர்கள்:
1. சீரான முறையொன்றில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டுப் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன், ஏதேனும் குறிப்பிடத்தக்க வெளிச்செல்லல்கள் இருப்பின் அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன:
2. நியாயமான மற்றும் புத்திசாதுரியமான தீர்ப்புக்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன:
3. சகல பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களும் பொருத்தமானவாறு இணங்குகின்றன:

என்பனவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்திருத்தல் எண்ணக்கரு அடிப்படை பிரயோகிக்கப்படுவதனை நியாயப்படுத்துவதற்காக, அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வங்கியிடம் போதியளவு வளங்கள் காணப்படுகின்றன என்பதையும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளனர்.

மேலும், வங்கியின் நிதி நிலைமையின் நியாயமான துல்லியத்துடன் போதியளவு கணக்கீட்டுப் பதிவுகளை வெளிப்படுத்துவதற்காக வங்கி பராமரிக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர்களுக்குள்ளது.

நிதிக்கூற்றுக்கள் 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை(SLFRS) அடிப்படையாகக் கொண்டு அடிப்படைக் கணக்குப் புத்தகங்களுடன் இணங்குவாகவுள்ளன. அத்துடன் அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகள், 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டம் மற்றும் அவற்றிற்குரிய திருத்தங்கள், அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகளின் பெருநிறுவன ஆளுகை தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வங்கிச் சட்ட வழிகாட்டல் (காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான), கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியற்படுத்தும் விதிகள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகம் (CA Sri Lanka) மற்றும் இலங்கைப் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள பெருநிறுவன ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைக் கோவை என்பவற்றின் தேவைப்பாடுகளுடனும் இணங்குவதாகவுள்ளன.

அதற்கு மேலதிகமாக, இந் நிதிக் கூற்றுக்கள் அனுமதிப் பத்திரம் விசேட வங்கிகளின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட வடிவத்துடன் இணங்குவதாகவுள்ளன.

பணிப்பாளர்கள் வங்கியினால் வருடம் பூராகவும் எதிர்நோக்கப்படும் குறிப்பிடத்தக்க இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமை செய்வதற்காக விரிவானதும் வினைத்திறன் மிக்கதுமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளையும் நிறுவியுள்ளதுடன் அது பணிப்பாளர் சபையின் வழக்கமான மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.

இதில் உள்ளக மீளாய்வுகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் நிதி மற்றும் வங்கி வியாபாரத்தை முறையாகக் கொண்டு செல்வதற்கு அவசியமான ஏனைய கட்டுப்பாடுகள், சொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடிகளையும் ஏனைய முறைகேடுகளையும் தடுத்தலும் கண்டுபிடித்தலும், பதிவுகளின் துல்லியத்தையும் நம்பகத்தன்மையையும் பாதுகாத்தல் (நடைமுறையில் இயன்றளவு தூரம்) என்பன உள்ளடங்கும். 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய மீளாய்வுகளின் பெறுபேறுகள் ஆண்டறிக்கையின் 77 ஆம் பக்கத்திலுள்ள, □உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்றில்□ தரப்பட்டுள்ளன.

வங்கி முறையான கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்கின்றது என்பதையும் நிதி அறிக்கையிடல் முறைமை நேரடியாக அவர்களது வழமையான கூட்டங்களில் அவர்களாலும் சபைக் கணக்காய்வுக் குழுவினாலும் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் பணிப்பாளர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். கூறப்பட்ட குழுவின் அறிக்கையானது 86 முதல் 87 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளது. சபைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டதைத் தொடர்ந்து இடைக்கால நிதிக் கூற்றுக்களை வெளியிட முன்னர் பணிப்பாளர்கள் சபையானது அவற்றை அங்கீகரிக்கவும் வேண்டும்.


இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின ஒருமைப்பாடு மற்றும் நோக்கம் தொடர்பான பொறுப்பினை பணிப்பாளர்கள் சபையானது ஏற்றுக்கொள்கின்றது. பணிப்பாளர்கள் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர், இலங்கைக் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவர்கள் பொருத்தமானதெனவும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் அவர்களது சுயாதீனமான கணக்காய்வுக் கருத்தினைத் தெரிவிப்பதற்கு அவசியமானதெனக் கருதும் எந்தவொரு மீளாய்வினையும் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றனர்.

கம்பனிச் சட்டத்தின் 150 (1) (ஆ) பிரிவு மற்றும் 152 (1) (ஆ) பிரிவு ஆகியவற்றினால் வேண்டப்பட்டவாறு, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் வங்கியின் பிரதாக நிதி அலுவலர் மற்றும் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர், தயாரிப்பிற்குப் பொறுப்பான அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் இரண்டு பணிப்பாளர்களால் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

வங்கி நிதி நிலைமைக் கூற்றின் படி சட்டரீதியான மற்றும் ஒழுங்குமறையிலான அதிகாரசபைகளுக்கும் செலுத்தப்படவுள்ள சகல சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது சம்பந்த இடங்களில் வழங்கப்பட்டுள்ளன என்பதையிட்டுப் பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் திரும்பியடைகின்றனர்.

இக்கூற்றில் வழங்கப்பட்டுள்ள அவர்களது பொறுப்புக்களைப் பணிப்பாளர்கள் நிறைவேற்றியுள்ளார்கள் எனும் கருத்தினைக் கொண்டுள்ளனர்.

சபையின் கட்டளைப்படி.



ஆர். எச். மீவக்கால
தலைவர்

2019 மே 17
கொழும்பில்.

கண்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. BAF/01/C/HDFC/01/18/26 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 13 May 2019

தலைவர்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் வாசகத்தின் படியிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் (□வங்கி□) 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டு தராதரங்களை உள்ளடங்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 156 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் கணக்காய்விற்குத் தகைமை பெறும் எனும் அபிப்பிராயத்தைக் கொண்ட பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களின் செல்வாக்கினைத் தவிர, நிறுவகத்தில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடையும் வருடத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (SLAuSs) நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. எனது கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசாங்க கணக்கீட்டுத் தராதரங்களுக்கேற்ப தயாரித்தல் மற்றும் நியாயமானதாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கியைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தினது பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது வங்கியை முடிவுறுத்துவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது, செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும் தவிர, இடையறாது நிலைத்திருத்தல் அடிப்படையில் கணக்குகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் இடையறாது நிலைத்திருத்தலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பானது, நிருவகிக்கும் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் 16(1) வாசகத்தின் பிரகாரம், வங்கியின் வருடாந்த மற்றும் உரிய நேரத்திலான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு, வங்கியினது சகல வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்துச் செல்ல வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களைக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றியது என நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும்.

நியாயத்தை உறுதிப்படுத்துதலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாகிய போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவுரீதியான தவறான அறிக்கையிடலைக் கண்டுபிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்குக் காரணமாக, அளவுரீதியான தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதாரரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும் துல்லியமாகவும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான அறிக்கையிடலின் அபாயத்தை அடையாளங் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதனூடாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்குப் போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். அளவுரீதியாக பிழையான அறிக்கையிடலின் தாக்கத்தை விட, மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் தீவிரமாகவிருப்பதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கைவிடல் போன்றவை காரணமாக மோசடி ஏற்படுகின்றது.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதற்காக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டினை வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக வங்கியின் இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவிலான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினடிப்படையில், கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனமானது இடையறாது நிலைத்திருத்தல் தொடர்பான அடிப்படையினைப் பிரயோகிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவுக்கு வருவதாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதுடன் அவ்வெளிப்பாடுகள் போதியளவினதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயப்படி கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து நிலைத்திருப்பதானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் முடிவுறுத்தப்படலாம்.

கண்காய்வாளரின் அறிக்கை

- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல், வியூகம் மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீட்டிற்குட்படுத்தியதுடன் அதற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வினுள், அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, எனது அறிக்கையில் கணக்காய்வுக்குத் தகுதி பெறும் அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் செல்வாக்கினைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையில் விளங்கும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை வங்கியானது பராமரித்து வந்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி, சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்படி கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், போதியளவிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் நிருவாகச் சபையின் உறுப்பினரொருவருக்கு வங்கி தொடர்பான குறித்ததொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவிதமாக சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாகத் தொடர்பொன்றுள்ளது என வெளிப்படுத்துதல்:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது வங்கியின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறுதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளது என வெளிப்படுத்துதல்:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுடன் இணங்கியவாறு வங்கி செயற்படவில்லை என வெளிப்படுத்துதல்:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், வங்கியின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படவில்லை என வெளிப்படுத்துதல்.

ஒப்பம்
டப்ளியூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

வருமானக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது (தொகைகள் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

		வங்கி	
விபரம்	குறிப்புக்கள்	**2018**	2017 (மீள்கூறப்பட்டது)
வருமானம்		7,120,235,055	6,978,337,211
வட்டி வருமானம்		6,679,052,243	6,613,531,208
வட்டிச் செலவுகள்		(4,440,675,426)	(4,741,843,197)
தேறிய வட்டி வருமானம்	1	2,238,376,817	1,871,688,011
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	2	380,261,924	347,834,881
கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள்		-	-
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்		380,261,924	347,834,881
தேறிய வியாபாரப் பெறுகை/ (நட்டம்)	3	-	-
இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதி உபகரணங்கள் மூலமான பெறுமதியில் தேறிய வியாபாரப் பெறுகை/ (நட்டம்)	4	(750,000)	-
ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் (தேறியன)	5	61,670,888	16,971,122
மொத்த செயற்பாட்டு வருமானம்		2,679,559,629	2,236,494,014
கழிக்க: சேதக் கட்டணங்கள் / (எதிரிடை)	6	92,705,576	(56,739,589)
தேறிய செயற்பாட்டு வருமானம்		2,586,854,053	2,293,233,603
கழிக்க : செலவுகள்			
ஆளணிக் கிரயங்கள்	7	1,113,360,522	941,324,990
தேய்மனம் மற்றும் கடன்தீர் நிதிச் செலவுகள்	8	85,714,476	96,133,064
ஏனைய செலவுகள்	9	469,116,368	434,390,682
மொத்தச் செலவுகள்		1,668,191,365	1,471,848,736
VAT NBT மற்றும் னுசுடு இற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)		918,662,687	821,384,866
கழிக்க : நிதிச் சேவைகள் மீதான VAT, NBT மற்றும் DRL	10	289,882,285	232,100,761
VAT NBT மற்றும் DRL இற்குப் பின்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)		628,780,402	589,284,105
துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் இலாபப் பங்கு		-	-
வரிக்கு முன்னரான இலாபம்/நட்டம்)		628,780,402	589,284,105
கழிக்க : வரிச் செலவுகள்	11	64,389,592	175,013,385
வருடத்திற்கான இலாபம்/நட்டம்)		564,390,811	414,270,720
ஒரு பங்கு மீதான இலாப உழைப்பு			
சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா)	12	8.72	6.40
சாதாரண பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்புக்கள்		-	-

விரிவான வருமானக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது (தொகைகள் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

		வங்கி	
விபரம்	குறிப்புக்கள்	2018	2017 (மீள்கூறப்பட்டது)
வருடத்திற்கான இலாபம்		564,390,811	414,270,720
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படும் விடயங்கள்			
வெளிநாட்டுச் செயற்பாடுகளுக்கு மாற்றும் போது ஏற்படும் செலாவணி மாற்றங்கள்		-	-
காசுப் பாய்ச்சல் வரையறைகள் மீதான தேறிய பெறுகைகள்/ (நட்டங்கள்)		-	-
ஏனைய விரிவான வருமானங்களினூடாக நியாய விலையில் அளவிடப்படும் கடன் கருவிகளின் முதலீடுகளின் மீதான தேறிய பெறுகைகள்/ (நட்டங்கள்)		-	-
ஏனைய விரிவான வருமானங்களினூடாக நியாய விலையில் அளவிடப்படும் கடன் கருவிகள்		-	-
ஏனையவை (குறிப்பிடவும்)		-	-
கழிக்க: வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படும் விடயங்களுடன் தொடர்புடைய வரிச் செலவுகள்		-	-
மொத்தம்		-	-
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்			
பங்கு மூலதன முதலீட்டின் நியாய விலை மாற்றங்கள்		-	-
ஏனைய விரிவான வருமானங்களினூடாக நியாய விலையில் நியமிக்கப்படும் கருவிகள்		-	-
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாய விலையில் நியமிக்கப்படும் நிதிப் பொறுப்புக்கள் மீதான வங்கியின் கடன் இடரில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக நியாய விலையில் ஏற்பட்ட மாற்றம்		-	-
பதவிக்குப் பின்னரான நன்மைக் கடப்பாடுகளை மீள் அளவிடுதல்	26	(58,917,967)	(60,516,262)
மீள்மதிப்பீட்டு மிகை மாற்றங்கள்		-	-
துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் இலாபப் பங்கு		-	-
விற்பனைக்குத் தயாராகவுள்ளவற்றை மீள்மதிப்பீடு செய்வதன் மூலமான பெறுகைகளும் நட்டங்களும்		-	-
நிதிச் சொத்துக்கள்		-	-
ஏனையவை (குறிப்பிடவும்)		-	-
கழிக்க: வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பான வரிச் செலவுகள்		16,497,031	16,944,553
மொத்தம்		(42,420,936)	(43,571,709)
ஆண்டிற்குரிய ஏனைய விரிவான வருமானம், வரி தேறியது		(42,420,936)	(43,571,709)
ஆண்டிற்குரிய மொத்த விரிவான வருமானம்		521,969,874	370,699,012
காரணம் கூறப்பட்டது :			
பங்குதாரர்கள்		521,969,874	370,699,012
கட்டுப்படுத்தப்படாத வட்டி		-	-
மொத்தம்		521,969,874	370,699,012

நிதி நிலைமைக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது (தொகைகள் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)

		வங்கி	
விபரம்	குறிப்புக்கள்	**2018**	2017 (மீள்கூறப்பட்டது)
சொத்துக்கள்			
காசும் காசையொத்தவையும்	13	210,466,904	282,575,053
மத்திய வங்கியுடனான சீராக்கங்கள்	14	89,723,067	43,830,758
வங்கிகளில் வேலைவாய்ப்பு	15	5,396,308,712	8,959,860,916
இலாபம் அல்லது நட்டம் மூலமாக அடையாளப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள் - நியாய விலையில் அளவிடப்பட்டது	16	18,750,000	19,500,000
நிலைமாறக் கூடிய கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும்	17	37,934,033,328	34,967,798,661
- கடன்களும் ஏனைய கருவிகளும்	18	3,980,888,836	3,879,970,501
ஆதனமும் பொறி உபகரணமும்	19	466,243,583	513,425,480
முதலீட்டுச் சொத்துக்கள்	20	871,500,000	836,940,000
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	21	87,528,467	77,057,101
ஏனைய சொத்துக்கள்	22	229,848,191	142,834,644
மொத்தச் சொத்துக்கள்		49,285,291,088	49,723,793,115
பொறுப்புக்கள்			
வங்கிக்குச் செலுத்த வேண்டியவை	23	1,001,987,444	1,207,947,710
கடன்தீர் நிதிக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	24	37,016,036,358	36,654,963,892
- கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டியவை	24	1,611,914,273	1,600,463,906
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	25	4,038,675,896	5,108,340,561
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்	26	554,254,947	432,437,673
நடைமுறை வரிப் பொறுப்புக்கள்	27	57,327,668	138,498,952
ஏனைய பொறுப்புக்கள்	28	248,482,126	349,541,600
மொத்தப் பொறுப்புக்கள்		44,528,678,713	45,492,194,292
பங்குமூலதனம்			
குறிப்பிடப்பட்ட மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம்	29	962,092,936	962,092,936
சட்டபூர்வ ஒதுக்க நிதி	30	188,424,906	160,313,355
நிறுத்தி வைத்த வருவாய்	31	3,319,553,631	2,844,675,203
ஏனைய ஒதுக்கங்கள்	32	286,540,902	264,517,329
பங்குதாரரின் மொத்த பங்கு மூலதனம்		4,756,612,375	4,231,598,823
கட்டுப்படுத்தப்படாத வட்டி		-	-
மொத்த பங்கு மூலதனம்		4,756,612,375	4,231,598,823
மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புக்களும்		49,285,291,088	49,723,793,115
பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூபா)		73.51	65.39
நிச்சயமற்ற பொறுப்புக்களும் கடமைகளும்	33	528,184,484	598,496,941
குறிப்பாணைத் தகவல்கள்			
ஊழியர்களின் எண்ணிக்கை		561	567
கிளைகளின் எண்ணிக்கை		39	39

குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கங்கள் 115 முதல் 149 வரையுள்ள குறிப்புக்களும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (LKAS/SLFRS) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

டீ. வீ. பதிரண
பிரதான நிதி அலுவலர்

பாலித கமகே
பிநிஅ/பொது முகாமையாளர்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுக் கைச்சாத்திடப்பட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகவுள்ளது.

கலாநிதி ஆர். எச். மீவக்கால
தலைவர்

எல். எஸ். பலன்சூரிய
பணிப்பாளர்

திகதி: 2019.05.10
கொழும்பு

பங்குமூலதன மாற்றங்களுக்கான கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது (மீள்கூறப்பட்டது)

இலங்கை ரூபாய்களில் (000)	வாக்குப பங்குகளின் எண்ணிக்கை	குறிப்பிடப்பட்ட மூலதனம்	சுட்டபூர்வ ஒதுக்க நிதி	OCI ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள்	ஏனைய ஒதுக்கம	மொத்தம்	கட்டுப்படுத்தப் படாத வட்டி	மொத்த பங்கு மூலதனம்
2017.01.01 இல் மீதி	64,710,520	962,093	139,600	40,395	30,637	2,492,545	196,504	3,861,775	-	3,861,775
பிற்போடப்பட்ட வரி மீள்கூறப்பட்டது	-	-	-	-	-	-	-	-	-	-
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	-	-	-	-	-	-	-	-	-	-
ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்)	-	-	-	-	-	414,271	-	414,271	-	414,271
ஏனைய விரிவான வருமானம் (வரி கழித்த பின்னர்)	-	-	-	-43,572	-	-	-	-43,572	-	-43,572
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	-	-	-	-43,572	-	414,271	-	370,699	-	370,699
பங்குமூலதனத்தை வைத்திருப்போருடனான கொடுக்கல்வாங்கல்கள், அடையாளப்படுத்தப்பட்டது	-	-	-	-	-	-	-	-	-	
நேரடியாகப் பங்கு மூலதனத்தில்	-	-	-	-	-	-	-	-	-	
பங்கு வழங்கல் /ஒதுக்கப்பட்டமூலதன அதிகரிப்பு	-	-	-	-	-	-	-	-	-	
ஊக்குவிப் பணம் வழங்கல்	-	-	-	-	-	-	-	-	-	
உரித்து வழங்கல்	-	-	-	-	-	-	-	-	-	
முதலீட்டு நிதி மாற்றல்	-	-	-	-	-	-	-	-		
மீளாய்வு காலத்தில் ஒதுக்க மாற்றம்	-	-	20,714	-	-	-62,141	41,427	-	-	-
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-	-	-	-	-	-	-		
தலைமையகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம்	-	-	-	-	-	-	-	-	-	
ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களை	-	-	-	-	-875	-	-	-875	-	-875
மீள்மதிப்பீடு செய்வதிலான இலாபம்/ (நட்டம்)	-	-	-	-	-	-	-	-	-	
ஏனையவை	-	-	-	-	-	-	-	-		
பங்கு மூலதனம் வைத்திருப்போருடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்	-	-	20,714	-	-875	-62,141	41,427	-875	-	-875
2017.12.31 இல் உள்ளவாறான மீதி	64,710,520	962,093	160,313	-3,176	29,762	2,844,675	237,931	4,231,599	-	4,231,599

இலங்கை ரூபாய்களில் (000)	வாக்குப பங்குகளின் எண்ணிக்கை	குறிப்பிடப்பட்ட மூலதனம்	சுட்டபூர்வ ஒதுக்க நிதி	OCI ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்கள்	ஏனைய ஒதுக்கம	மொத்தம்	கட்டுப்படுத்தப் படாத வட்டி	மொத்த பங்கு மூலதனம்
2018.01.01 இல் உள்ளவாறான மீதி	64,710,520	962,093	160,313	-3,176	29,762	2,844,675	237,931	4,231,599	-	4,231,599
ஐகுசுளு 9 மீள்கூற்றுக்கள்	-	-	-108	-	-	-4,854	-216	-5,178	-	-5,178
சீராக்கங்கள்	-	-	-	-	-	-	9,097	9,097	-	9,097
முன்னைய வருட சீராக்கங்கள்	-	-	-	-	-	-	-	-	-	
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம	-	-	-	-	-	-	-	-	-	-
ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்)	-	-	-	-	-	564,391	-	564,391	-	564,391
ஏனைய விரிவான வருமானம் (வரி கழித்த பின்னர்)	-	-	-	-42,421	-	-	-	-42,421	-	-42,421
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	-	-	-	-42,421	-	564,391	-	521,970	-	521,970
பங்குமூலதனத்தை வைத்திருப்போருடனான கொடுக்கல்வாங்கல்கள், அடையாளப்படுத்தப்பட்டது	-	-	-	-	-	-	-	-	-	-
நேரடியாகப் பங்கு மூலதனத்தில்	-	-	-	-	-	-	-	-	-	-
பங்கு வழங்கல்/ ஒதுக்கப்பட்டமூலதன அதிகரிப்பு	-	-	-	-	-	-	-	-	-	-
ஊக்குவிப் பணம் வழங்கல்	-	-	-	-	-	-	-	-	-	-
உரித்து வழங்கல்	-	-	-	-	-	-	-	-	-	-
மீளாய்வு காலத்தில் ஒதுக்க மாற்றம்	-	-	28,220	-	-	-84,659	56,439	-	-	
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-	-	-	-	-	-	-	-	
தலைமையகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம்	-	-	-	-	-	-	-	-	-	-
ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களை	-	-	-	-	-875	-	-	-875	-	-875
மீள்மதிப்பீடு செய்வதிலான இலாபம்/ (நட்டம்)	-	-	-	-	-	-	-	-	-	-
ஏனையவை	-	-	-	-	-	-	-	-		
பங்கு மூலதனம் வைத்திருப்போருடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்	-	-	28,220	-	-875	-84,659	56,439	-875	-	-875
2018.12.31 இல் உள்ளவாறான மீதி	64,710,520	962,093	188,425	-45,597	28,887	3,319,554	303,251	4,747,516	-	4,756,612

காசுப் பாய்ச்சல் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது

	வங்கி	
	2018 இ.ரூபாய்	2017 இ.ரூபாய்
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி பெறுகைகள்	6,224,050,114	6,272,402,920
வட்டி கொடுப்பனவுகள்	(4,787,888,525)	(4,768,997,979)
தேறிய தரகுப் பணம் பெறுகைகள்	154,854,706	138,234,459
வியாபார வருமானம்	-	-
ஊழியர் கொடுப்பனவுகள்	(1,006,373,760)	(822,225,435)
நிதிச் செலவுகள் மீதான VAT, DRL மற்றும் NBT	(327,182,644)	(257,749,964)
ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுகைகள்	210,944,426	206,390,395
ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள்	(453,106,920)	(433,452,449)
செயற்பாட்டுச் சொத்துக்களின் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	15,297,398	334,601,947
செயற்பாட்டுச் சொத்துக்களின் (அதிகரிப்பு)/ குறைவு:		
இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள்	(45,892,308)	(13,746,560)
கடன்தீர் நிதிக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும்	(2,678,782,767)	(4,409,562,127)
ஏனைய சொத்துக்கள்	(35,176,821)	33,737,616
	(2,759,851,897)	(4,389,571,071)
செயற்பாட்டுப் பொறுப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைவு		
கடன்தீர் நிதிக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	711,099,058	4,555,776,143
கடன்தீர் நிதிக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - கடன் பிணையத்தை வைத்திருப்போருக்குச் செலுத்த வேண்டியவை	(1,072,816,895)	(435,283,497)
கடன்தீர் நிதிக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டியவை	(193,851,988)	(507,193,762)
ஏனைய பொறுப்புக்கள்	(89,983,777)	(17,977,494)
	(645,553,601)	3,595,321,390
வருமான வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு	(3,390,108,100)	(459,647,734)
செலுத்தப்பட்ட வருமான வரி	(107,650,728)	(194,528,227)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு	(3,497,758,828)	(654,175,961)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்		
ஆதனமும் பொறி, இயந்திரமும் கொள்வனவு	(42,461,023)	(135,071,067)
விற்பனைச் சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் மூலம் கிடைக்கும் வருமானம்	3,678,689	7,622,632
முதலீட்டுப் பிணையங்களின் கொள்வனவு	(1,680,581,402)	(1,846,478,661)
நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சி மூலம் கிடைக்கும் வருமானம்	5,144,808,014	2,671,877,319
கட்புலனாகாச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு	-	-
துணைக் கம்பனிகள், இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளிலிலுள்ள முதலீடுகளைக் கையகப்படுத்தல் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல	-	-
துணைக் கம்பனிகள், இணை நிறுவனங்களின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள்	206,400	180,000
ஏனையவை	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	3,425,650,679	698,130,223
நிதியீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்		
சாதாரண பங்கு மூலதனம் வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம்	-	-
ஏனைய பங்குமூலதன கருவிகளின் வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம்	-	-
துணைக் கடனை மூலம் கிடைக்கும் வருமானம	-	-
துணைக் கடனை மீளச் செலுத்துதல்	-	-
துணைக் கடன்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி	-	-
கட்டுப்படுத்தப்படாத வட்டிக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
தாய்க் கம்பனியின் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
ஏனைய பங்கு மூலதனக் கருவிகளுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	-
ஏனையவை	-	-
நிதியீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	-	-
காசு மற்றும் காசையொத்தவைகளின் அதிகரிப்பு/ (குறைவு)	(72,108,149)	43,954,262
காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்	282,575,053	238,620,792
காலப்பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள	210,466,904	282,575,053
காசு மற்றும் காசையொத்தவைகளின் இணக்கம்		
கையிலுள்ள காசு	154,694,507	124,169,232
வங்கியிலுள்ள காசு	55,772,397	158,405,821
	210,466,904	282,575,053

கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பெருநிறுவன தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை HDFC வங்கியானது 1956 ஆண்டின் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் 1984 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1997 ஆம் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனமாக மாற்றியமைக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டம் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2003 ஆம் 15 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தின் கீழ் விசேட வங்கி அந்தஸ்தைப் பெற்றதுடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் அட்டவணை ளை இன் கீழ் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் கீழ் சகல செயற்பாடுகளையும் பிரயோகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. HDFC வங்கியினது தலைமை அலுவலகமானது இலங்கை, கொழும்பு 02 இலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் செயலகத்தில் அமைந்துள்ளது.

2 தயாரிப்பின் அடிப்படை

2.1. இணக்கக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குமூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வகுக்கப்பட்ட கணக்கீட்டுத் தராதரங்களுடன் இணங்குமாறு தேவையான இடங்களிலெல்லாம் வரலாற்றுக் கிரய அடிப்படை மற்றும் நியாய விலைக் கணக்கீடு தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அனைத்து வியாபார முயற்சிகளும் பயன்படுத்த வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படித் தராதரங்களின்படி ஒப்பீட்டுத் தொகைகள் மீள்கூற்றிடப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியற்படுத்தப்படும் விதிகளினால் வேண்டப்பட்டவாறு பொருத்தமான வெளிப்பாடுகளையும் வழங்குகின்றன.

2.2 செயற்பாட்டு மற்றும் தயாரிப்பு நாணயம்

வங்கி செயற்படும் முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயமாகிய இலங்கை ரூபாயிலேயே வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. □நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான□ இல.1 - இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் (LKAS) அனுமதித்தபடி சுட்டிக்காட்டப்பட்ட இடங்களைத் தவிர, ஏனைய இடங்களிலெல்லாம் இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதித் தகவல்கள் கிட்டிய ரூபாய்களுக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

2.3 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினைச் சார்ந்ததாகும்.

□நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு□ மற்றும் □நிதி நிலைமைக் கூற்றில்□ வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தல்களில் கூறப்பட்டவாறு பணிப்பாளர் சபையானது அவர்களது பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றனர்.

2.4 கணக்குகளின் மாதிரியும் முன்னைய ஆண்டுத் தொகைகளும்

இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கியினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளின் மாதிரியானது □நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான□ இல.1 - இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் (LKAS) அனுமதிக்கப்பட்டவாறான முன்னைய நிதியாண்டுகளுடன் இணங்குகின்றன.

2.5 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

வங்கியின் நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றிறனது தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் சார்புத் திரவத்தன்மை மற்றும் முதிர்ச்சிப் போக்கின் ஒழுங்குமுறையினடிப்படையில் பட்டியற்படுத்தப்படும். வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் போக்குகள் முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடுகட்டப்படுவதுடன் தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும். அத்துடன் அடையாளப்படுத்தப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கு சட்டரீதியாகச் செயல்படுத்தக் கூடிய உரிமையிருப்பின் மாத்திரம் அவை ஈடுகட்டப்படும். தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் சொத்துக்களை அடையாளங் கண்டு பொறுப்புக்க அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்ய வேண்டும். எந்தவொரு கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடலினால் வேண்டப்பட்டு அனுமதிக்கப்பட்டாலொழிய வருமானங்களும் செலவுகளும் வருமானக் கூற்றில் ஈடுகட்டப்படமாட்டாது. ஏனெனில், அவை வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விசேடமாக வெளிப்படுத்தப்படும்.

2.6 பொருண்மை மற்றும் திரட்டுதல்

ஒத்த பொருட்களையுடைய ஒவ்வொரு பொருள் வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனியாகச் சமர்ப்பிக்கப்படும். அவை முக்கியமானவையல்லவென □நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலுக்கான□ இல.1 (LKAS) இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் அனுமதிக்கப்பட்டாலொழிய, ஒத்ததன்மையற்ற பொருட்கள் மற்றும் செயற்பாடுகள் தனியாகச் சமர்ப்பிக்கப்படும்.

2.7 ஒப்பீட்டுத் தகவல்கள்

மேலும் சிறந்த சமர்ப்பித்தலை மேற்கொள்ளவும் தற்போதைய ஆண்டின் சமர்ப்பித்தலுடன் இணங்குவதற்கும் ஒப்பீட்டுத் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்படும்.

3. விசேடமான கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

3.1 நிலைத்திருத்தல்

ஒரு தொடர்ந்திருக்கும் அமைப்பாக இருப்பதற்கான அதன் இயலுமையைக் கண்டறிவதற்காக முகாமைத்துவமானது ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளதுடன் அதனது வியாபாரத்தை எதிர்வுகூறக் கூடிய எதிர்காலத்தில் தொடருவதற்காக அதனிடம் வளங்கள் காணப்படுகின்றன என அது திருப்தியடைகின்றது. மேலும், நிலைத்திருப்பதற்கான வங்கியின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க ஐயத்தைத் தோற்றுவிக்கும் ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகள் முகாமைத்துவமானது அறியாதுள்ளது. ஆகையால், நிதிக் கூற்றுக்கள் நிலைத்திருத்தல் அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படவுள்ளன.

3.2 சொத்துக்களின் விலைமதிப்பீடு

3.2.1 வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்

வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் நிதி நிலைமைக் கூற்றில் எதிர்கால உத்தேச கடன் நட்டங்களுக்கான தேறிய குறைபாடுகளாகக் காட்டப்பட்டுள்ளன.

3.2.1.1 சேத நட்டங்களுக்கான ஏற்பாடுகள்

கணக்கீட்டுக் கொள்கைகள்

2018 சனவரி 1 முதல் பொருந்தும் கொள்கை
நிதிச் சொத்துக்கள் மீதான எதிர்பார்த்த கடன் நட்டங்கள் (ECL)
ஆயுட்கால ECL மற்றும் 12 – மாத நுஊடு ஆகிய இரண்டையும் பயன்படுத்தி கம்பனியானது நட்டக்கொடுப்பனவினை அளவிடுகின்றது. ECL இனை மதிப்பிடுகையில், கம்பனியானது ஆரம்ப அங்கீகாரம் முதல் நிதிச் சொத்தின் கடன் அபாயமானது குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளதாவென தீர்மானிக்க வேண்டும். இதற்காக கம்பனியானது முறையற்ற செலவு அல்லது முயற்சியின்றிக் கிடைக்கும் நியாயமான மற்றும் ஆதரவளிக்கும் பொருத்தமான தகவல்களைக் கருத்திற்கொண்டுள்ளது. இதில் வங்கியின் வரலாற்றுரீதியான அனுபவம், அறிவிக்கப்பட்ட கடன் மதிப்பீடு மற்றும் முன்னோக்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்ட அளவுரீதியான மற்றும் பண்புரீதியான தகவல்களும் பகுப்பாய்வும் உள்ளடங்கும்.

2018 சனவரி 1 இற்கு முன்னர் பொருந்தும் கொள்கை

'நிதிக் கருவிகள் மீான இலங்கைக் நிதி அறிக்கையிடல் நியம இல. 09: வங்கிகளின் நிதிக் கூற்றுக்களில் அடையாளங் காணுதலும் அளவிடுதலும் என்பதன் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்கான சகல கடன்களினதும் முற்பணங்களினதும் தொடர்ச்சியானதொரு மீளாய்வினடிப்படையில் சாத்தியமான சேத நட்டங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அவசியமான கடன்களினது நியாய விலையைக் கணிப்பிடுவதற்காக பின்வரும் விலைமதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. **கூட்டுச் சேத முறை**
2. **தனிப்பட்ட சேத முறை**

3.2.1.1.1 கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகள்
சாத்தியமான கடன் நட்டங்களுக்கான கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகள் நிதிக் கருவிகள் மீான இலங்கைக் நிதி அறிக்கையிடல் நியம இல. 09: வங்கிகளின் நிதிக் கூற்றுக்களில் அடையாளங் காணுதலும் அளவிடுதலும் என்பதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வங்கியானது தனிப்பட்ட சேதங்கள் முக்கியமல்லாத பட்சத்தில், சுழலும் வீத முறையில் கூட்டுச் சேதத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. சீராக்கப்பட்ட துறை நட்டமானது செலுத்தத் தவறும் விகிதத்தில்(LGD) தரப்பட்டுள்ளது.

3.2.1.1.2 தனிப்பட்ட சேதத்திற்கான ஏற்பாடுகள்
3.2.1.1.2.1 விற்பனைக்காக கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள்
ஒரு நியாயமான காலத்திற்கு வாடிக்கையாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில் HDFC வங்கியில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் ஏலத்தில் விற்கப்படும். அத்துடன் அத்தகைய ஏலவிற்பனைகளில் கையுதிர்க்கப்படாத ஆதனங்கள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டவையாதலால் அவை கையகப்படுத்தப்பட்ட ஆதனங்களாக அடையாளப்படுத்தப்படும். நியாயமான உத்தரவாதத்துடன் எதிரவுகூறப்பட்ட அத்தகைய ஆதனங்களின் மதிப்பீடுகள் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2.1.1.2.2 ரூபா. 10 மில்லியன்களுக்கும் அதிகமான கடன்கள்
எதிர்கால காசு மீளப்பெறுதல்களுக்கான நியாயமான உத்தரவாதம் கொண்ட 10 மில்லியனுக்கும் அதிகமான 36 மாதங்களுக்கு மேல் செலுத்தப்படாது நிலுவையாகவுள்ள அனைத்து உத்தரவாதக் கடன்களும் உளளலங்கலான அடமானம் மற்றும் காசு தவிர்ந்த கடன்களுக்குத் தனிப்பட்ட சேதத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2.2. கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்
கீழே விளகக்பட்டுள்ள SLFRS 15 □வாடிக்கையாளருடனான ஒப்பந்நங்கள் மூலம் வரும் வருமானங்கள்□ மற்றும் SLFRS 9 - நிதிக் கருவிகளுக்கு மாற்றுவதால் ஏற்படும் மாற்றங்கள் தவிர, இந்நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல காலப்பகுதிகளுக்கும் ஒஒ ஆம் பக்கம் முதல் ஒஒ வரையிலான குறிப்புக்களில் குறைத்துரைக்கப்பட்டவாறு கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ந்தும் வங்கியானாது பிரயோகித்துள்ளது:

SLFRS 15 – **"வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களால் எழும் வருமானங்கள்"**
SLFRS 15 ஆனது எவ்வளவு வருமானமானது எப்போது அடையாளப்படுத்தப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்கான விரிவான கட்டமைப்பொன்றினை நிறுவியுள்ளது. நிதிக் கூற்றுப் பயனாளிகள் தன்மை, தொகை, நேரம் மற்றும் வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை மற்றும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் மூலம் எழும் காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றை விளக்குவதே புதிய பண்புரீதியான மற்றும் அளவுரீதியான வெளிப்பாடுகளைத் தேவைப்பாடாகவுள்ளது.

எப்போது எந்தளவில் வருமானத்தை அடையாளப்படுத்த வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கு நிறுவனங்கள் ஐந்து கட்ட மாதிரியொன்றினைப் பிரயோகிக்கும். வருமானம் எப்போது அடையாளப்படுத்தப்படும் அல்லது நிறுவனம் உரிமைகொள்ள எதிர்பார்க்கும் தொகையொன்றில் வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களினதும் சேவைகளினதும் கட்டுப்பாட்டை மாற்றும். சில நிபந்தனைகள பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பொறுத்து வருமானமானது அடையாளப்படுத்தப்படும்.

அது LKAS 18 – □வருமானம்□ மற்றும் LKAS 11 -□நிர்மாண ஒப்பந்தங்கள்□ மற்றும் IFRIC 13 – □வாடிக்கையாளர் நம்பிக்கைத் திட்டங்கள்□ உள்ளடங்கலாகத் தற்போது காணப்படும் வருமான அடையாளப்படுத்தல் வழிகாட்டியைப் பதிலீடு செய்கின்றது. முன் கூட்டிய பின்பற்றுதல் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 2018 சனவரி 1 இல் ஆரம்பமாகும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு SLFRS 15 பயனுள்ளதாக இருக்கும்.

வங்கியானது அதன் திரண்ட நிதிக் கூற்றுக்களில் கட்டணம் மற்றும் தரகு வருமானத்தினால் ஏற்படக் கூடிய உத்தேச பாதிப்பு ஆரம்பப் பகுப்பாய்வினைப் பூர்த்தி செய்துள்ளது. ஆரம்ப பகுப்பாய்வானது அடையாளப்படுத்தும் நேரம் அல்லது அளவீட்டில் SLFRS 15 முக்கியமான தாக்கமொன்றைச் செலுத்தாது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

SLFRS 9 – **'நிதிக் கருவிகள்'**
வங்கியானது 2014 யூலையில் வெளியிடப்பட்ட SLFRS 9 – 'நிதிக் கருவிகள்' எனும் நியமத்தை 2018 சனவரி 1 முதல் பிரயோகித்து வருகின்றது. இனது தேவைப்பாடானது LKAS 39 - 'நிதிக் கருவிகள் : அடையாளப்படுத்தலும் அளவிடலும்□ எனும் நியமத்திலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. புதிய தராதரமானது நிதிச் சொத்துக்களிலும் நிதிப் பொறுப்புக்களுக்கான கணக்கீடுகளிலும் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வருகின்றது.

SLFRS 9 ஐப் பின்பற்றுவதால் வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்படும் பிரதான மாற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் வகைப்படுத்தல்
SLFRS 9 ஆனது நிதிச் சொத்துக்களுக்கு மூன்று பிரதான வகைப்படுத்தல் தொகுதிகளைக் கொண்டுள்ளது- கடன்தீர் நிதிக் கிரயத்தில் அளவிடுதல், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாய விலை(FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் மூலமான நியாயவிலை (FVTPL) என்பவையே அவையாகும். இத்தராதரமானது LKAS 39

தற்போதுள்ள முதிர்ச்சிக்கு வைத்திருத்தல், கடன்களும் பெறவேண்டியவைகளும் விற்பனைக்காக உள்ளவை ஆகிய வகுதிகளை இல்லாதொழிக்கின்றது. SLFRS 9 வகைப்படுத்தலானது பொதுவாக ஒரு நிதிச் சொத்து முகாமை செய்யப்படும் முறை மற்றும் அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்ட வியாபார மாதிரியொன்றையோ பொதுவாக அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

SLFRS 9 இன் கீழ், தராதரத்தின் பரப்பெல்லையில் நிதிச் சொத்தாகவிருக்கும் ஒப்பந்தத்தில் உட்பொதிக்கப்பட்டுள்ள பெறுகைகள் ஒருபோதும் இரண்டாகப் பிரிக்கப்பட மாட்டாது. அதற்கு மாறாக, முழுக் கலப்பினக் கருவியும் வகைப்படுத்தலுக்காக மதிப்பிடப்படும்.

SLFRS 9 ஆனது நிதிப் பொறுப்புக்களை வகைப்படுத்துவதிலுள்ள LKAS 39 இல் தற்போது காணப்படும் தேவைகளைப் பெரும்பாலும் தன்னகத்தே வைத்துள்ளது. எவ்வாறாயினும், கீழ் நியாய விலைத் தெரிவின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட சகல நியாய விலை மாற்றங்களும் இலாப நட்டத்தில் அடையாளப்படுத்தப்படும், கீழ் பெறுமதி மாற்றங்கள் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றது.

- பொறுப்பினது கடன் இடரிலுள்ள மாற்றங்களுக்குக் காரணமான நியாய விலை மாற்றத் தொகையானது ஏனைய விரிவான வருமானத்தில் சமர்ப்பிக்கப்படும்: அத்துடன்

- நியாய விலையில் எஞ்சும் மாற்றத் தொகையானது இலாபம் அல்லது நட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதிச் சொத்துக்களினது சேதங்கள்

SLFRS 9 ஆனது LKAS 39 இலுள்ள 'ஏற்பட்ட நட்ட' மாதிரியினை 'எதிர்பார்த்த கடன் நட்ட' மாதிரியினால் பதிலீடு செய்கின்றது. புதிய சேத மாதிரியானது FVTPL இல் அளவிடப்படாத நிதிச் சொத்துக்களுக்குப் பிரயோகிக்கப்படுவதுடன் சில கடன் பொறுப்புக்களுக்கும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்களுக்கும் பிரயோகிக்கப்படும். ஆனால், அவை பங்குமூலதன முதலீடுகளுக்குப் பிரயோகிக்கப்படமாட்டாது.

SLFRS 9 கீழ், கடன் நட்டங்கள் LKAS 39 இன் கீழானதை விட முன்கூட்டி அடையாளப்படுத்தப்படும்.

நிலை மாறுதல்

SLFRS 9 இனை ஏற்றுக் கொண்டதன் விளைவாக கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் பின்வருபவை தவிர, கடந்தகாலப் பயன்கொண்டு பிரயோகிக்கப்படுகின்றது:

- ஒப்பீட்டு காலப்பகுதிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

SLFRS 9 இனைப் பின்பற்றுவதன் மூலமாக நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் தொகைகளில் ஏற்படும் வேறுபாடுகளானவை 2018 சனவரி 1ஆம் திகதி நிறுத்தி வைத்த வருவாய்களாகவும் ஒதுக்கங்களாகவும் அடையாளப்படுத்தப்படும். அதன்படி, 2017 இற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்கள் SLFRS 9 இனது தேவைப்பாடுகளைப் பிரதிபலிக்காமையால் அவற்றை 2018 ஆம் ஆண்டின் SLFRS 9 இற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுடன் ஒப்பிட முடியாதுள்ளது.

- முதலாவது பயன்படுத்திய திகதியிலிருந்த உண்மைகளினதும் நிலவரங்களினதும் அடிப்படையில் பின்வரும் மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

நிதிச் சொத்தொன்றினை வைத்திருப்பதில் வியாபார மாதிரியைத் தீர்மானித்தல்

i. FVTPL இல் கணிப்பிடப்பட்ட சில நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பதவிகளைப் பெயர் குறிப்பிடுதலும் முன்னைய பதவிகளை மீளப்பெறுதலும்
ii. FVOCI இலுள்ளவாறு பங்குமூலதனக் கருவிகளில் சில முதலீடுகளை நியமித்தலை வியாபாரத்திற்காக வைத்திருத்தல்
iii. FVTPL இல் நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்களுக்காக, நிதிப்பொறுப்புக்களின் ஏனைய விரிவான வருமானத்தின் கடன் இடரின் பாதிப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் கணக்கீட்டுப் பொருத்தமின்மையை உருவாக்கும் அல்லது விரிவாக்கும்.

- SLFRS 9 ஆரம்பப் பிரயோகத் திகதியில் கடன் பிணையத்திற்கு குறைந்த கடன் இடர் காணப்பட்டால், வங்கியானது சொத்தின் கடன் இடர் அதன் ஆரம்ப அடையாளப்படுத்தல் முதல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருக்காது.

3.2.3 ஆதனமும் பொறி இயந்திரமும்

இவை சொத்துக்களை அவற்றின் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான ஏனைய செலவுகளுடன் கிரயத்தைச் சேர்த்துப் பதிவு செய்யப்படுவதுடன் இலங்கைக் கணக்கீட்டு நியம இல.16 இன் பிரகாரம் 3 வருடங்களுக்கு மேற்படாத அண்மைய மதிப்பீட்டு அறிக்கையைப் பயன்படுத்தி நியாயவிலைகளின் விபரங்கள் தனியாக வெளிப்படுத்தப்படும்.

3.2.3.1 அடையாளப்படுத்தலின் அடிப்படை

வங்கிக்கு சொத்துடனான பொருளாதார நன்மை எதிர்காலத்தில் கிடைக்கும் சாத்தியமிருப்பின் ஆதனமும்,பொறி இயந்திரமும் அடையாளப்படுத்தப்பட்டு சொத்தினது கிரயம் உண்மையாக அளவிடப்பட முடியும்.

3.2.3.2 அளவீட்டின் அடிப்படை

ஆதனமும்,பொறி இயந்திரமும் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானத்தைக் கழிக்க வரும் தொகையில் காட்டப்படும். அது கீழே குறிப்பிட்ட அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படும்.

3.2.3.3 தேய்மானக் கொள்கை

பல்வேறுபட்ட சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் தேய்மானத்திற்கு ஏற்பாடு செய்யப்படும்.

சொத்துக்களின் வகை	% ஆண்டொன்றிற்கு
கட்டடங்கள்	6 2/3
அலுவலக உபகரணம்	12.50
தளபாடங்களும் பொருத்திகளும்	10.00
மோட்டார் வாகனங்களும் சைக்கிளும்	20.00
பொறியும் இயந்திரமும்	25.00
கருவிகளும் உபகரணங்களும்	12.50
கணணி உபகரணங்கள்	12.50

பயன்படுத்தப்பட்ட ஆண்டிற்கு மொத்த வருடாந்த தேய்மான ஏற்பாடு கெள்ளப்படுவதுடன் அகற்றப்படும் ஆண்டிற்குத் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை. பல்வேறு வகையிலான சொத்துக்களின் பயன்படுத்திய ஆண்டிலிருந்து தேய்மானத்தைக் கணிப்பீடு செய்வதிலுள்ள நடைமுறைச் சிக்கலைக் கருத்திற்கொண்டு வங்கியானது LKAS 16இன் 55 பிரிவிலிருந்து விலகிச் சென்றுள்ளது.

கட்புலனாகாச் சொத்துக்கள்

வங்கியினது கட்புலனாகாச் சொத்துக்களில் கொள்வனவு செய்யப்பட்ட கணணி மென்பொருளின் பெறுமதி உள்ளடங்குகின்றது.

அடையாளப்படுத்தலின் அடிப்படை

கட்புலனாகாச் சொத்தொன்று அதன் கிரயத்தை உண்மையாகவே அளவீடு செய்ய முடியுமான பட்சத்தில் மற்றும் வங்கிக்கு அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நன்மை கிடைக்கும் போது மாத்திரமே அடையாளங் காணப்படும்.

அளவீட்டின் அடிப்படை

தனியாகக் கையகப்படுத்தப்பட்ட கட்புலனாகாச் சொத்துக்கள் கிரயத்தில் ஆரம்ப அடையாளங்காணலில் அளவிடப்படும். ஆரம்ப அடையாளங் காணலைத் தொடர்ந்து,

கணக்கீட்டுக் கொள்கைகள்

கட்புலனாகாச் சொத்துக்கள் கிரயத்திலிலிருந்து எந்தவொரு திரண்ட கடன்தீர நிதி மற்றும் எந்தவொரு திரண்ட சேத நட்டங்களைக் கழிக்க வரும் தொகையாகும்.

பயனுள்ள பொருளாதார ஆயுட்காலமும் கடன்தீர் நிதியும்

கட்புலனாகாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது ஒன்றில் வரையறுக்கப்பட்டதாக அல்லது வரையறுக்கப்படாததாக மதிப்பிடப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட கட்புலனாகாச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்திற்கு கடன்தீர்ப்பனவு செய்யப்படும். பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தைக் கொண்ட கட்புலனாகாச் சொத:துக்கள் கடன்தீர்ப்பனவுக் காலம் மற்றும் கடன்தீர்ப்பனவு முறையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலுமாவது பகுப்பாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் அல்லது சொத்துடன் உட்பொதிக்கப்பட்டுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாணி என்பன கடன்தீர் காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் பொருத்தமானவாறு கணக்குகளில் காட்டப்படுவதுடன் அவை கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாகக் கருதப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட கட்புலனாகாச் சொத்துக்கள் மீதான கடன்தீர் நிதிச் செலவானது வருமானக் கூற்றில் கட்புலனாகாச் சொத்துக்களின் செயற்பாட்டுடன் செலவு வகுதியில் காட்டப்படும்.

மீள்- அங்கீகாரம்

கட்புலனாகாச் சொத்துக்கள் அகற்றப்படுகையில் அல்லது அதன் பாவனையில் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத சந்தரப்பத்தில் மீள் அங்கீகரிக்கப்படும். சொத்துக்களை மீள அங்கீகரிப்பதால் எழும் ஏதேனும் வருவாய் அல்லது நட்டமானது (தேறிய அகற்றல் நடவடிக்கை மற்றும் சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகை ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடாகக் கணிப்பிடப்படும்) 'ஏனைய செயற்பாட்டு வருமானமாக' சொத்து மீளஅங்கீகரிக்கப்படும் வருடத்தின் வருமானக் கூற்றில் மீளஅங்கீகரிக்கப்படும்.

வங்கியானது வரையறுக்கப்படாத பயனுள்ள ஆயுட்காலத்தைக் கொண்ட கட்புனாகாச் சொத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

சொத்தின் வகை	% ஆண்டொன்றிற்கு
கணணி மென்பொருள்- வெளிநாட்டு	25.00
கணணி மென்பொருள்- உள்நாட்டு	25.00
பிரதானச் செயலி மென்பொருள்	10.00

3.2.4 முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் தற்போதைய சந்தை விலையில பதியப்படுவதுடன் கொண்டு செல்லப்படும விலை மற்றும் சந்தை விலைகளுக்கிடையிலான வித்தியாசமானது வருமானக் கூற்றில் ஏனைய வருமானமாக சமர்ப்பிக்கப்பட்டு அது நிதி நிலைமையின் கீழ் வகைப்படுத்தப்படும்.

3.3 நிதிச் சொத்துக்கள்

3.3.1 அங்கீகாரமும் அளவீடும்

நிதிச் சொத்தானது ஆரம்பத்தில் நியாய விலையில் அளவிடப்பட்டதுடன், நியாய விலையைக் கொண்டிராத விடயங்கள் இலாபம் அல்லது நட்டம், கையகப்படுத்தலுடன் நேரடியாகத் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் கிரயத்துடன் அளவிடப்படும்.

அவை நியாய விலையில் தோன்றிய திகதியில் கடன்களும் முற்பணங்களும் அங்கீகரிக்கப்படும். வழமையாக கடன் தொகை வழங்கப்படுவதுடன் அதைத் தொடர்ந்த அளவீடானது கடன்தீர் நிதிக் கிரயத்தில் அளவிடப்படும்.

நிதிச் சொத்தினது கடன்தீர் நிதிக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து பிரதான மீள்கொடுப்பனவுகளைக் கழித்து அதனுடன் ஆரம் அங்கீகாரத் தொகை மற்றும் முதிர்ச்சித் தொகை, சேதத்திற்கான ஏதேனுமொரு கழிப்பனவு என்பவற்றின் வினைத்திறனான வட்டி முறையைப் பயன்படுத்திய திரண்ட கடன்தீர் நிதியைச் சேர்த்து அளவிடப்படும்.

சகல நிதிச் சொத்துக்களும் ஒப்பந்தத்தினது உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கான தரப்பொன்றாக வங்கி வரும் தேதியிலிருந்தான வியாபாரத் திகதிக்கு ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.

2018 சனவரி 1 ஆம் திகதிக்கு முன்பும் 2018 சனவரி 1 ஆம் திகதிக்குப் பின்னருமான பிரயோகிக்கப்பட்ட அளவீட்டு அடிப்படை 3.3.3 இல் தரப்பட்டுள்ளது.

3.3.2 வகைப்படுத்தல்

3.3.2.1 2018 சனவரி 01 இற்கு முன்னர்

பிரயோகிக்கப்பட்ட கொள்கை

ஆரம்பத்தில், நிதிச்சொத்தானது நியாய விலையில் மதிப்பிடப்பட்டதுடன் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டது:

- **கடன்களும் பெறவேண்டியவைகளும்** – கடன்தீர் நிதிக் கிரயத்தில்.
- **முதிர்ச்சிக்காக வைத்திருத்தல்** – வங்கி சாதகமான எண்ணத்துடன் முதிர்ச்சியை வைத்திருக்கும் நிலையான அல்லது நிர்ணயிக்கக் கூடிய கொடுப்பனவுகளையும் நிலையான முதிர்ச்சியையும் (உதாரணமாக பிணையங்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கடன் உபகரணங்கள்) கொண்ட வழித்தோன்றாத நிதிச் சொத்துக்கள் கடன்தீர் நிதி அடிப்படையில் அளவிடப்படும்.
- **இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாய விலை** –வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் நியாய விலையில் அளவிடப்படுவதுடன் நியாய விலையின் மாற்றங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.
- **நியாய விலையில் நியமித்தல்** – இது கணக்கீட்டுப் பொருந்தாமைகளைக் கையாளுவதற்கானதொரு மாற்றுவழியாகும். ஆனால், வங்கியானது அந்த மாற்றுவழியைப் பயன்படுத்தவதில்லை.
- **வழித்தோன்றல் சொத்துக்கள்** – இவை கட்டாயமாக நியாய விலையில் அளவிடப்படுவதுடன் நியாய விலை மாற்றங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.
- **விற்பனைக்காக உள்ளவை** – இது நியாய விலையில் மதிப்பிடப்பட வேண்டியதுடன் நியாய விலை மாற்றங்களுக்கான எஞ்சிய வகைப்படுத்தல் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படும்.

3.3.2.2 2018 சனவரி 1 இற்குப் பின்னர் பொருந்தும் கொள்கை

ஆரம்ப அங்கீகரித்தலில், வங்கியானது பின்வரும் வகுதிகளுக்கு நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தும்:

- கடன்தீர் நிதிக் கிரயத்தில் அளவிடப்படுபவை,
- ஏனைய விரிவான வருமானம் மூலமான நியாய விலை (FVOCI) மற்றும்
- இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாய விலை (FVTPL)

தொடர்ந்தும் வரும் நிதிச் சொத்துக்களுக்கான அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

3.3.2.1 கடன்தீர் நிதிக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்

பின்வரும் நிலைமைகளைப் பூர்த்தி செய்து ஆனால் FVTPL இல் நியமிக்கப்படாவிட்டால் நிதிச் சொத்தானது கடன்தீர் நிதிக் கிரயத்தில் அளவிடப்படும்:

- சொத்தினை நிறுத்தி வைத்திருந்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் நோக்கம் இருக்கும் போது, சொத்தானது வியாபார மாதிரியினுள் வைக்கப்படும் (குறிப்பு 5.3.2.3.இல் விளக்கப்பட்டுள்ளது): மற்றும்
- நிதிச் சொத்துடன் தொடர்புடைய நிலைமைக் கொடுப்பனவுகளாக மற்றும் தலைமைக் கொடுப்பனவுகளுக்கான நிலுவை வட்டியாகவும் மாத்திரமுள்ள கொடுப்பனவுகள் குறித்த திகதிகளுக்கான காசுப் பாய்ச்சல்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன.

3.3.2.2.2 ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாய விலையில் நிதிச் சொத்துக்கள்

பின்வரும் நிலைமைகளைப் பூர்த்தி செய்து ஆனால் FVTPL இல் நியமிக்கப்படாவிட்டால் மாத்திரம் கடன் உபகரணமானது FVOCI இல் அளவிடப்படும்:

- சொத்தினை நிறுத்தி வைத்திருந்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்யும் நோக்கத்திலிருக்கும் வியாபார மாதிரியின் நோக்கம் அடையப்படும்: அத்துடன்
- நிதிச் சொத்துடன் தொடர்புடைய நிலைமைக் கொடுப்பனவுகளாக மற்றும் தலைமைக் கொடுப்பனவுகளுக்கான நிலுவை வட்டியாகவும் மாத்திரமுள்ள கொடுப்பனவுகள் குறித்த திகதிகளுக்கான காசுப் பாய்ச்சல்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன.

வியாபாரத்திற்கானதல்லாத பங்கு முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின் போது, வங்கியானது ஏனைய விரிவான வருமானங்களிலுள்ள நியாய விலையின் அடுத்தடுத்த மாற்றங்களைச் சமர்ப்பிப்பதற்கு வசூலிக்க முடியாதபடி தேர்ந்தெடுக்கும். இத்தேர்ந்தெடுத்தலானது முதலீட்டிலிருந்து முதலீட என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

3.3.2.2.3 இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாய விலையில் நிதிச் சொத்துக்கள்

கடன்தீர் நிதிக் கிரயத்தில் வகைப்படுத்தப்படாத நிதிச் சொத்துக்கள் அல்லது FVOCI ஆகியன FVTPL இல் அளவிடப்பட்டதாகக் கணிப்பிடப்படும்.

3.3.2.2.3.1 பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலமாக கட்டாயமாக நியாய விலையில் மதிக்கப்படும்

- வியாபாரத்திற்காக வைத்திருக்கும் போதுஇ அல்லது
- அல்லது ஒரு நியாய விலை அடிப்படையில் உள்ளகரீதியாக முகாமை செய்யப்பட்டு, அறிக்கையிடப்படும். அல்லது
- நியமித்தலை இல்லாதொழித்து வேறுவிதத்தில் எழும் கணக்கீட்டுப் பொருந்தாமையைக் குறிப்பிடத்தக்களவில் குறைத்து, அல்லது
- ஒப்பந்தத்தின் கீழ் அவசியமான காசுப் பாய்ச்சலை குறிப்பிடத்தளவு மாற்றியமைக்கும் உட்பொதிக்கப்பட்ட வழித்தோன்றலைக் கொண்டுள்ளது.

3.3.2.3.2 இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாய விலையில் நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்

அதற்கு மேலதிகமாக, ஆரம்ப அங்கீகாரத்தில், வங்கியானது மீளவகூலிக்க முடியாதளவு நிதிச் சொத்தொன்றினை நியமிக்க முடியும் அல்லது கடன்தீர்நிதிக் கிரயத்தில் அல்லது FVOCI இல் அல்லது FVTPL இல் அளவிடுவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும். அவ்வாறு செய்வதனால், அல்லது வேறுவிதமாக எழக்கூடிய கணக்கீட்டுப் பொருந்தாமையை கணிசமானளவு குறைக்க முடியும். வங்கியானது அறிக்கையிடும் திகதிக்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாய விலையில் ஆரம்ப அங்கீகாரத்தின்மீது எந்தவொரு நிதிச் சொத்தையும் நியமித்திருக்கவில்லை.

3.3.2.3 வியாபார மாதிரி மதிப்பீடு

சொத்தொன்றினைப் முதலீட்டு வகை மட்டத்தில் வைத்திருக்கும் போது வங்கியானது ஒரு வியாபார மாதிரி நோக்கத்திற்கான மதிப்பீடொன்றினை மேற்கொள்ளும். ஏனெனில், இது வியாபாரமானது முகாமை செய்யப்படும் சிறந்த வழியைப் பிரதிபலிப்பதுடன் முகாமைத்துவத்திற்குத் தகவல்களை வழங்கும்

- பரப்பெல்லைக்கு கூறப்பட்ட கொள்கைகளும் நோக்கங்களும் அக்கொள்கைகளினது அமுல்படுத்தலும் நடைமுறையிலுள்ளன. விசேடமாக, முகாமைத்துவ தந்திரோபாயமானது உழைக்கும் ஒப்பந்த வட்டி வருமானம், விசேடமான வட்டி வீத விபரத்தைப் பராமரித்தல், நிதிச் சொத்துக்களின் காலப்பகுதியை அச்சொத்திற்கு நிதியிடும் நிதிப் பொறுப்பினது காலப்பகுதியுடன் இணைத்து சொத்துக்களின் விற்பனை மூலமாக காசுப் பாய்ச்சல்களை அடையாளங் காணல்:
- செயலாற்றல் பரப்பெல்லையானது எவ்வாறு மதிப்பிடப்பட்டு வங்கியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது என்பது:
- வியாபார மாதிரியின் செயலாற்றலைப் பாதிக்கும் இடர்கள் (மற்றும் வியாபார மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள்) மற்றும் அத்தகைய இடர்கள் எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றன என்பது:
- வியாபாரத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு நட்டஈடு வழங்கப்படுகின்றன என்பது: உதாரணமாக. நட்டஈடானது சொத்துக்களின் நியாய விலையினை அடிப்படையாகக் கொண்டதா அல்லது: மற்றும்
- முன்னைய காலப்பகுதியிலான அதிர்வெண், அளவு மற்றும் விற்பனை நேரம், அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை மீதான அதன் எதிர்பார்ப்பு. எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவல்கள் தனியாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. மாறாக, நிதிச் சொத்துக்களை முகாமை செய்தல் மற்றும் காசுப் பாய்ச்சலை அடையாளங் காணுதல் என்பவற்றில் வங்கியின் கூறப்பட்ட நோக்கத்தை எவ்வாறு அடைந்துள்ளது என்பதை மதிப்பீடும் பாகமொன்றாகும்.

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களுக்கான மதிப்பீடுகள் தனித்து பிரதான கொடுப்பனவுகளாகவும் வட்டியாகவும் உள்ளன.

இம்மதிப்பீட்டின் நோக்கத்தில், 'பிரதானமானது' என்பது நிதிச் சொத்தினது ஆரம்ப அங்கீகாரத்தின்போது அதன் நியாய விலையைக் குறிக்கின்றது. □வட்டி' என்பது பணத்தின் நேரப் பெறுமதி மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான நிலுவையாகவுள்ள பிரதான தொகையுடன் சம்பந்தப்பட்ட கடன் அபாயம் மற்றும் ஏனைய கடன் அபாயங்கள் மற்றும் இலாப எல்லை போன்றவற்றிற்கானதாகும்.

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களானவை தனியாக பிரதானமானவற்றிற்கான கொடுப்பனவு மற்றும் வட்டிக்கான என்பதை மதிப்பீடுகையில் வங்கி கருவியினது ஒப்பந்த விதிகளையும் கருத்திற் கொள்கின்றது. இதில் நேரத்தை மாற்றக் கூடிய ஒப்பந்த நிபந்தனையொன்றை நிதிச் சொத்து கொண்டுள்ளதா அல்லது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் இந்நிபந்தனையைப் பூர்த்தி செய்கின்றயவில்லை என்பதையும் இது உள்ளடக்குகின்றது.

மதிப்பீட்டினை மேற்கொள்வதில் வங்கியானது,

- காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் அளவுகளை மாற்றும் தற்செயலான

கணக்கீட்டுக் கொள்கைகள்

நிகழ்வுகள் :
- அந்நிய அம்சங்கள்
- முற்பண மற்றும் நீடிப்பு நிபந்தனைகள்
- குறிடப்பட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சலுக்கான வங்கியின் கோரிக்கை வரையறுக்கும் நிபந்தனை:மற்றும்
- பணத்தின் நேரமதிப்பைக் கருத்திற்கொண்டு மாற்றும் அம்சங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும்.

வங்கியானது காலரீதியான மீள்வகுக்கப்பட்ட திகதிகளில் வட்டிவீதத்தை மாற்றுவதற்கு உத்தேசித்துள்ள நீண்ட கால நிலையான வீத வட்டியினை முதலீட்டு வகைகளை வங்கி வைத்துள்ளது. இந்த மீள்வகுத்தல் உரிமைகள் திருத்தியமைக்கும் நேரத்தின் போதான சந்தை விலைக்கு வரையறுக்கப்பட்டதாகவிருக்கும். கடன்பட்டோர திருத்தியமைக்கப்பட்ட வட்டிவீதத்தை ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது கடனை தண்டப் பணமின்றி மீட்டுக் கொள்வதற்கோ வழிவகுக்கும் தெரிவு வங்கிக்குள்ளது. வங்கியானது இக்கடன்களின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை வெறுமனே பிதான கொடுப்பனவாகவும் வட்டியாகவும் நிர்ணயித்துள்ளது. ஏனெனில், தெரிவானது பணத்தின் நேரப்பெறுமதி, கடன்அபாயம், ஏனைய அடிப்படை கடன் அபாயங்கள், நிலுவையாகவுள்ள தொகையுடன் தொடர்புடைய கிரயங்கள் எனும் வகைகளில் கருத்திற்கொள்கின்றது.

3.3.3 மீள்வகைப்படுத்தல்

3.3.3.1 2018 சனவரி 1 இற்கு முன்னர் பொருந்தும் கொள்கை
